அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் மே 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# வீட்டுக் கூரையில் மின்சக்தி

ஒன்ராரியோவின் அரசு ஒரு தனியார் நிறுவனத்துக்கு சூரிய ஒளியில் மின்கலங்களை நிறுவி அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஆலையை நிறுவ ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இந்த ஆலை நிறுவப்பட்டு 2010 இல் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும். நல்ல சூரிய வெளிச்சம் இருக்கும் நாளில் 15,000 விடுகளுக்கு மின்சக்தியை இதன்மூலம் வழங்க முடியும்.

இதேபோன்ற ஒரு மின்நிலையம் ஜெர்மனியில் நடைமுறையில் இருக்கிறது. ஜேர்மனியே அமெரிக்க துணைக்கண்டத்தைக் காட்டிலும் சூரிய ஒளி மிகன்சக்தியை ஊக்குவிக்கும் நாடாகும்.அணுமின் நிலை யத்திற்கு பதிலாகவும், எதிர்காலத்தின் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மாற்றாகவும் இந்த சூரிய ஒளி எரிசக்தி அமைகின்றது.

ஒன்ராரயோவின் தெற்குப்பகுதியல் இருக் கும் சார்னியா என்ற இடத்தில் உள்ள பண்ணையில் இது உருவாக்கப்படும். இந்த இடம் 420 ரக்பி விளையாட்டு மைதானங் களின் அளவைக் கொண்டது. 40 கிலோ வாட் அளவுமின் சக்தி தாயாரிப்பு நிலைய மாக இது அமையும்.



கனடாவில் எரிபொருள் விலை வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் பெருமளவு பாதிப்படைந்திருப்போர் வாகன உரிமையாளர்கள். யோர்க் பகுதியில் எரிபொருள் நிரப்பும் மிசசாகாவைச் சேர்ந்த குணா. செல்லையா

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஒரு நிறு வனத்துக்கே இந்த ஒப்பந்தம் வழங்கப்பட் டுள்ளது.

ஆனால் இந்த மின்சாரத்தின் விலை ஒப் பீட்டளவில் அதிகம் என்று ஒருதரப்பில் சொல்லப்படுகிறது. அணு மின்நிலையம்7 சதத்துக்கு தரும் மின்சக்தியை காற்றாலை மின்நிலையம் 12 சதத்துக்கு தரும் அதே வேளை சூரிய ஒளி மின்நிலையம் 42 சதத் துக்கு தருகிறது. ஆனால் ஒருகாலத்தில் கணியின் விலை உயர்வாக இருந்ததைப் போன்றது இது என்றும் காலப்போக்கில் மிகக் குறைவாக மாறிவிடும் என்றும் சொல் லப்படுகிறது.

சூரிய ஒளி மின்சக்தி தயாரிப்பு அதை நிறு வுவதற்கு மட்டும் அதிக செலவாகும். ஆனால் பழுதடையாது, சுற்றுச்சூழலுக்கு உவப்பானது மற்றும் தீங்கற்றது போன்ற பல நன்மைகள் அதில் உண்டு. நீண்ட நாட்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி இருக்கும் எளிமையான கருவிகளால் சூரிய ஒளி மின்சக்தி பெறப்படுகின்றது.

இதற்கிடையில் அமெரிக்காவின் ஓர் கட்டு மான நிறுவனத்தினால் தேவையான எரிசக்தியை தானே உற்பத்தி செய்து கொள்ளும் வகையிலான மாதிரி வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன. அவை கூரைக-ளில் சூரியனின் சக்தியை மின்சக்தியாக மாற்றும் மின்கலங்கள் பொருத்தப்பட்ட வீடுகளாக இருக்கின்றன.

4000 சதுர அடி வீடுகள் 10 லட்சம் டொலர் கள் விலையில் அந்நிறுவனத்தினால் கட்டப் பட்டு வருகின்றன. ஆனால் ஆண்டொன் றுக்கு ஒரு சராசரி வீடு மிகக்குறைந்தது 2500 டொலர்கள் வரை மின்சக்திக்கு செலவாக்குகின்றது. தனியாக மின்சக்தியை சூரி யஒளியிலிருந்து தயாரிக்கும் கருவிகளை வீட்டுக்கூரையில் பொருத்திக் கொள்ள 15 முதல் 75 ஆயிரம் வரை வீட்டின் தேவை மற்றும் அளவைப் பொறுத்து ஆகின்றதாம்.

Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
Gary Anandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Property Mortgage Canada Inc.

Call the awarad winning team for all your real estate needs...
HomeLife Future Realty Inc.
Independently owned and opereted
416.264.0101
Siva Shanmuganathan
Sales Representative
Direct: 416.545.7482
Joy H. Selvanayagam
Sales Representative
Direct: 416.358.6928
This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker

PMCI Property Mortgage Canada Inc.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க,
வீட்டிற்கான பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட (Appraisal)
தயங்காமல் உடனே அழையுங்கள்
S.K. Bales CRA, MVA, CRES
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21 Affiliate Realty Inc.


Whatever your dream is ...
Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.
• Up to 100% financing on purchase
• Discounted interest rates O.A.C
• Mtg. computer analysis - amortization schedules
• Second mortgages guaranteed for very low interest rates
• Debt Consolidation to 100% of value
• Mortgage investment opportunities
• Bank refusals restructured
• Real estate project (acquisition + development + construction)
• Residential, Commercial & Industrial
LOOKING AFTER YOUR BEST INTEREST!
SHANJITH (SHAWN) SATKUNANANTHAN
Senior Mortgage Consultant (AMP)
RAJANI SHANJITH
Mortgage Consultant
CENTUM Advance Realty Inc
(647)998.5450 / (416).290.1200
80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

# பிசத்தப் போவது யார்?



த.சிவதாசன்

மூன்றாவது தடவையாக விடுதலைப்புலிகளின் வான்படையினர் சிறீலங்காவின் இராணுவ இலக்குகளின்மீது குண்டுகளைப் பொழிந்துவிட்டு பாதுகாப்பாக தாயகம் திரும்பியிருக்கின்றனர்.

முதலாவது தடவையாக வான் தாக்குதல் நடத்தப்பட்டபோது அதன் எதிர்வினைகள் பல முகாம்களிலிருந்தும் பல வடிவங்களிலும் வந்திருந்தன. புலிகளை விமர்சிப்பவர்களால் அது பூச்சாண்டியெனவும் ஆதரவாளர்களால் அது போராட்டத்தின் புதிய பரிமாணம் எனவும் கருத்துரைக்கப்பட்டது.

மூன்று தடவைகள் அதுவும் வெற்றிகரமாகப் புலிகள் எதிரியின் அதிபாதுகாப்புக் களங்களுக்கு இலகுவாகச் சென்று காரியங்களைக் கச்சிதமாக முடித்துவிட்டுத் திரும்பியிருப்பது நிச்சயம் பூச்சாண்டி ரகத்தில் பொருந்தாது.

கட்டுநாயக்கா வான்படைத் தளம், பலாலி கூட்டுப்படைத் தளம், கொலன்னாவ எரிபொருட் களஞ்சியம் என்று எல்லாமே ஒரு வகையில் இராணுவ இலக்குகள்தான். இந்த மூன்று தாக்குதல்களின்போதும் பொது மக்களின் உயிர்களோ உடமைகளோ தாக்கப்படவில்லை. இதிலிருந்து பல விடயங்கள் உய்த்துணரப்படலாம்.

முதலாவதாக, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் சொல்வதுபோல புலிகளின் போராட்டத்தில் இது ஒரு நிச்சயமான பரிணாம வளர்ச்சியேதான். பேச்சுவார்த்தை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் புலிகள் சர்வதேசங்களின் தரங்களுக்கு அல்லது அவற்றின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவைக்குள் தள்ளப்பட்டனர்.

சிறார்களைப் படையில் சேர்த்தல் மற்றும் மனித உரிமை சார்ந்த விடயங்களில் புலிகளின் மீது சர்வதேசங்கள் முன்வைத்த அழுத்தங்களைப் புலிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு தங்கள் களநிலைவரங்களுக்கேற்ப அமைப்பின் நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினர். போராட்ட இயக்கமாக இருந்தபோது எந்த ஒரு வெளிநாட்டினதும் அறிவுறுத்தலை அவர்கள் ஏற்றுக் கொணடதில்லை. ஆனால் பேச்சுவார்த்தை ஒப்பந்தம் செய்துகொண்டதற்குப் பின்னர் சர்வதேசங்களினதும் அவைசார்ந்த அமைப்புகக்களினதும் பரிந்துரைகளை அவர்கள் பரிசீலனை செய்ததன் காரணம் தாம் இப்போது போராட்ட அமைப்பில்லை மாறாக தாம் ஒரு நாட்டை ஆள்கிறோம் என்ற நினைப்பில்தான். சர்வதேசங்கள் சில பரிந்துரைகளை முன்வைக்கும்போது அதுவும் ஒருவகையில் ஒரு நாட்டிற்கு விடப்படுகின்ற வேண்டுகோள்களெனவே பார்க்கப்பட்டது.

எனவே, சர்வதேசங்களின் வேண்டுகோள்களோ, கட்டளைகளோ, பரிந்துரைகளோ எதுவாகவிருந்தாலும் அதை முன்வைப்பதும் அதைப் பரிசீலிப்பதும், நடைமுறைப்படுத்துவதும்கூட ஒருவகையில் தேசமொன்றைச் சர்வதேசங்கள் அங்கீகரிப்பதற்கான நடைமுறைகளே. அந்த வகையில் புலிகள் நிச்சயம் மாறியிருக்கிறார்கள். அது ஒரு படிமுறை வளர்ச்சி.

இரண்டாவதாக, புலிகளின் இவ்வான் தாக்குதல்கள் அவர்களது பலத்தை எடுத்துக் காட்டியது மட்டுமல்ல இலங்கை ஆட்சியாளரினதும், இராணுவத்தினதும் பலவீனங்களை மிகவும் துலாம்பரமாக தென்னிலங்கை மக்களுக்கும் சர்வதேசங்களுக்கும் எடுத்துக் காட்டியிருக்கிறது. 13,000 கோடி ரூபாக்களை ஒதுக்கி நாட்டின் வரவு செலவில் பெரும்பகுதியைப் போருக்காகச் செலவு செய்து கொண்டு மேலும் மேலும் அபிவிருத்திக்கென உலக நாடுகளிடம் கையேந்திப் பெறும் பணத்தை வாரியிறைத்து உலகின் அதி பெரிய அமைச்சரவையைக் கொண்ட ஆட்சியினாலேயே சிறிய ரக விமானங்களாலான விமானப் படையைக் கண்டுகொள்ள முடியாமற் போனது, அதுவும் மூன்று தடவைகள், வெட்கப்படும் விடயம். சர்வதேசங்களின் முற்றங்களில் இலங்கை ஆட்சியாளர் அவமானப்பட்டுப் போயிருக்கின்றனர்.



மூன்றாவதாக, சமீபகாலங்களில் சிறீலங்காவின் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ச அவர்கள் தன்னைச்சுற்றி உருவாக்கிய 'கைமுனு' பிம்பம், தானே சிங்கள இனத்தைக் காப்பாற்றப் பிறந்த ஒரே தலைவர் என்று தன்னைச்சுற்றி அவர் உருவாக்கிய செயற்கை ஒளிவட்டம் எல்லாமே கண் முன்னால் தகர்க்கப்படும் நிலைமை. தனது பரிவாரங்களின் பரப்புரைகளில் தானே மயங்கி புதுவருடத்தில் கிழக்கையும் அதன் பிறகு மூன்று வருடங்களுக்குள் வடக்கையும் பிடித்து புலிகளைக் கொன்றொழித்து விடுவதாக அவர் செய்த சவால்கள் எதுவுமே நிறைவேறாமற்போகும் நிலைமை. தென்னிலங்கை மக்களால் விரைவிலேயே தூக்கியெறியப்படும் அபாயம் என்று பலவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய பரிதாபம் மஹிந்தவுக்கு.

இவற்றுக்கு அப்பால் பல இராணுவ மேதைகளே ஆச்சரியப்படுமளவுக்கு உலக நாடுகளால் அதி சிறந்த திட்டமிடலாளர் (the best strategist) என்று வர்ணிக்கப்படும் புலிகளின் தலைவர் பேச்சிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது செயலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தின் வடிவமே புலிகளின் இன்றய விமானப்படை. மாறாக தென்னிலங்கை அரசியல்வாதிகளுஞ்சரி இராணுவ அதிகாரிகளுஞ்சரி செயலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைவிட பேச்சுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தின் வடிவமே பலம் குன்றிப் போயிருக்கும் அவர்களது மொத்த இராணுவம்.

புலிகள் சமீப காலங்களில் பல களங்களிலிருந்து பின்வாங்கியபோது அதை அவர்களது பலவீனமாக அரசும் அதன் சாதனங்களும் நம்பித் தென்னிலங்கை மக்களைத் தமது பரப்புரைகளால் வென்றெடுத்திருந்தனர். அதே வேளை புலிகளும் தம்மிடமிருக்கும் நவீன ஆயுதங்கள் எதையும் பாவிக்காது பலவிடங்களில் தாம் பலவீனப்பட்டுவிட்டோம் என்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டைத் தமிழ் மக்களிடமும் பரவவிட்டிருந்தார்கள். 'ஏன் இன்னும் அடி வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். திருப்பித் தாக்குவதற்கு முடியவில்லைப் போலிருக்கிறது' என்று மக்கள் நம்புமளவுக்கு காரியங்கள் நடைபெற்றன. இவையெல்லாமே வியூக மாற்றத்தின் போதான நடவடிக்கைகள் என்பதை இப்போது புலிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

புலிகளின் முதலாவது விமானப்படையின் தாக்குதலின் பின்னர் நாடு தழுவிய ரீதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என்று அரசு அறிவித்தது. ஆனாலும் அதன் பீன்னரே பலாலி கூட்டுப்படைத் தலைமையகமும், இப்போது கொழும்பு தலைநகர் மற்றும் சுற்றுப்புறங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பு எந்த வகையிலும் அதிகரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எந்தவிதமான ரேடார்களோ, விமான எதிர்ப்புச் சாதனங்களோ வான் தாக்குதலின்போது வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படவில்லை. நகரம் இரண்டு தடவைகள் விமானத் தாக்குதலைச் சந்தித்திருந்தும் இரண்டு தடவைகளிலும் மின்சாரம் தடைசெய்யப்பட்டிருந்தும் பிரத்தியேக ஜெனறேட்டர்கள் தாராளமாகப் பாவனையிலிருந்தன என்கிறார்கள். மேற்கு நாடுகளிற் கையாளப்படும் போர்க்கால ட்றில்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருப்பின் இந்த மாதிரியான விடயங்கள் அறியப்பட்டு தவிர்க்கப்பட்டிருக்கும். அது நடைபெறவில்லை.

மார்ச்26ம் திகதி கட்டுநாயக்கா வான்படைத் தளம் தாக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கும் படி அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் வலியுறுத்தியிருந்தன. நவீன ஆயுதங்களை மிகவும் மலிவாகத் (இலவசமாக?) தருவதற்கு சீனாவும் பாகிஸ்தானும் முண்டியடித்துக் கொண்டு வந்தன. கட்டுநாயக்காவில் பொருத்தப்பட்டுள்ள இந்தியாவினால் வழங்கப்பட்ட ராடார் சரியாகத் தொழிற்படவில்லை என்ற குற்றச்சாட்டை அரசு முன் வைத்தாலும். அது இயங்கு நிலையில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்ற உண்மை பின்னர் ரணில் விக்கிரமசிங்கவினால் தரப்பட்டது. சிறீலங்காவிடம் தற்போதுள்ள விமானங்கள் இரவு நேரப் பறப்புக்களைச் செய்யவல்ல பார்வைக் கருவிகள் பொருத்தப்படாததால் அவற்றினால் புலிகளின் வான்கலங்களை எதிர்கொள்ள முடியாமல் இருக்கிறது. விண்ணிலிருந்து விண் தாக்கும் வல்லமையுள்ள விமானங்கள் அரசிடம் இல்லை. நிலத்திலிருந்து விண்ணைத் தாக்கும் பீரங்கிகள் குறிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே நிலைகொண்டுள்ளன. அவையும் இயங்கு நிலையில் வைக்கப்படவில்லை எனவும் வதந்திகள் கிடைத்தன. இப்படியான பல விடயங்களைப் புலிகள் அறிந்து வைத்திருந்தனர் என்பது மட்டுமல்ல படையினரின் அசமந்தப் போக்கு, உஷார் இல்லாமை போன்ற விடயங்களைப் புலிகள் அறிந்து வைத்திருந்ததுடன் சரியான தருணங்களைச் சாதுரியமாகப் பயன்படுத்தும் விவேகத்தையும் அவர்கள் கொண்டிருப்பதே தொடரும் அவர்களது வான்படை வெற்றிகளுக்குக் காரணம். அத்தோடு அதி நவீன பாதுகாப்பு, போர்ச் சாதனங்களைப் பற்றிய அறிவும் அதை எங்கிருந்தும் பெற்றுக் கொண்டு சுய பயிற்சிகளின் மூலம் அவற்றை வெற்றிகரமாகக் கையாளப் பழகிக் கொள்வதும் புலிகளின் சிறப்புப் பண்பு. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் புலிகளின் அலுவலகத்துக்குச் சென்ற ஒரு ஊடகவியலாளர் கூறிய கூற்று. நவீன போர்க கருவிகளின் சந்தை வருகை பற்றியும், மற்றும் உலக இராணுவங்கள் பற்றிய சமகால ஆய்வுகள் பற்றியும் விபரங்களைத் தரும் 'ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி' (Jan's Defence Weekly) என்ற வாராந்தர சஞ்சிகையின் பல பிரதிகள் புலிகளின் அலுவலகத்தில் பெருந்தொகையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று அந்த ஊடகவியலாளர் எழுதியிருந்தார்.

அதே வேளை உலகில் நடைபெறும் பெரும்பாலான போராட்டங்கள் பற்றியும் உலகப் போர்கள் நடாத்தப்பட்ட முறைகள் பற்றியும் தலைவர் பிரபாகரன் பல நூல்களையும் வீடியோக்களையும் தருவித்து அறிந்துகொள்பவர் என்கின்ற கருத்து பொதுவாகவே உண்டு. அத்தோடு சாண்டில்யனின் கடற்புறா போன்ற நூல்களிலிருந்து பெறப்பட்ட சில போர்த்தந்திரங்கள் புலிகளின் பல போர்களில் பிரயோகிக்கப் பட்டது. ஆனையிறவு தரையிறக்கத்தின் காலத் தெரிவின் பின்னணியில் சாண்டில்யனின் கடற்புறா இருந்திருக்கிறது.

தற்போதய வான்படையின் உருவாக்கத்தின் பின்னணியிலும் பல விடயங்கள் நடை-பெற்றிருக்கின்றன. வான் கலங்களை இறக்குமதி செய்தது முதல் அவற்றின் ஓட்டிகளைப் பயிற்றுவித்தது வரை பல ஆச்சரியமான விடயங்கள் புலிகளிடமுண்டு. புலிகள் நவீன கருவிகளை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதோடு இருந்துவிடுவ

7ம் பக்கம் பார்க்க...




#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.

PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

Search More Properties @
www.realestatebrokerofrecord.info

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# சிறுவர்களும் தொலைக்காட்சி தரும்தொல்லைகளும்



மாமூலன்

தொலைக்காட்சியூடாக பாதிப்படைவது சிறுவர்கள் என்பதுதான் அனைவரதும் தற்போதைய தலைவலியாக இருக்கிறது. அந்தப் பாதிப்பின் வடிவங்களை எவ்வாறு கைக்கொள்வது என்பது கேள்வியாகவும் இருக்கிறது. தொலைக்காட்சியூடாக வரும் பாதிப்புக்களில் விளம்பரங்கள் தரும் பாதிப்புத்தான் அதிகம்.

வீளம்பரங்கள் எவ்வளதுாரம் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. விளைம்பரங்களைப் பற்றி பல கருத்துக்கள் வெளிவந்துமிருக்கின்றன. ஆனாலும் விளம்பரங்கள் எற்படுத்தும் குறிப்பான பாதிப்புக்களை பெரிதாக யாரும் மனதில் வாங்கிக்கொள்வதில்லைத்தான்.

விளம்பரங்களைப் பாரத்து அதனால் வரும் பாதிப்புக்கள் எப்போதும் தீயவைகளாகவோ அல்லது நல்லவைகளாகவோ அமைந்து விடுவதில்லை.

தங்கள் வணிக வளர்ச்சிக்காக விளம்பரங்களைப் பயன்படுத்தும் சிறு வணிகர்கள் விளம்பரங்களைப் பற்றி நுணுக்கமாக அறிந்துகொண்டு செய்வதில்லை என்றாலும் அதனால் பயன் இருக்கிறது என்ற எண்ணம் அவர்களிடம் இருக்கிறது.

விளம்பரங்களைத் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளிடையே தவராது இன்றைய சிறுவர்கள் பார்க்கவேண்டியிருக்கிறது. தவிர்க்கமுடியாததாயும் இருக்கிறது. இந்த விளம்பரங்கள் பெரும்பாலும் பெரியவர்களை மனதில் கொண்டு திட்டமிட்டு வடிவமைக்கப்படுபவை.

அவை பெரியவர்களிடத்தில் வெற்றிகரமாகச் சென்று சேர்ந்து விடுகின்றன. ஆனால் பெரியோர்களுடன் சேர்ந்து பாதிப்படையும் குழந்தைகளின் பாதிப்புத்தான் தற்போது பெரிதாக எண்ணப்படுகிறது.

பெரியவர்களுக்கு என்று வடிவமைக்கப்படும் விளம்பரங்கள் பல பெரியவர்களுக்கான உள்ளடக்கங்களுடன் இருக்கின்றன. அவற்றைப் பிரித்துப்பார்க்க சிறுவர்களுக்குத் தெரியாது. அனால் விளம்பரம் ஏற்படுத்தும் விளைவுகள் பாதிப்புக்கள் சிறுவர்களிடத்தில் அதிகமாக இருக்கும். இருக்கிறது.

அண்மையில் உளவியலாளர் செய்த ஆய்வின்படி சிறுவரிடத்தில் உணவு பற்றிய தவறான விளம்பரங்கள் பலமாகச சென்றடைந்திருக்கின்றன. இதனால் அவர்களிடத்தில் உணவுப் பழக்கத்தில் மாற்றம் உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

விரைவு உணவு பற்றிய வண்ணமயமான விளம்பரங்களைப் பார்த்தபின்னர் சிறுவர்கள் அதிகளவில் உணவு உட்கொண்டது அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக அதிக எடையுள்ள சிறுவர்களும் உடல் பருமன் அதிகமான சிறுவர்களும் வழக்கத்தைவிட அதிகமாக ஏறக்குறைய 100 விழுக்காடு உணவு உட்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே குண்டான சிறுவர்கள் விளம்பரத்தினால் மேலும் குண்டாவதற்கு இதைவிட வேறு என்ன வழி வேண்டும்?

9 வயதிலிருந்து 11 வயதான சிறுவர்களிடையே மருத்துவர்கள் செய்த பரப்பாய்விலேயே இந்த விளைவு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.




குண்டான சிறுவர்கள் 143 சதவீதம் அதிகமாக வழக்கத்ததைவிடவும் சாப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த ஆய்வைச் செய்த குழுவின் தலைவர் மருத்துவர் யேசன் ஹால்போர்டு இந்த ஆய்வு தொலைக்காட்சி விளம்பரங்கள் சிறுவர்களின் உணவுப் பழக்கத்தை கணிசமான அளவிற்குப் பாதிக்கின்றன என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது என்று கூறியுள்ளார்.

சராசரியாக 20மணி நேரத்துக்கு தொலைக்காட்சி சார் நிகழ்ச்சிகளையும் அதன் வழியாக விரைவுணவு விளம்பரங்களையும் பர்க்கும் சிறுவர் இருக்கும் சமூகத்தில் 14 வீதம் உணவுப் பழக்கத்தில் பெரும்பாதிப்பு இருக்கிறது.

இதனால் தற்பேது அனைத்து வளர்ந்த நாடுகளிலும் உணவுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் தங்கள நாடுகளில் விரைவு உணவு மற்றும் சத்தற்ற உணவுகளை விளம்பரங்களில் தடைசெய்ய வழிவகை தேடுகிறர்கள்.

அதே போல தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்தபடி உண்ணும் பழக்கம் ஏற்படுத்தும் பாதிப்பைப் பற்றியும் ஒரு ஆய்வு நடந்திருக்கிறது.

அதன்படி வழக்கமாக அதிகம் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகள் சிறுவர்கள் தொலைக்காட்சிக்கு முன்னால் இருந்தபடி உண்ணும்போது அதிகம் உணவை உண்கிறார்கள். இந்த வகைக் குழந்தைகள் சிறுவர்கள் உடல் பருமான இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது.

ஆனால் அதிகம் தொலைக்காட்சி பார்க்கும் வாய்ப்பு அல்லது பழக்கம் இல்லாத சிறுவர்கள் இதில் வேறு விதமாக இருக்கிர்கள். உணவு நேரத்தில் தொலைக்காட்சி பார்க்க விடும்போது இந்த வகையினர் மிகக் குறைவாகவே மற்றப் பொதுவான நேரத்தைவிட உணவை உண்கிறார்கள் எனப்பட்டிருக்கிறது.

ஆக உணவுப் பாதிப்பை தொலைக்காட்சியின் எதோவொரு வடிவம் சிறுவர்களில் ஏற்படுத்தியவண்ணம் இருக்கிறது.

உண்மையில் தற்போதைய விளம்பர நிறுவனங்கள் தாங்கள் வடிவமைக்கும் அனைத்து வகை விளம்பரங்களிலும் ஏதோ ஒரு வகையில் சிறுவர்களைக் கவரும் சிறிய சிறய கூறுகளைக் கலக்கிறார்கள்.அதற்குக் காரணம் பல பொருட்களை வாங்குவதற்கு சிறுவர்கள் தூண்டுதலாக இருக்கிறார்கள் என்பதே. வடஅமெரிக்காவில் 23 விழுக்காடு வாங்கும சக்தி சிறுவர்களின் கையில் உள்ளதாம்!

மறைமுகமாகவோ நேரடியாகவோ சிறுவர்களின் தேவை கருதியே பொருட்கள் பெரும்பாலும் வீடுகளில் வாங்கப்படுகிறது.

அதேபோலவே சிறுவர்களை விளம்பரத்தில் கவரமுடியுமாயின் அது வீட்டைக் கவர்ந்ததாகும் என்பது தற்போதைய விளம்பர உத்தி.

அதன்படி பார்த்தால் உணவென்றில்லாமல் அனைத்து வகை பாதிப்புக்களையும் குழந்தைகளில் சிறுவர்களில் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஏற்படுத்துகின்றன. விளம்பரத்தைத்தானே பார்க்கிறார்கள் என்று விட்டுவிடுவது நல்லதல்ல.

சிறுவர்கள் தெலைக்காட்சி பார்க்கும் அளவையும் அதிலும் தேவையற்ற விளம்பரங்கள் பார்க்கும் அளவையும் கட்டுப்படுத்தி வைத்தல் நலமே.

அதைவிடவும் குறிப்பான தொலைக்காட்சி எங்கள் வீட்டு படுக்கையறையில் வந்து குதிக்கிறது என்பதுதான். இந்த உண்மைய பெரு வணிகர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்

வேறு எவ்வகை ஊடகமானாலும் அவற்றை நாம்தான் வீட்டுகள் எடுத்து வரவேண்டும். தொலைக்காட்சியோ வீட்டுக்குள் ஏற்கெனவே இருக்கிறது.

எனவே அதன்வழியாக எம் குழந்தைகளிடம் நுழைவதற்கு இன்றைய உலகின் வணிகம் முனைப்புடன் நிற்கிறது.

அதனால் சிறுவர்களுக்கு எற்படும் விளைவுகளைப்பற்றி வணிகத்துக்குளதுவும் கவலையில்லைத்தானே !

■ ■ ■


**RAVI INCOME TAX SERVICE**


- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
**416-262-4176**

- **Residential**
- **Commercial**
- **Invetment Properties**

**Ravi Paramu**
Sales Representative
**416•262•4176**
rparamu@hotmail.com
www.raviparamu.com

HomeLife GTA Realty Inc.
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963



# உங்கள் பழைய வீடுகளில் ஈயத்தின் பாதிப்புக்கள்

## (Effects of Lead in your Old Homes)



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

### யார் இத்தகைய பாதிப்புகட்கு உள்ளாவார்கள்?

நீங்கள் 1960 இற்கு முன்பு கட்டப்பட்ட வீடு களில் வாழ்கிறீர்களா? உங்கள் வீட்டின் நீர்க் குழாய்கள் (Plumbing) 1990 இற்கு முன்பு பொருத்தப்பட்டதா?

நீங்கள் ஓர் தொழிற்சாலைக்கு அருகில் வாழ்கிறீர்களா? (உதாரணமாக, ஈயம் பயன் படுத்தப்படும் ஈய –மின்கல மீள் சுற்றோட்ட தொழிற்சாலை (lead batttery recycling) போன்றது


மேற்கூறப்பட்ட வினாக்களுள் யாதாயினு மொன்றிற்கான உங்களது விடை "ஆம்" அல்லது "எனக்குத் தெரியாது" என்பதாக இருந்தால், உங்கள் குடும்பம் ஈயப் பாதிப் பிற்கு உட்படக் கூடிய ஆபத்து ஏற்படலாம்.

அண்ணளவாக நான்கு கனடிய வாழிடங் களுள் ஒன்று 1960 இற்கு முன்பு கட்டப் பட்டதாகும். 1960 இற்கு முன்பு கட்டப்பட்ட வாழிடமானது தீந்தை (Paint) மற்றும் நீர்க் குழாய்களில் (Plumbing) ஈயப் பூச்சைக் கொண்டிருக்கும்.

சிறு குழந்தைகள் தவழ்ந்து விளையாடும் நிலப் பகுதிகளில் ஈயத் துகள்கள் அளவு க்கு அதிகமாக சேரத் தலைப்படுகின்றது. உதாரணமாக யன்னல், கதவோரங்களில் மற்றும் படிக்கட்டுக்களில் ஈயம் அதிகமாகச் சேருகின்றது. இதனால் வயது முதிர்ந்தவர் களை விட சிறு குழந்தைகளின் உடல் களில் ஈயம் அதிகமாக உறிஞ்சப்படுகின் றது.

நீங்கள் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர் அல்லது வாடகைக் குடியிருப்பாளர் என்ற முறையில் சில விடயங்களைத் தெரிந் திருக்க வேண்டும். மேலும் பலவற்றைத் தெரிந்து கொள்ள தொடர்ந்து வாசியுங்கள்.

### தீந்தை (Paint) மற்றும் ஏனைய உற்பத்திகளில் ஈயம்




### பயன்படுத்தப்படுவது காலப் போக்கில் குறைவடைந்ததா?

ஆம்! 1970களின் நடுப்பகுதியின் ஆரம்பத் தில் சமஷ்டி அரசாங்கம் (Federal government) தீந்தைகளில் சட்டரீதியாக அனும திக்கப்படும் ஈயத்தின் அளவைக் குறைக்க ஆரம்பித்தது.

1980 களின் நடுப்பகுதியில் தகரத்தில் அடைக்கப்படும் பொருட்களுக்காக ஈயத் தைப் பயன்படுத்துவதை தகரத்தில் அடைப் போர் தாமாகவே நிறுத்தினார்கள்.

1990 டிசம்பரில் அநேகமான பயன்பாடுக ளில் ஈயமூட்டப்பட்ட நிலநெய் (gasoline) பாவனை தடை செய்யப்பட்டது.

இந்த பாதுகாப்பானநடவடிக்கைகள், கடந்த இரு தசாப்தங்கட்கு மேலாக கனடிய பிள் ளைகளின் இரத்தத்தில் காணப்படும் சராசரி ஈய மட்டங்களைக் குறைப்பதற்கு உதவின. எவ்வாறெனினும், கனடாவில் சில பிள்ளைகள் இன்னும் ஈயத் தாக்கத்திற்கு உட்படும் ஆபத்தை எதிர் நோக்குகின்றனர்.

### வீடுகளில் ஈயத்தின் மூலாதாரங்கள்

வீடுகளில் ஈயப்பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மூன்று பிரதான மூலாதாரங்களாவன:

**நீர்**
**மண்**
**தீந்தை** / தீந்தை (Paint) தூசுகளில் இருந்து வருகின்றன.

### நீர்

கனடாவின் அதிகமானபகுதிகளில் இயற்கை நீர் வழங்கலில் ஈயத்தின் செறிவு மிகவும் குறைவான போதிலும் குடிக்கும் நீரில் காணப்படும் கணிசமானளவு மட்ட ஈயமா னது நீர் செல்லும் குழாய்களில் காணப் படும் ஈய பொருத்துக்கள் மற்றும் ஈயக் குழாய்கள் போன்றவற்றின் மூலம் கலக்கின்றது.

கனடிய குடிக்கும் நீர் வழிகாட்டல்களின் படி, ஒரு நீர்க் குழாயில் நீர் குளிராக வரும் வரை ஓட விட்ட பின் எடுக்கப்படும் நீர் மாதிரியில், ஈயத்தின் மட்டம் பத்து லட்சத்தில் பத்து பங்கிற்குக் (10 parts per billion) குறைவாக இருக்க வேண்டும்.

### மண்

ஆரம்ப காலம் முதல் ஈயம் கலந்த நிலநெய்யைப் (gasoline) பயன்படுத்து வதனால், நகர மண்ணில் குறிப்பாக பிர- தான போக்குவரத்துப் பாதைகட்கு (Highway) அண்மையில் உள்ள பகுதிகளில் கிராமப் பகுதிகளை விட அதி

11ம் பக்கம் பார்க்க...

Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing
PROPERTY MAX®
Realty Inc. Brokerage
Residential, Commercial, Investment
Industrial And Rental
Toronto Area Line : 416-321-2300


Mohan Subramaniyam
Broker Of Record
Office: 416-291-3000
Direct: 416-857-1780

PMCI
PROPERTY MORTGAGE CANADA INC
New Mortgage, Re-Financing, New Immigrants,
1st, 2nd Mortgage, Commercial Mortgage,
Solution For Bad Credit, New Home Buyers.
Mississauga Brampton Line : 905-625-2121


1+1 Bdrms Condo Apt with 1 Washroom, Demanding Area, Step To Ttc.


4+1 Bdrms, 4 Washrooms, Executive Luxury Home Located In University Heights Area.


4+1 Bdrms, 4 Washrooms, Very Close To Public And Catholic Schools, Walk Out To Ttc.

Please mention PROPERTY/MAX when enquiring about Properties

HOME LIFE,
GTA Realty Inc.

வீடு, வியாபார நிலையங்கள்
**வாங்க விற்க**




ஞானேந்திரன்
நரசிங்கம்

CELL: 416.937.8090




ஜூடி
ஞானேந்திரன்

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

OFFICE:
416.321.6969

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED





MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## பொருளாதார வளர்ச்சியில் நாம்

திங்கள் வெளியீடான வீடு இதழின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்துவரும் வணிகர்களுக்கும் வாசகர்களுக்கும் நன்றி. சமூகத்தின் உண்மைத் தன்மையின் பிரதிபலிப்பாக ஊடகங்கள் இயங்க வேண்டும். என்ற இதழியல் விதியை ஆழமாக நினைவில் கொண்டிருக்கின்றது வீடு. வதிவிடமாகிய, வீடு சார்ந்ததான விடயங்களோடு மட்டுமன்றி விரிவுற்று வீடு விளங்குவதை கடந்த சில இதழ்களில் கணித்திருப்பீர்கள்.

வாழ்புலத்தில் கால் நூற்றாண்டை முடித்திருக்கும் நாம் இதுவரை என்ன சாதித்திருக்கின்றோம் என்ற வினாவைக் கேட்டவாறு நம்மிடையே பலர் இருப்பதை அறிவோம். தனியாகவும் குழுக்களாகவும் செயல்திறன் மிக்க செயற்பாடுகளைக் கொண்டவர்களே தமிழர்கள். சும்மா இருக்கின்ற இனம் அல்ல.

தாயக மண்ணின் பெரும் அவலங்களோடு தம்மை முழுமையாக இணைத்திருக்கின்ற ஒரு சமூகமாகவே நாம் அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றோம். பல இலட்சம் மக்களையும் மக்கள் போராட்டத்தையும் பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டவர்களாகவே நாம் இருக்கின்றோம். நம்மில் பெரும்பான்மையோர் தாயக உணர்வுகளை நெஞ்சிருத்தியபடியே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். வானியலின் எழுச்சி மிக்க பறப்புகளை மட்டுமல்ல.. எம் மண் மீதான அசுரப் பறப்புகளை அழிக்கவும் முடியும் என்றபடி, வானியல் வெற்றிகளை குவித்துக் கொண்டிருக்கும் தாயகத்தை மனதார வாழ்த்தி மகிழ்கின்றன கனடாவின் தமிழ் உணர்வுகள்.

எம்மினத்தவரின் செயல்திறன் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். குறுகிய காலத்தில் பெரு வளர்ச்சி பெற்ற இனமாக நாம் இந்த மண்ணில் இனம் காணப்பட்டிருக்கின்றோம். குறிப்பாக, பொருளாதார வளர்ச்சியில் எம் பங்கு குறிப்பிடத்தக்கது என அரச பொருளியல் வட்டாரங்கள் கருதுகின்றன. அதன் சிறப்பான எடுத்துக்காட்டே கனடியப் பிரதமர் தமிழருக்கு வழங்கிய பதுவருட வாழ்த்து. இது இனத்திற்குரிய வாழ்த்து என்பதைவிட இனத்தின் சாதனைக்குரிய வாழ்த்து என்பதே பொருந்தும். மற்றுமொரு இனம் தன்னை வாழ்த்தவில்லை என வருத்தப்பட்டபோதும், அரசு அதைப் பொருட்படுத்தவில்லை என்பதற்குக் காரணமும் இதுவேயாகும்.

இனி வருகின்ற கோடை காலம் நம் வணிகர்களுக்குக் கொண்டாட்ட காலம். மலிவுவிலை வணிகச் சாவடிகள் எங்கும் அமைகின்ற காலம். எம் மீது நம்பிக்கை வைத்துக் கூடும் வணிகருக்குக் கை கொடுப்போம். நம் இனத்தின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவோம்.

**வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.**
**வணிகத்தின் எல்லைகளை**
**விரிவாக்குவீர்!**

416-400-6406
416-646-3422

**Publisher & Editor : P.J. Dilipkumar**
**பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்**

**ஆலோகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி**

**ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம்**

**வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)**

**தொடர்புகள்:**
**For More Info: Editor**
**P.O.Box #63581**
**Woodside Squarew**
**1571 Sandhurast Circ.**
**Toronto, ON. M1V 1V0**

**Tel: 416.400.6406**
**Fax: 416.849.0594**
**Web: www.veedunews.com**
**e-mail: info@veedunews.com**

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு நம்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# பிசத்தப் போவது யார்...

3ம் பக்கத் தொடர்ச்சி...

தில்லை. அக்கருவிகளைத் தமது கள நிலைகளுக்கேற்ப மாற்றியமைப்பது முதல் அவற்றின் திறன்களை அதிகரிக்கச் செய்வதுவரை பல தொழில் நுட்ப சாதனைகளை அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவில் இரவுப் பார்வைக் கருவிகளை வாங்க முயற்சித்தார்கள் என்ற குற்றத்தில் சில தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இக்கருவிகளைக் கொண்டே இரவுநேரப் பறப்பு மேற்கொள்ளப்படுகிறது. புலிகளின் வான் கலங்களிற் பெரும்பாலானவை உள்நாட்டு உற்பத்தியாகவிருப்பினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேற்கு நாடுகளில் சாதாரண சிறியரக மோட்டார் சைக்கிளின் இயந்திரத்தைப் பாவித்து பொழுபோக்கு பறப்புக்கான சாதனங்களை உருவாக்குவது வழக்கம். அதே போன்று இயக்கங்கள் ஆரம்பித்த காலத்தில் வெளி நாடுகளில் தங்கியிராத சுதந்திரப் போராட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையோடு பல இயங்கின. புலிகள் இன்றுவரை அதைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

தற்போதய நிலையில் இலங்கை அரசுக்கு பல வழிகளிலும் பண உதவியும், ஆயுத உதவியும், ஆளுதவியும் தரப் பலநாடுகளும் முன்வருகின்றன. ஆனால் புலிகளுக்கு இப்படியான உதவிசெய்வதற்காக விரும்பனாலும் செய்ய முடியாத நிலைக்கு பல நாடுகள் தளள்ப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் நியாமான பல போராட்டங்கள் முடக்கப்பட்டு விட்டன. இவற்றின் பெரும்பாலான அழிவுக்குக் காரணம் அவை வேறு நாடுகளின் தயவில் வாழ்ந்தமையே. அந்த வகையில் புலிகள் தமது போராட்டத்தைத் தமது கள நிலவரங்களுக்கேற்ப சுதேச வளங்களுக்கு இசைவாக்கப்பட்ட வகையில் வடிவமைத்துக் கொள்கிறார்கள். பல மாற்று வழிகளையும் உத்திகளையும் கண்டுபிடிப்பதன் மூலம் (innovative) தமது போரியல், வாழ்வியல் முறைகளை உள்ளூர்க்களநிலைகளுக் கேற்ப அமைத்துக் கொள்கிறார்கள். கடற்புறா, பொன்னியின் செல்வன் போன்ற நூல்களின் பங்கும் இவற்றுக்குத் துணைபோயிருக்கிறது என்பதே புலிகளின் சுயநம்பிக்கையின் எடுத்துக்காட்டு.

அதே வேளை புலிகள் பல நாடுகளால் ‘புறக்கணிக்கப்’ படுவதற்கும் அவர்களது சுதேசிய மனப்பான்மையே காரணம். உலகில் நடைபெற்ற பல (சுதந்திரப்) போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமைக்கும் வெற்றிகளற்று முடித்து வைக்கப் பட்டமைக்கும் வெளி நாடுகளே காரணம். தமது நோக்கம் நிறைவேறும் வரைக்குமே அவர்களது உதவி நிலைத்திருக்கும். வெற்றிகரமான தீர்வுக்கு உதாரணமான தென்னாபிரிக்காவின் சுதந்திரம் ஒரு உள்நாட்டு உற்பத்தி. துணிச்சலான தலைமைக்கு அது ஒரு எடுத்துக்காட்டு. இந்த உண்மையை முற்றாக உணர்ந்து புலிகள் ஆரம்பத்திலிருந்தே தமது போராட்டத்தைத் தாமே வடிவமைத்து, நடைமுறைப் படுத்தியும் வருகிறார்கள். முற்று முழுதாக ஈழத் தமிழர்களை மட்டுமே நம்பி இப் போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது. வெளிநாடுகளின் பார்வையில் நிலை குத்தி நின்று கொண்டிருக்கும் ஈழ தேசத்தின் வளங்களைத் தாரை வார்த்துக் கொடுக்க புலிகள் தயாரானால் நாளையே ஈழம் பெற்றுக் கொடுக்கப்படும். இன்றய புலிகளின் தலைமையில் அது நடக்காது. அதுவே புலிகள் இன்று தனிமைப் படுத்தப்பட்டமைக்குக் காரணம். அதுவே அவர்களது வெற்றியும் தோல்வியும்.

ஈழ தேசம் உருவாகுவதானால் அதற்கு இந்திய அங்கீகாரம் வேண்டும். காரணம் அரசியல், பொருளாதாரம் சம்பந்தப்பட்டதல்ல. அவர்கள் ஈழத்திற்குப் பாதுகாப்புத் தரவேண்டியதுமல்ல. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இன்னுமொரு வல்லரசு நுழைவதற்கு ஈழம் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காக மட்டுமே. ஈழ தேசம் தன் மக்களைத் தானே பார்த்துக் கொள்ளும். பிராந்தியத்தைப் பாதுகாப்பதே இந்தியாவின் தேவை. ஈழத்தால் இந்தியாவுக்கோ அல்லது பிரிந்து போன பின்னர் சிறீலங்காவிற்கோ அல்லது வேறெந்த நாடுகளுக்கோ ஆபத்து ஏற்படுமென்று யாராவது கூறின் அது முட்டாளின் கூற்றாகவே இருக்கும். சிங்கப்பூரைப் போல அயல் நாடுகளோடு ஒற்றுமையாக இருக்கும் ஒரு நாடாகவே ஈழம் இருக்கும்.

எனவே இனிவரும் வாரங்கள், மாதங்கள் ஒரு தீர்வுக்கான இறுதிப் போராட்டத்தைக் காணும் காலங்களாகவே அமையும். போராட்டம் நாடெங்கும் விரிவுபடுத்தப்படும். அது சிங்கள மக்கள் மீதான நேரடியான தாக்குதலாக இருக்காது. அரசியல், பொருளாதார, இராணுவ இலக்குகளையே குறி வைத்து புலிகள் போராட்டத்தைத் தொடர்வார்கள். ஆனால் கிழக்கில் நிலைமை வேறுவிதமானதாக அமையலாம். பாதிக்கப் படுபவர்கள் பெரும்பாலும் முஸ்லிம்களாக அமையலாம். புலிகள் அதற்குக் காரணமாக இருக்க மாட்டார்கள்.

இதைத் தடுத்து நிறுத்தும் வல்லமை தென்னிலங்கை மக்களிடம் மட்டுமே உண்டு. அரசியல்வாதிகளை நிதானமாகச் சிந்திக்க வைக்குமளவுக்கு சிங்கள மக்களிடமிருந்து போதுமான அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் ஆனால் அரசியல்வாதிகளை ஊக்குவிப்பது போலவே அவர்கள் செயற்படுகிறார்கள். இன்றுவரை எந்தவொரு அரசியற் தீர்வுக்காகவும் நம்பிக்கை வைத்து உழைக்காதவர் என்ற வகையில் மஹிந்தவிடம் எதையுமே எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் அதற்கு மாற்றீடான ரணில் அரசு நாட்டையே அடகு வைத்துவிடும். துணிச்சலான ஒரு De Clerk தென்னிலங்கையில் உருவாகும் வரை.

இதற்கு ஒரே முடிவு ஈழம் தான். அது சிசேரியனா அல்லது இயற்கைப் பிறப்பா என்பது இந்தியாவின் கைகளிலேயே இருக்கிறது.


அது வரையில் ‘பிசத்தப் போவது யார்?’

■ ■ ■

inayam
**www.inayam.net**

**ரொரன்ரோவில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும் பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும். இது முற்றிலும் இலவசமான சேவை!!**


For All Your Real Estate Needs..
Buy or Sell through Me, You have a chance to win a Car**
$ 299,900
Beautifully Maintained House
Walkout Basement
Lots Of Upgrades
Close to All Amenities
Call Sasi For Details....
$ 689,000
5 Bedrooms Detached House
Only 2 Years Old
Approx 3500 Sq.Ft
Hardwood Floor Throughout
Call Sasi For Details....
$ 399,900
Beautifull & Well Maintained House
Hardwood On Main Floor
Tastefully Decorated
Lots Of Upgrades
Call Sasi For Details....
Sasi Chelvaratnam
Sales Representative
416.858.4828
$ 529,000
Brand New House
9' Ceiling On Main Floor
Double Door Front Entrance
More than 3000 Sq.Ft
Call Sasi for details....
$ 384,800
Less Than Five Years Old
Beautiful House
High Ceilings
Close To Many Amenities
Call Sasi For Details....
$ 470,000
A Gem On Quiet Street
$$$ Spent on Upgrades
9' Ceiling on Main Floor
Stainless steel appliances
Call Sasi for details....
$ 345,000
Renovated Detached Home
Close To School And Shops
Huge Master Bedroom
Unfinished Basement
Call Sasi For Details...
HOMELIFE
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3
Tel: 416.321.6969 Fax: 416.321.6963
This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply
*Each office independently owned and operated


CEYLINGO FINANCIAL GROUP.
416.430.0111
2857 Lawrence Ave. E, Suite 4,
Scarborough, ON M1P 2S8
Loan Application
வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்
Siva
Ratnasingam
Mortgage Consultant
416.430.0111
Karuna
Gobalapillai
Mortgage Consultant
416.430.0111
invis
digi Media Creations - 416.467.4952

# வீட்டுக்குள் ஈரலிப்பு தரும் பாதிப்பு



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

கால நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப நாம் அனுசரித்து போவதற்கு நிறையவே பழகிக் கொண்டோம். கோடைக்கும், மாரிக்கும் இடையில் வசந்தங்களை அனுபவித்த நாம் இன்று கடும் சூடு, கடும்குளிர் என்று மாறிமாறிவரும் காலநிலைகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் இடம்பெயர்ந்துள்ளோம். இவ்வாறு இறுக்கமான சூழலில் நாம் வீட்டுக்குள் வெளிப்புறக் (சூடு, குளிர்) காற்றினைத் தவிர்ப்பதற்காகவும், விரயமாகும் சக்தியினை கட்டுப்படுத்துவதற்கும் யன்னல் மற்றும் கதவுகளைப் பூட்டிய நிலையிலேயே வைக்கப் பழகிக் கொண்டோம். அதற்காக வீட்டிற்குள் வெப்பம், குளிர் சமநிலையினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதேவேளை வளியிலுள்ள ஈரப்பதன் நிலையினைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம்.

வளியிலுள்ள ஈரலிப்பு குறைந்து காணப்பட்டாலோ அல்லது அளவுக்கு அதிகமாக இருந்தாலோ சுகமான வாழ்க்கைக்கும் சுகாதாரமான சூழ்நிலைக்கும் இடையூறாக இருக்கும். இதனால் தோலின் மேற்பகுதி உலர்ந்து போதல், சுவாசம் சம்பந்தமான வியாதிகள் போன்றவை மட்டுமன்றி வீட்டிலுள்ள தளபாடங்கள் கூட பழுதடைந்து போவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாறு மாசுபட்ட வாயுக்கள் இரண்டு வகையில் கெடுதி விளைவிற்பனவாக இருக்கின்றது. ஒன்று வரட்சியான காற்றினால் ஏற்படும் பின்விளைவுகள் மற்றயது வளியில் இருக்கும் (mould debris) நச்சுத்தன்மையின் பாதிப்புக்கள்.

### வளியிலுள்ள ஈரலிப்பு எவ்வாறு அதிகரிக்கின்றது?

இதற்குப் பல வழிகள் உண்டு. வீட்டைச் சுற்றியுள்ள மண்ணின் தன்மை, தண்ணீர் வடிந்து செல்லும் குழாய்கள் போன்றவையும் வீட்டுக்குள் எமது சுவாசம், குளியல், தாவரங்களின் சுவாசம், ஆடைகளை உலர்த்துதல் மற்றும் நாம் ஒவ்வொரு தடவையும் தண்ணீரை உபயோகிக்கும் வேளைகளிலும் இவ் ஈரலிப்பு வளியில் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது, இவை மட்டுமல்லாமல் இப்பங்கை கணிசமான அளவு அதிகரிக்கவும் வைக்கின்றது.

### இதனை அளவிடுவது எப்படி?

வீட்டுக்குள் வளியிலுள்ள ஈரலிப்பினை எவ்வாறு கணக்கிடலாம் என்பதற்கான கருவி ஒன்றும் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியதில்லை. பொதுவாக டொலர்10.00 தொடக்கம் எலட்ரோனிக் கருவிகள் டொலர் 35.00 - 40.00 வரை பெற்றுக் கொள்ளலாம். 'Hygrometer' என்று அழைக்கப்படும் இச்சிறு கருவியின் துணையுடன் வளியின் தன்மையை அறிந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது நன்று.

ஈரலிப்பினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளில் முதலாவதாக வீட்டிற்குள் தண்ணீர் கசிதலை முற்றாக நிறுத்துதல் வேண்டும். நிலக்கீழ் அறைச் சுவர்களில் இருக்கும் சிறு கசிவுகளால் தண்ணீர் உட்புகாதவாறு செய்வதற்கு வெளிப்புற நீர் வடிந்து செல்லும் பகுதிகளை திருத்தி அமைப்பது மட்டுமன்றி மழைநீர் மற்றும் தோட்டத்திற்கு இறைக்கும் நீர் உடன் வழிந்து ஓடுவதற்கான நில அமைப்புக்களை (Slope) செய்தல் வேண்டும்.

வீட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் Humidityfire ஐ நிறுத்தி வைக்கலாம். ஆடைகளை வீட்டிற்குள் உலர்த்துவதை தவிர்க்கலாம். அவ்வாறு ஆடை உலர்த்தி மூலம் உலர்த்துபவர்கள் குழாய்களை சரியாக இணைத்து ஆடை உலர்த்தியிலிருந்து காற்றுடன் கூடிய ஈரலிப்பு வீட்டிற்குள் புகாமல் வெளியகற்ற வழி செய்யலாம்.

> “வளியிலுள்ள ஈரலிப்பு குறைந்து காணப்பட்டாலோ அல்லது அளவுக்கு அதிகமாக இருந்தாலோ சுகமான வாழ்க்கைக்கும் சுகாதாரமான சூழ்நிலைக்கும் இடையூறாக இருக்கும்.”

இவைகள் மட்டுமன்றி குளியலறைகளின் பாவனைக்குப் பின்னர், குறைந்தது அரை மணித்தியாலங்களாவது காற்றகற்றிகளை ஓடவிடுவது நன்று.

கடும் வெப்ப காலங்களில் வீட்டுக்குள் வெளிக்காற்றினை அதிகம் உட்புகவிடுதல் நன்றன்று. ஆனால் வீட்டுக்குள் இருக்கும் காற்றினை வெளியகற்றுவதால் எந்தவொரு இடையூம் ஏற்படாது. பொதுவாக வெப்ப காலங்களில் ஈரலிப்பு சமநிலையை பேணுவதற்கு குளிரூட்டிகளை (AC) இயக்கலாம். இக்குளிரூட்டிகள் வீட்டுக்குள் உட்புகும் காற்றிலுள்ள நீர்த் தன்மையை குறைத்து குளிரினை வழங்கும். இதற்காக நீங்கள் குளிரூட்டிகளைத் தெரிவு செய்யும்போது 'Latent heat' கூடியதாக இருத்தல் நன்று. சாதாரண குளிரூட்டிகள் Sensible heat உள்ளதாக இருக்கும்.

கடும் குளிர் மற்றும் வெப்பம் ஏற்படும் பிரதேசங்களில் ஏற்படும் ஈரலிப்பும், பின்விளைவுகளையும் குறைந்த செலவில் சமநிலைப்படுத்துவதற்கு 'Dehumidityfier' பாவிக்கலாம். இதில் இரண்டு வகைகள் பாவனையில் உண்டு.

**1, Heat Pump humidityfier**
**2, Chemical absent dehumidityfier.**

இந்த இரண்டாவது வகை கடும் வரட்சியான பிரதேசங்களுக்கு மட்டுமே உகந்தது, பொதுவாக கனடாவில் எமது வீட்டுத் தேவைகளுக்கு முதல் வகையை பாவிக்கலாம்.

### இவ்வகை Heat Pump Dehumidifire கள் எவ்வாறு தொழிற்படுகின்றது

உட்புகும் வளியிலுள்ள ஈரலிப்பை குளிரூட்டிகளின் தொழில்நுட்பம் போன்று இயங்கி, வளியிலுள்ள நீரினை தனியாக பிரிக்கின்றது. ஆனால் வெளியேறும் காற்று குளிரூட்டப்படுவதில்லை. மாறாக சூடான காற்றினை வெளியேற்றுகின்றது. நிலக்கீழ் அறைகளில் இவைபோன்ற Dehumidityfier களை இயக்குவதன் மூலம் கணிசமான அளவு ஈரலிப்பினைக் குறைக்கலாம். ஏனெனில் ஈரலிப்பான காற்று நிறையில் அதிகரித்திருப்பதால் எப்போதும் கீழ் நோக்கியே பயணிக்கின்றது. அதை சுத்திகரித்துக் காப்பதன் மூலம் வீட்டுக்குள் mould படிதல் மற்றும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

### Dehumidityfier கள் வாங்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவற்றை பார்ப்போம்.

தண்ணீரின் கொள்ளவுத்திறனைப் பொறுத்து இவைகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றது. பொதுவாக டொலர் 200.00 தொடக்கம் இவற்றின் செயற்திறன் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பொறுத்து டொலர் 350.00 வரை வேறுபடும். இவற்றை இயக்குவதற்கான மின்சார செலவீனம் சுமார் டொலர் 100 – 150 வரை வருடத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

'Automatic Defrost' தொழில் நுட்பத்துடன் கூடிய Dehumidityfierகள் குளிர் காலங்களிலும் பாதிப்பில்லாமல் இயங்கக் கூடியவை. அது மட்டுமன்றி ' Fan' கள் தன்னிச்சையாக இயங்கக் கூடியவாறு தெரிவு செய்வதன் மூலம் ஒரே பொருளில் இரண்டு பயன்கயையும் பெறமுடியும்.

Dehumidityfier இன் உபயோகம் மற்றும் கடடாய தேவை கருதியே இத்தகவல் திரட்டல் தாய்வீடு பத்திரிகையில் இடம் பெறுகின்றது. நாங்கள், எம் இனத்தவர் அதிக அளவில் தண்ணீரின் உபயோகத்தை அறிந்தவர்கள். குளியல் அறையிலும் சரி சமையலறை, ஆடைகள் கழுவுதல் போன்றவற்றில் அதிக பாவனையுடையவர்கள். அது மட்டுமன்றி கூட்டுக்குடும்ப அமைப்பின் அடிப்படையில் வாழ்பவர்கள். இது போன்ற காரணங்களினால் பெரும்பான்மையான எம்மவர் வீடுகளில் இவ் ஈரலிப்பு ஓர் பாரிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

ஜன்னல் ஓரங்களில் படிந்திருக்கும் நீர்த் தன்மை சுவாசம் சம்பந்தப்பட்ட வியாதிகள் மற்றும் வீட்டுக்குள் உருவாகும் மணங்கள் அனைத்துக்கும் இதுவும் ஓர் முக்கிய காரணம். குறைந்த செலவில் ஓர் திருப்பம். வீட்டினுள் ஈரலிப்பினை கட்டுப்படுத்துவோம். சுகாதாரமாக வாழப்பழகுவோம். மீண்டும் தாய்வீடு பத்திரிகை மூலம் இணைந்து கொள்வோம்.

■ ■ ■



ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices



Sales - Service - Installations
Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
| --- | --- | --- |
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| | Roller Shades | And More |
| (We Do Any Colour Of Paint & Stain) | And More | |

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# BUSINESS FOR SALE...


ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED


## Chandran Sornalingam
Broker

**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**
880 Ellesmere Road. Suite 203, Scarborough, ON.

Platinum Award 2006





**Oakville**

**$ 300,000**
- English Pub
- Location ! Location !
- Established Business


**Toronto**

**$ 290,000**
- Bar & Grill
- Excellent Location
- Great Potential


**Mississauga**

**$ 375,000**
- Profitable Restaurant
- Regular Clientele
- Good lease Term

**Toronto**

**$ 280,000**
- Beaches Area
- Established Pub
- Excellent Rent

**Toronto**

**$ 150,000**
- Excellent Location
- Fine Dining Restaurant
- Profitable Business

**Brampton**

**For Lease**
- Exclusive Usage for dental Office
- Good Location

**Burlington**

**$ 300,000**
- Outstanding Bar & Grill
- Excellent Location
- Makes Money

**Toronto**

**$ 250,000**
- New Bar & Grill
- Good Location
- Turn Key Operation

### Sold Franchises

**Fox & Fiddle**
Toronto, Pickering
Waterloo, Uxbridge
And New market

Crown & Anchor Brampton
Macleod's Hamilton
Gator Ted's Burlington

Finnegan's Wake Oakville
Albert's Parlour Toronto
Stone house Scarborough
Heritage Champions Markham

**Up to $ 250,000**
**small business loan can be arranged**



# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2004 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2004 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# உங்கள் பழைய வீடுகளில் ஈயத்தின்...

25ம் பக்கத் தொடர்ச்சி...

உயர் ஈய மட்டங்கள் காணப்படும். சில கைத்தொழில் பிரதேசங்கட்கு அண்மையிலுள்ள மண்ணும் கூட ஈயத்தை அதிகமாகக் கொண்டிருக்கும். அத்துடன் தீந்தையிடப்பட்ட சுவர்களைக் கொண்ட வீடுகளில் காலப் போக்கில் தீந்தை சிதைந்து அழிவதனால், வீடுகளைச் சுற்றிய பகுதியின் மண்ணானது மாசடைதலுக்கு உட்படுகின்றது.

### தீந்தை / தீந்தை தூசுகள் (Paint dust):

கனடாவில் 1960 வரை, வீடு மற்றும் தொழிற்சாலை தீந்தைகளில் கணிசமான அளவு ஈயம் சேர்க்கப்பட்டது. 1960 களிற்கு பின்னர் கட்டப்பட்ட வீடுகளில் ஈயமுள்ள தீந்தைகள் கணிசமானளவில் பயன்படுத்தப்பட்டமை மிக அரிதாகவே இருந்தது தீந்தை சுண்ணங்கள் [(chalk (சோக்)] காலப் போக்கில் உரிதல் அல்லது சிதைந்தழிதலுக்கு உட்படுகின்றன

### தொழில்ரீதியாக ஈயப் பாதிப்புக்கு உட்படல்

மின்கல (battery) உற்பத்தி, தீந்தையிடல், துருப்பிடிக்காத உலோகத்தை உருக்குதல், வெப்பமேற்றும் கருவியை (radiator) திருத்துதல், பாத்திரங்கள் செய்தல், கழிவு உலோகம் மீள்சுற்றோட்டத்திற்கு உட்படல், வெப்பமேற்றும் இடங்கள் போன்றவற்றில் ஈயப் பாதிப்பு ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. வேலை செய்யும் போது பயன்படுத்தப்பட்ட மாசடைந்த உடுதுணிகள் மூலமும் ஈயம் வீட்டினுள் உட்புகலாம்.

### ஏனைய காரணிகள்

வேட்டையின் போது பயன்படுத்தப்படும் ஈயம் பூசப்பட்ட குண்டுகள் இறைச்சியை ஈயமாசடைதலுக்கு உட்படுத்துவதன் மூலம் இவ் இறைச்சியை உண்போரைப் பாதிக்கின்றது. நுகர்வோர் உற்பத்திப் பொருட்களான அலங்கார ஆபரணங்கள், ஈயம் பூசப்பட்ட மெழுகுதிரிகள், பொழுதுபோக்கிற்காக மீன் பிடிக்கும் போது பயன்படுத்தப்படும் தூண்டில், மீன்பிடி வலையை ஆழமாக கடலுள் இடுவதற்குப் பயன்படுத்தப்படும் பாரக் குண்டுகள் போன்றவற்றிலிருந்தும் மற்றும் தீந்தையிடப்பட்ட தளபாடங்களை புனரமைக்கும் நடவடிக்கைகளின் போதும் ஈயம் வெளியாகின்றது.

### ஈயம் ஏன் ஆபத்தானது?

மிகச்சிறிய அளவுகளில்கூட மூளைவிருத்தி, கருவில் இருக்கும் சிசு, குழந்தைகளின் நரம்புத் தொகுதி ஆகியவற்றைப் பாதிக்கக் கூடியது. கர்ப்பப் பையினுள் உட்புகுந்து வளரும் சிசுவை நஞ்சூட்டக் கூடியதாக இருப்பதுடன், தாய்ப்பாலினுள்ளும் கலக்கக் கூடியது. இது நடத்தை மற்றும் கற்றல் போன்ற இடர்ப்பாடுகளுக்கு (behavioural and learning difficulties) வழிவகுக்கும். இரத்தத்தில் ஒட்சிசனை எடுத்துச் செல்லக் கூடிய ஈமோகுளோபின் உற்பத்தியில் தடையையேற்படுத்தும். விற்றமின் டி, கல்சியம் ஆகியவற்றின் உருவாக்கத்திற்கு அத்தியாவசியமான செயல்முறைகளை குழப்பும். நீண்டகால அல்லது இடை விட்ட ஈயப் பாதிப்பிற்கு உட்படும் போது உயர் இரத்த அழுத்தம் மற்றும் இரத்தக் குழாய்களில் நோய்கள் ஏற்பட வழிவகுக்கும். பாதகமான ஆரோக்கியக் குறைபாடுகளினால் ஏற்படக் கூடிய துன்பங்களின் அளவுகள் ஈயத் தாக்க அளவுகளிற்கேற்ப குறைவடைந்த போதும், பாதுகாப்பான தாக்க மட்டம் என்று எதனையும் கூற முடியாது.

### குழந்தைகளில் காணப்படும் ஈய அளவைப் பரிசோதித்தல்

இரத்தத்தில் ஒரு லீற்றருக்கு 0.48 மைக்ரோமோல் (Micromoles) அளவே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஈய மட்டமாகும். உங்கள் குழந்தையின் இரத்தத்தில் ஈய மட்டம் இந்த எண்ணிற்கு அதிகமாகக் காணப்பட்டால், பிள்ளையின் சுற்றாடலில் ஈயம் காணப்படுகின்றது என்பதை அறியலாம். அத்துடன் இதற்கான காரணங்களை இனங்கண்டு ஈய மூலாதாரங்களை அகற்றுவதுடன் வைத்தியரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

### உங்களது வீட்டில் ஈயம் காணப்படுகின்றதா என அறிய பரிசோதியுங்கள்.

உங்கள் வீட்டில் ஈய ஆபத்து காணப்படுகின்றதா என்பதை நிர்ணயிக்க பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

### ஈயம் காணப்படுகின்றதா என்பதை அறிய குடிநீரைப் பரிசோதித்தல்

உங்கள் வீடு 1990 இற்கு முன்னர் கட்டப்பட்டிருந்தால், ஈய குழாய்களினால் அல்லது ஈய பொருத்துக்களினால், உங்கள் வீட்டு நீரில் ஈயமட்டம் உயர்ந்துள்ளதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படும். இது 1960 களுக்கு முன்னர் கட்டப்பட்டிருந்தால் உங்கள் வீட்டு நீர் வழங்கலுக்கான சகல அமைப்புக்களும் ஈயத்தினாலானதாகக் காணப்படும்.

### கிணற்று நீர்

நீரில் மூழ்கக் கூடிய குழாய்கள் (Submersible pumps) குறிப்பாக ஈய- செப்புக் கலவையினாலான குழாய்கள் குடிக்கும் நீரினுள் ஈயத்தை வெளிவிடக் கூடியவை

### ஈயம் காணப்படுகின்றதா என்பதை அறிய மண்ணைப் பரிசோதித்தல்

வெளிப் பூச்சு உரிவுறல், உள்ளூர் கைத்தொழில்களில் அல்லது நிலநெய்யில் ஈயம் வரலாற்றுரீதியாகப் பயன்படுத்தப்பட்டமை என்பவையே மண்ணில் ஈயம் காணப்படுவதற்குக் காரணமாகும். ஈயம் விரைவாக மண்ணினுள் உடைந்து அழிவுறாது. இது நீண்ட காலத்திற்கு, சில சமயம் பல தசாப்தங்களுக்கு நிலைத்திருக்கக் கூடியது. நகரமண்ணில் அல்லது பிரதான வீதிக்கண்மையில் ஓர் மரக்கறிச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிடும்போது சில சமயம் புதிய மண்ணை மரக்கறிச் செய்கைக்கெனக் கொண்டு வருதல் ஈயத்தாலேற்படும் பிரச்சனைகளைக் குறைப்பதாக இருக்கும்.

### ஈயத் தூசி மாதிரி எடுப்பு (Lead Dust Sampling)

தூசியினுள் ஈயம் காணப்படுதலைப் பரிசோதித்தல் பொதுவாக சாதாரணமாக எவராலும் செய்யக் கூடிய எளிமையான பரிசோதனையாகும். வீடு புனரமைத்தலின் பின், ஈயத் துகள் காணப்படும் இடங்களில் இப் பரிசோதனைகளை மேற் கொள்ளல் பயனுள்ளதாகும். ஈயம் சேர்ந்த பின் அல்லது புனரமைத்தலின் பின் சரியான முறையில் சுத்திகரிப்பது கடினமாகும். கம்பளங்களில் ஈய தூசினை அளவிடும் எந்த ஒரு எளிமையான பரிசோதனையும் இல்லை. பழைய கம்பளத்தை அகற்றி புதிய கம்பளத்தை இடுதலே சரியான வழியாகும்.

### உங்கள் வீட்டில் ஈயம் உங்களின் மீது விளைவிக்கும் தாக்கத்தைக் குறைக்க நீங்கள் செய்ய வேண்டியது யாது?

1 லீற்றர் நீரில், 10 மைக்ரோ கிராமிற்குக் குறைவாக ஈயம் காணப்பட்டால், உங்கள் குடிக்கும் நீர் நல்லதாகும்.. நீங்கள் குடிக்கும் நீரில் ஈயத்தின் அளவைக் குறைக்க வேண்டுமெனில், குடிப்பதற்கோ அல்லது சமைப்பதற்கோ தேவைக்காகப் பயன்படுத்த முன்னர், இது குளிராக வரும்வரை ஓட விட்டு, நீங்கள் குடிக்க விரும்பும் ஒவ்வொரு தடவையும் நீரை வீணாக்குவதைத் தவிர்க்க, குளிர்சாதனப் பெட்டியில் நீரை சேமித்து வைத்து பாவியுங்கள். வேறுமுறையாக, காலையில் குடிநீருக்காக நீரை எடுக்க முதல் உங்கள் மலகூடத்தை நீரடிப்பு (flushing) செய்யுங்கள் அல்லது குளியுங்கள். நீரை ஓட விட்ட பின் எடுத்த நீர் மாதிரி எடுப்புக்கள் 10 µg/l ஆக இருந்தால், உங்கள் நகரம் அல்லது நகரத்தின் பொது வேலைகள் திணைக்களத்தை இப் பிரச்சனையை ஆராய்வதற்காகத் தொடர்பு கொள்ளுங்கள். சில மாநகரசபைகள் இலவச ஈயப் பரிசோதனைகளைச் செய்கின்றன. வீட்டு நீர்க்குழாய்களை மாற்றி அமையுங்கள். இது செலவு கூடியதாகும். சிறந்த தற்காலிக முறையாக, போத்தலில் அடைக்கப்பட்ட நீரை வாங்குங்கள். அல்லது நீரில் இருக்கும் ஈயத்தைக் குறைக்கும் திறனுள்ள வடிகட்டியை வீட்டில் பொருத்துங்கள். நீங்கள் வாங்கும் எந்த உற்பத்தியும் கனடாவின் தராதர சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருப்பதை உறுதி செய்யுங்கள்.

### உங்கள் வீட்டு மண்ணில் ஈயம் காணப்பட்டால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு நீங்கள் எடுக்கக் கூடிய எளிய படிமுறைகள்:

வீட்டினுள்ளே பிரவேசிக்கும் போது வெளியில் பயன்படுத்திய பாதணிகளைக் கழற்றுங்கள். பிள்ளைகள் வெளியே விளையாடிய பின் சவர்க்காரமும் நீரும் கொண்டு பிள்ளைகளின் கைகளை நன்கு கழுவுங்கள். உங்கள் வீட்டை ஒழுங்காக சுத்தமாக வைத்திருங்கள் (vacuum). தீந்தையும் தூசியும் உள்ள மேற்பரப்புக்களையும் ஒழுங்காக ஈரத்துணியால் துடையுங்கள்.ஈயம் அதிகமாகக் காணப்படும் நீர் ஒழுகும் பகுதிகளிலும், எந்த ஒரு வெளியான பகுதி

21ம் பக்கம் பார்க்க...

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)
உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3


RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES
வீடு வாங்க விற்க
Life Insurance (All kinds),
RESP/RRSP

Direct : 416.908.6003
Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
208-80 Corporate Drive,
Toronto, ON. M1H 3G5
Office : 416.290.1200

PAKEER
PAKERATHAN SAHADEVAN
Licensed Insurance Agent
PAKEER
PAKERATHAN SAHADEVAN
Sales Representative

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

### Eglinton/Markham



**$127,000**

2 Bedrooms, 2 Washroom, A Lovely Suite, Lowest Price -Act East, Excellent Location, Spacious 2Bdrms , Lovely View, Fridge, Stove,Parquet Floor

### Don Mills/Eglinton


**$131,000**

2 Bedrooms, 1 Washroom, All Elfs, Existing Window Coverings, Fridge, Stove, Dryer, Window Air-Conditioner, Parquet Flooring, One Underground Space

### Kipling/Steeles



**$158,888**

2 Bedrooms, 2 Washroom, The Best Unit In The Building. Top Quality Laminate Flooring, Import Ceramics Tiles In Foyer, Bathrooms, Kitchen & Solarium

### Britannia/Glen Erin


**$249,900**

3 Bedrooms, 2 Washrooms, Condo, Style And Modern Decor Are Featured In This Completely Renovated And Upgraded Home With A Finished Basement..

### Birchmount/Ellesmere


**$259,900**

1+1 Bedrooms, 1 Washroom, 24 Hrs Ttc. Brand New Tridel Bdrm + Den *North View 9 Ft Ceiling *Immaculate With Spectacular Amenities

### Markham/Finch


**$269,900**

3+2 Bedrooms, 2 Washroom, Could Be An Investment Property. 24Hrs Ttc At Door. Close To Schools, Shopping

### South Of Lawrence



**$289,900**

2+2 Bedrooms, 2 Washroom, Just Move In & Enjoy! $$$ Spent On Upgrades Very Clean, Bright, Solid Bungalow In A-1 Location.

### Morningside/Sheppard


**$299,000**

3+1 Bedrooms, 4 Washroom, Walking Distance To Schools,Ttc, Shopping, Library, Rec Center And Hwy., Sep.Ent.Through Garage

### Brimley/Denison


**$324,800**

3+1 Bedrooms, 3 Washroom, Great Location, Close To The Schools, Lots Of Upgrades, Extra Kitchen Cabinet

### Pinegrove/Altona


**$329,900**

4 Bedrooms, 3 Washroom, The Sundance, Built By Garthwood Homes. All Brick Home In Desirable Location.

### Sandalwood/Rattlesna



**$359,000**

4 Bedrooms, 3 Washroom, Beautiful 4Bdrm Detached Home In An Excelent Location.Nice Entrance With Large Fron Enclosure

### Finch/Staines


**$384,900**

4 Bedrooms, 3 Washroom, Mattamy Home Approx 2000 Sq Ft. Demand Location Shows Well-Spacious & Neutral Decor. Newly Painted

### Red Willow/Castlemor


**$395,000**

4 Bedrooms, 3 Washroom, Beautiful 4 Br Home Castlemore Village. Well Designed Space With Huge Premium Lot Flag Stone Patio

### Wilson/Skyview


**$444,900**

5 Bedrooms, 3 Washrooms, Immaculate, Spacious& Open Concept Floor Plan!. Quality Halminian Home. Close To Public Transit

### Sandalwd/Chinquacous


**$449,000**


4 Bedrooms, 3 Washroom, Pride In Ownership. Better Than New. Tons Of Upgrades. Upgraded Top Of The Line Light Fixtures Thru-Out.

### Victoriaprk/Eglinton



**$89,000**

Great Family Business. Located In Busy Plaza. Surrounded By Apartments. Sales Approx $25000 Per Month. 6/49 Lotto Commision Approz $1500 Per Month.

### Lawrence/Bellamy



**$119,900** Plus Stock

Excellent, Convenience/ Variety Store. Money Making & Established Business. Reasonable Rent $2800 (Tmi Included). Lotto Commission About $1800/Month. Good Weekly Sale. Lots Of Traffic In Plaza

### Kennedy/Mcnicoll Ave



**$175,000**

Well Established Business. Three Different Businesses In One Premise. Well Known Bakery, Daisy Mart Convenience Store And Take-Out And Catering. All Three For One Price!

### O'connor/St. Claire


**$2,500,000**

Free Standing Building Total Approx. 22,000 Sqft. Completed With New Window Located In East York Busy High Demand Area. Excellent

## *New Retail/Restaurant Units Available for SALE/LEASE*



digi Media Creations - 416.467.4952


# Elaguppillai (Mike) Srinathan, B.Sc.

Sales Representative

## Direct: 416.276.1225

esrinathan@trebnet.com

HOMELIFE Higher Standards

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

# வீடும் விடியலும்

## புதிய வீடுகள்: அங்கம் - 15

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



**புதிய வீடு வாங்குபவர்கள் கவனிக்க வேண்டிய முதல் முக்கிய பத்து அம்சங்கள்:**

கனடாவில் புதிய வீடு வாங்குவது என்பது ஒரு வித நாகரீகம் போலவும், ஒருவித கௌரவம் என்பது போலவும் ஆகிவிட்டது. இதனால் தான் பழைய வீடுகள் வீதிக்கு வீதி தேடுவாரற்று தேங்கிக் கிடக்கின்றன. எல்லோருக்கும் புதிய வீடுகள் தான் வேண்டுமென்றால் விற்பனை முகவர்கள் எங்கு தான் போவார்கள்? மறுபுறம், ஒவ்வொருவரும் தங்களது தேவைக்கும் தங்களது வாழ்க்கை முறைக்கும் ஏற்ற வகையில் புதிய வீடுகளை வாங்குகின்றார்களா? என்று கேட்டால் பதிலைச் சிந்தித்துத்தான் சொல்லவேண்டியிருக்கும்.

எது எப்படி இருப்பினும் புதிய வீடுகளைக் கொள்வனவு செய்யும் போது எத்தகைய அம்சங்களுக்கு முக்கியத்தவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது பற்றிய ஒரு பார்வையாக எதிர்வரும் சில கட்டுரைகள் அமைய இருக்கின்றன. சிலருக்கு சில அம்சங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை யாக இருக்கலாம். ஆனால் எல்லோருக்கும் பொதுவான அம்சங்கள் பற்றி ஆராய்வோம்.

### 1. வாழ்க்கை முறைக்கு ஏற்ற இல்லத்தைத் தெரிவு செய்தல்:-

நாம் வசிக்கும் இல்லத்தைத் தேர்ந்து எடுக்கும் போது, நாம் தொழில் பார்க்கும் இடம் அத்தகைய தெரிவில் பிரதான பங்கு வகிக்க வேண்டியது முக்கியமானது. மாறாக வீட்டை ஒரு தொங்கலில் வாங்கி வைத்துக் கொண்டு நாளாந்தம் பயணத்தில் 3-4 மணித்தியாலங்களைச் செலவழித்து வாழ்வதற்காக வாங்கிய வீட்டில் வாழ முடியாது தெருவில் நமது வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழிப்பதோடு, குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து தம்மைத் தனிமைப் படுத்தி அவதிப்படும் பெற்றார்கள் பலர். ஆகக் குறைந்தது வேலைக்குச் செல்லும் இருவரில் ஒருவருக்காவது வசிக்கும் இல்லம் அண்மையாக இருப்பது பல விதத்திலும் நன்மை பயக்கும். பின்வரும் கேள்விகளை எங்களை நாங்களே வீடு வாங்க முன்னர் கேட்டுக் கொள்வது சிறந்ததொரு தெரிவைச் செய்வதற்கு வழி சமைக்கும்.

பரபரப்பான பிரதான நகர்ப்புறத்தை அண்டி வாழ்வது நல்லதா? அல்லது நகருக்கு வெளிப்புற அமைதியான சூழலில் வாழ்வது நல்லதா?

வீட்டை அலங்காரம் செய்வதிலும் பராமாிப்பதிலும் ஆர்வம் இருக்கிறதா? அத்துடன் பனிக்காலங்களில் அவற்றைச் சுத்தம் செய்யவும் கோடை காலத்தில் புல்லு வெட்டுதல் போன்றவற்றைச் செய்யவும் முடியுமா? உங்கள் பிள்ளைகள் எத்தகைய பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்றும் எத்தகைய சமூகத்துடன் ஒட்டி உறவாட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்.

பார்க்கும் தொழிலுக்கும் வசிக்கும் வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் நியாயமானதா? இலகுவான போக்குவரத்து வசதியாவது உண்டா?

இத்தகைய வினாக்களுக்கு பதில் கண்டால் வீட்டை எங்கு வாங்குவது? எப்படியான வீட்டை வாங்குவது? என்ற சரியான முடிவுக்கு வரலாம்.

வீடுகளில் தனிவீடு, கொண்டோமேனியம் என இரண்டு பிரதான வகைகள் உண்டு. மேற்கூறப்பட்ட வினாக்களுக்கு விடை காணும் போது எத்தகைய வீடு வாங்குவது பொருத்தமானது என்ற முடிவினையும் எடுக்க முடியும். இத்தகைய இரு வேறுபட்ட வீடுகளுக்குரிய உத்தரவாதம், கட்டுவதற்கான காலம் என்பன வேறுபடும் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

புதிய வீடுகள் வாங்கும் எங்களுக்கு பிடித்தமான பலவகை நவீன அமைப்புகளைத் கொண்ட வீடுகளைத் தெரிவு செய்ய முடியும் என்பதோடு எங்களது விருப்பத்திற்குரியது போல் அமைப்புகளில் மாற்றங்களை உட்புகுத்தி மனதுக்குப் பிடித்த ஒரு வீட்டை உருவாக்க முடியும். கொண்டோமேனியங்களை விட தனிவீடுகள் வாங்கும் போது அத்தகைய தெரிவுகளுக்கும் மாற்றங்களுக்கும் அதிகளவு சந்தர்ப்பம் இருக்கும். எங்களது வாழ்க்கை முறைக்கும், பொழுது போக்கு அம்சங்களுக்கும் ஏற்ற வகையில் மின்சார இணைப்புக்களை ஏற்படுத்தவும், மற்றும் நவீன மின்சார விளக்குகளையோ உபகரணங்களையோ பொருத்தவும் ஏதுவாக அமையும். குறிப்பாக, Home Theater அமைத்தல், நவீன சமையல் அறை அமைத்தல் (Modern Kitchen) Net working intercom, Camera போன்றவற்றைப் பொருத்தி நாம் கனவில் கண்ட வீடுகளை நனவாக்கக் கூடிய வாயப்பு கனடாவில் மிகச் சாதகமாகவே உள்ளது. ஆனால் ஆசையும், ஆர்வமும் தமது சக்திக்கு மேற்பட்டுப் போகாது பார்த்துக் கொண்டால் வாழ்வு இலகுவாகவும் இனிமையாகவும் அமையும்.

### 2. முதலீட்டின் எல்லையைத் தீர்மானித்தல்:-

ஒவ்வொருவரும் தமது வாழ் நாளில் செய்யப் போகின்ற ஒரு பெரிய முதலீடு வீடு வாங்குவது. அத்தகைய முதலீட்டின் எல்லை எவ்வளவு என்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். அதாவது எவ்வளவு வரை எம்மால் சமாளிக்க முடியும் என்பதை ஆற அமர சிந்தித்து முடிவு எடுத்தல் வேண்டும்.



எமது வருமானத்தையும் எம்மிடம் இருக்கும் தொகையையும் மனதில் வைத்து மாதாந்தம் வீட்டின் ஈட்டுத் தொகைக்கும் இதர செலவுகளுக்கும் ஏற்றவாறு எத்தகைய பெறுமதியுடைய வீட்டை வாங்குதல் பொருத்தமானது என்பதைத் தெரிவு செய்ய வேண்டும். தற்போதய சூழ்நிலையில் எந்தத் தொகைக்கும் வீட்டு அடமானம் பெற்றுத் தர பலர் பல வழிகளை வைத்திருக்கிறார்கள். வீட்டுக்கு அடமானம் எடுப்பது முக்கியமல்ல. அதனைத் தொடர்ந்து தக்கவைப்பதும், வாழ்வதும் முக்கியமானது.

வீட்டை வாங்க முன்னரே வீட்டிற்குரிய அடமானத்தை முன்கூட்டியே பெற்று வைத்திருத்தல் (Pre-approved mortgage) சாலச் சிறந்தது.

Canadian Bankers Association ல் புதிய வீடுகளுக்கு நிதிவசதி பெறுதல் பற்றிய பயனுள்ள பல தகவல்களை அறிந்து கொள்ளலாம். பின்வரும் இரண்டு துண்டுப் பிரசுரங்கள் மிகப் பயன் உள்ளவை.
Mortgage Wise.
Managing Money

பின்வரும் இலக்கத்திற்கு அழைத்து அல்லது இணையத்தளத்திற்கு சென்று மேலதிக தகவல்களைப் பெறலாம்.

**1-800-263-0231**

**OR**

**WWW.CBA.CA**

கனடாவில் வீடு வாங்குபவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு CMHC (Canada Mortgage and Housing Corporation) பல வித நன்மை பயக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகிறது. குறிப்பாக புதிய குடிவரவாளர்களைக் கருத்திற் கொண்டும், நல்ல Credit History உள்ளவர்களைக் கருத்திற் கொண்டும் CMHC அறிமுகப் படுத்தும் திட்டங்களில் சேர்ந்து பலனடைய வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக 25 வருடத்தில் வட்டியையும் முதலையும் கட்டி முடிக்க வேண்டும் என்ற கால எல்லை தற்போது 35 வருடம் வரை நீட்டப்பட்டிருக்கிறது. வட்டியை மட்டும் சில காலத்திற்குச் செலுத்தக் கூடிய திட்டங்களும் உண்டு.

இது பற்றி மேலும் விளக்கமாக இவ்விடத்தில் குறிப்பிடுதல் தலைப்பிற்குப் பொருத்தமற்ற தென்பதால் கீழ்க்காணும் இணையத் தளத்திற்குச் சென்று மேலதிக

26ம் பக்கம் பார்க்க...

Home Inspection
Vela Subramaniam
Certified Home Inspector
Optimal Home Inspection Services
Tel:416-786-0760
416-299-0700
E-Mail:vela.ohis@gmail.com
Web:www.ohis.ca



ATEAM Towing
"Affordable and Trusted Services"




Light Towing
Flatbed
Carrier Services
Unlocking The Doors
Free Scrap Car Removal
Top Dollars For Your Unwanted Cars
Call Esan or Donald
Direct: 416-835-1700
525 Bloor St W
Toronto, ON, M5S1Y4
Dispatch: 416-642-TEAM (8326)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

# மங்காத கடன் என்று சங்கே முழங்கு



பெரி முத்துராமன்
- Senior Prsonal Banking Officer -

பாரதிதாசன் இன்றைக்குக் கனடாவில் இருந்தால் எப்படிப் பாடியிருப்பார் என்று நினைத்துப் பார்த்தேன். அதில் வந்ததுதான் இந்தத் தலைப்பு.

தினம் வேலை நிமித்தம் பலரின் கடன் சரித்தைப் பார்க்க வேண்டியிருக்கின்றது, அதைப் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களிடம் பேசும் போது திரும்பத் திரும்ப ஒன்றைத் தான் பெரும்பாலானோர் கூறுகின்றார்கள். நாங்கள் இந்த நாட்டில் எப்படி நடந்து கொள்வது என்று தெரியாமல் நடந்து கொண்டு விட்டோம். கடந்த காலத் தவறை எப்படிச் சரி செய்யலாம்? நீங்கள் வழி சொல்லுங்கள் என்பார்கள்.

நான் ஆபிரிக்காவைச் சார்ந்த இளைஞன் ஒருவனைச் சந்திக்க நேரிட்டது. ஆங்கிலம், பிரெஞ்சு என்று இரண்டு மொழிகளிலும் சரளமாக, அந்த மொழிக்குச் சொந்தக் காரனைப் போலப் பேசினான். நல்ல சம்பாத்தியமும் கூட, கனடாவில் பட்டம் பெற்றிருக்கின்றான். ஆனாலும் அவன் கேட்ட கடன், அவனுக்குக் கிடைக்க வில்லை. ஆடம்பரமாக வாங்கி ஊதாரித் தனமாகச் செலவு செய்த படிப்புக் கடன்கள், மற்றபடி விளையாட்டாக பணம் கட்டாமல் விட்ட செல்போன் பில்கள், போன்ற சின்னச் சின்ன தவறுகளே காரணம். அவனுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், இனி எப்படி நடந்து கொண்டால் இந்த நிலை மாறும் என்று கூறினேன். அவனும் மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டு சொன்னவை ‘உங்களைப் போல் ஒருவர் தக்க பருவத்தில் எனக்கு அறிவுரை கூறியிருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருக்காது.’ மேலும் அவனுடைய நல்ல வருமானமும், தற்போதைய பொறுப் புணர்ச்சியும் சீக்கிரம் அவனின் நிலையை மாற்றும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வாழ்வில் தவறு செய்த எல்லோருக்குமே நல்ல வருமானம் அமைவது இல்லை. இல்லையா?

இந்த அனுபவங்களின் அடிப்படையிலேயே இந்தக் கட்டுரைத் தொடர் தொடங்குகின்றது. கடன் சரித்திரம் என்றால் என்ன? என்பதில் தொடங்கி கிரடிட் ஸ்கோர் அல்லது கடன் மதிப்பை எப்படி உயர்திக் கொள்ளலாம் என்பதுவரை பலப்பல விடயங்களை ஆராய உள்ளோம்.

‘இன்று வாங்குங்கள் நாளைக்குப் பணம் கொடுங்கள்’’ என்ற வாய்ப்பை எப்போதாவது பயன் படுத்தியிருந்தால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திய நாளிலிருந்து உங்கள் கடன் சரிதம் கனடாவில் ஆரம்பமாகின்றது. கடன் மற்றும் கடன் அட்டைகளை வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து பெறும்போது உங்களைப் பற்றிய விபரங்களையும், நீங்கள் எவ்வாறு கடன் தவணைகளை ஒழுங்காகக் கட்டி வருகிறீர்கள் என்ற விபரத்தையும் கடன் சரிதத்தை பராமரிக்கும் நிறுவனங்களுக்கு வங்கிகள் மற்றும் கடன் கொடுத்த நிறுவனங்கள் அனுப்புகின்றன.

எதிர்காலத்தில் நீங்கள் மேலும் சிறிய, பெரிய கடன்களைப் பெற விளையும்போது உங்கள் கடன் சரிதத்தைப் புதிதாகக் கடன் கொடுக்க முனையும் நிறுவனம் பார்க்கின்றது.

ஒரு தொலைபேசி நிறுவனத்துடன் சண்டை போட்டுக் கொண்டு ஒரு சிறிய தொகையைக் கட்டாமல் விட்டு விட்டதனால், வீட்டுக்கடன் பெற வங்கியை அணுகிய போது கடன் மறுக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. ஆக நல்ல கடன் சரிதம் நாளும் மிக முக்கியம். நல்ல கடன் சரிதம், ஒரு பொன்முட்டையிடும் வாத்து. அதை அறுத்துப் பார்க்கக் கூடாது. கடன் சரிதத்தைப் பொறுத்துத்தான், பல சமயங்களில் புதிதாக வாங்கும் கடனுக்கான வட்டியும் நிர்ணயிக்கப் படுகின்றது. நல்ல கடன் சரிதம், குறைந்த வட்டியையும், மோசமான கடன் சரிதம், அதிக வட்டி கட்டவேண்டிய சூழலையும் ஏற்படுத்தும். கடன் சரிதம் மிக மோசமாக இருக்கும் பட்சத்தில், கடன் முற்றிலுமாகக் கூட மறுக்கப்படலாம்.

கடன் சரிதத்தைப் பராமரிக்கும் நிறுவனங்கள் கனடாவில் மூன்று. அவை முறையே ஈக்கியூபக்ஸ், டிரான்ஸ்யூனியன், நோர்தேன் (வடக்கு) கிரிடிட் பீறோ என்பன ஆகும். உங்கள் கடந்தகால கடன் கட்டிய தன்மைகளின் சுருக்கமே கடன் சரிதம் என்று சொல்லலாம். ஆசிரியர் மாணாக்கனுக்கு மதிப்பெண் போடுவதைப் போன்று கடன் சரித நிறுவனங்கள் உங்கள் மொத்த நடவடிக்கைகளுக்கும் என ஒரு மதிப் பெண்ணைக் கொடுகின்றன. அதுதான் கிரடிட் ஸ்கோர் அல்லது கடன் மதிப்பெண் ஆகும்.

உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்க உங்களுக்கு உரிமை உள்ளது. அது எப்படி என்று விரிவாக இன்னொரு சமயம் பார்ப்போம். உங்கள் அனுமதி இன்றி யாரும் உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்க முடியாது, சாதாரணமாக கடன் மற்றும் கடன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, உங்கள் கடன் சரிதத்தை நிதி நிறுவனங்கள் பார்ப்பதற்கு நீங்கள் ஒப்புதல் அளிப்பீர்கள். வீடு வாடகைக்குப் பெறும் போதோ, வேலைக்கு விண்ணப்பிக்கும் போதோ அல்லது காப்புறுதிக்கு விண்ணப் பிக்கும்போதோ கூட உங்கள் ஒப்புதல் பெற்று சம்பந்தப்பட்டவர்கள் உங்கள் கடன் சரிதத்தைப் பார்க்கலாம். இந்தக் கடன் சரிதத்தில் பொதுவில் என்னென்ன விபரங்கள் இருக்கும் என்று பார்ப்போம், முதற் பகுதியில் உங்கள் பெயர், தற்போதைய மற்றும் முந்தைய இருப்பிட விலாசங்கள், சமூகக் காப்புறுதி இலக்கம், தொலைபேசி எண்கள், பிறந்த திகதி, தற்போதைய மற்றும் முந்தைய பணி புரிந்த விபரங்கள், ஆகியன இருக்கும்.

அடுத்தது கடன் பகுதி, இப்பகுதியில் நீங்கள் வாங்கிய எல்லாக் கடன்களின் விபரமும், அவற்றை எவ்வாறு கட்டி வந்துள்ளீர்கள் என்ற விபரமும் இருக்கக் காணலாம்.

அடுத்தது வங்கி விபரங்கள், வங்கியில் காசோலை ஏதேனும் பணம் இன்றி திரும்பிச் சென்றுள்ளதா என்பன போன்ற வங்கியியல் சம்பந்தப்பட்ட சரியில்லாத விபரங்கள் ஏதேனும் இருந்தால் அவை இந்தப் பகுதியில் இடம் பெறும்.

அடுத்தது நாடறிந்த அல்லது பொது மக்கள் பார்வைக்குள்ளாகக் கூடிய ஆவணங்களில் உங்களைப் பற்றி உள்ள தகவல்கள் இதில் அடங்கும். குறிப்பாக வங்குரோத்து அல்லது திவால் ஆன தகவல், கோர்ட் உத்தரவுகள், போன்றவை இருக்கும்.

அடுத்தது கடனை வசூலிக்கும் முகவர்கள் உங்களிடமிருந்து கடனைப்பெற முயற்சித்திருந்தால் அந்த விபரம் இங்கு இடம்பெறும்.

அடுத்தது உங்கள் கடன் சரித்திரத்தைப் பற்றி நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்பினால், இந்த இடத்தில் இடம்பெறச் செய்யலாம். ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் தாமதமாகப் பணம் கட்டியதற்கான காரணம், அல்லது நிதி நிறுவனத்துடன் உங்களுக்கான முரண்பாடு அல்லது கருத்து வேறுபாடு அல்லது ஃபிராட் அல்லது ஏமாற்றுதல் எச்சரிக்கை என்று நீங்கள் உங்கள் தரப்பு வாதத்தை சுருக்கமாக இந்த இடத்தில் இடம்பெறச் செய்யலாம்.

கடைசியாக உங்கள் கடன் சரிதத்தை யார் யாரெல்லாம் பார்த்தார்களோ, அவர்களின் விபரம் கடன் சரிதத்தின் இறுதியில் இடம்பெறும்.

தொடரும்

**அவனுக்கு நம்பிக்கையூட்டும் வகையில், இனி எப்படி நடந்து கொண்டால் இந்த நிலை மாறும் என்று கூறினேன். அவனும் மகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டு சொன்னவை ‘உங்களைப் போல் ஒருவர் தக்க பருவத்தில் எனக்கு அறிவுரை கூறியிருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருக்காது.’**

**பெரி. முத்துராமன்**

நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை

Scotiabank™

**Perrii Muthuraman**

MBA, M.Comm, PFP
Senior Personal Banking Officer

**Direct Line: 416.439-3040 x:2008**

pmuthuraman@gmail.com

## உலகத்தமிழர் சமூகநூலகம் விடுக்கும் அறிவித்தல்

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கான பகிரங்க வேண்டுகோள்

அன்புடையீர்!

நூலகத்தினைப் பயன்படுத்துதல்

ஆசிரியர்களும், கல்விகற்கும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் எமது நூலகத்தில் 13,500க்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. நீங்கள் ஒவ்வொருவரும் நூலகத்துக்கு வருகைதந்து நூல்களை எடுத்துப் படித்துப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இது விடயத்தில் ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் ஊக்குவிப்பு முக்கியமானதெனக் கருதுகிறோம்.

1. சிறுவர்களுக்கான நூல்கள் 1,000க்கும் மேல் உள்ளன.
2. திறமைச் சித்திபெறும் நோக்குடன் தமிழ்மொழி வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு 6,000க்கு மேற்பட்ட தமிழ்மொழி சம்பந்தமான நூல்கள் உள்ளன.
3. ஆசிரியர்கள் மற்றும் இளங்கலைத் தமிழியல் (B.A. Tamil) வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கென 7,500க்கு மேற்பட்ட நூல்கள் உள்ளன.

புலம்பெயர்ந்த எம் மக்கள் பயன் கருதியே இந்நூலகம் உருவாக்கப்பட்டது. அதனை முழு அளவில் பயன்படுத்தி அறிவைப் பெருக்கிக்கொள்வது உங்கள் ஒவ்வொருவரினதும் கடமை என்றே கருதுகின்றோம். காலம் கடந்தபின் யோசிப்பதில் பயன் இல்லை.

நிறைந்த பயன்பெற வாரீர்!

தொடர்புகளுக்கு: 416-335-0622
நூலகர், உலகத்தமிழர் சமூக நூலகம்

**FOR SALE**

**GROCERY STORE**

**IN NEWMARKET**

**Clean & Neat, 3 years old,
1900 sq. ft Store + 800 sq.ft basement
Indian, Pakistani, Sri lankan Grocery,
DVDs, CDs & Meat Store in Growing
community. Asking price $100,000 negotiable,
Sales $264,000 per year.**

**For details contact : 905-895-8996.**


Ayurvedic Herbal Drink!!
Consitap
கொன்சிடெப்
கொன்சிடெப் மூலிகைப் பானமானது மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிட சக்தி வாய்ந்தது. இதனை தினமும் ஆரோக்கிய பானமாக அருந்துவதன் மூலம் உடலிலிருந்து கழிவுப்பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்ற முடியும். இது இயற்கை மூலிகையாக அறிமுகப் படுத்தப்பட்டு இருப்பதால் மூல வியாதியை குணப்படுத்தவும், வாயுப் பிரச்சனையால் எழக்கூடிய அடிவயிறு வலியினை தவிர்க்கவும், பசியை அதிகப்படுத்தவும் அத்துடன் உடலின் நீரோட்டத்தையும் தொழிற்பாட்டையும் ஒழுங்கு முறையில் நடாத்துவதற்கும் உதவுகிறது. கொன்சிடெப் மூலிகையானது பாவனையாளர்களுக்கு எவ்வித அசௌகரிய மின்றி சிறுநீர் கழிக்கக்கூடிய சக்தியை வழங்குகிறது.
Consitap is made to a highly specific Ayurvedic formula that has been timelessly secreted in Sri Lankan medicinal lore and contains a variety of natural herbal ingredients. Consitap can be used as a remedial medicine against constipation or generally consumed as an herbal tea to ensure the proper daily excretion of body refuse. Consitap also reduces abdominal pains and purifies the kidneys, allowing the consumer to pass urine without any discomfort. Consitap is a recognised natural herbal remedy against Arsus (Piles), and it also prevents gasses from causing abdominal aches, increases appetite and by ameliorating the body functions and flows, Consitap gives new life and energy to the body.
Diabina
டயபீனா
டயபீனாவானது தினமும் அருந்தக் கூடிய ஓர் மூலிகை ஆரோக்கிய பானம் அல்லது சக்தி வாய்ந்த ஓர் மருந்து. இது உடலின் மிகுதியான குளுக்கோஸினை குறைக்கக் கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குளுக்கோஸினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. நீண்டகால நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடலின் பாகங்களில் விறைப்புத்தன்மை, பாதங்களில் கருக்கு, நோயினால் சலித்து ஏற்படக்கூடிய அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய வியாதிகளை படிப்படியாக நீக்கி விடக் கூடியது. டயபீனா வானது சுலபமான இரத்தோட்டத்தை வழங்கக் கூடியதும், உடலின் மிகையான குளுக்கோஸினை குறைக்கக்கூடியதும், இயற்கையான முறையில் உடலில் உள்ள குளுக்கோஸினை அளவை கட்டுப்படுத்தக் கூடியதும் என உத்தரவாதமளிக்கலாம். (டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்களுக்கு மட்டுமே)
Diabina may be consumed daily as an herbal health drink, or as a very effective medicine that reduces the levels of excess glucose in the body, systematically preventing diseases that are caused by high levels of glucose in the blood. Numbness, foot cramps, listlessness and other recurring ailments common to long-term diabetic patients are gradually eliminated. Diabina ensures the smooth flow of blood and reduces excess glucose, naturally controlling the levels of glucose in the body. (Diabina-Strictly for those suffering from diabetes)
Gluteala
க்லூட்டியலா
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக் கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக் கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியலா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழி வகுக்கின்றது.
Gluteala is specifically produced to an Ayurvedic formula that has been timelessly secreted in Sri Lankan medicinal lore and contains only a variety of all-natural herbal ingredients. The age-old formula in Gluteala is known to have been used by Asian royal princesses to protect their natural beauty and Gluteala even today may be consumed daily as a herbal tea, or as a very effective medicine that protects and augments the natural physical beauty of the consumer. Gluteala is also highly efficient in reducing excess body fat, weight and the unnatural fattening of specific areas of the body such as waist, hip, thigh, shoulder, hands revitalising the physique and giving you new life and energy.
SOAP FREE Hand Wash
Hand Wash
LongLife
லோங்லைவ்
லோங்லைஃப் ஆனது முற்றிலும் இயற்கையான மூலிகையினைக் கொண்டு இருப்பதால் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரத்தன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம். இருப்பினும் இது குறிப்பாக நோய்எதிர்ப்புச் சக்தியினை பலப்படுத்துவதற்கும், பசியை அதிகப்படுத்துவதற்கும் அத்துடன் அடிவயிறு உஷ்ணத்தை தடுத்து எரிவைத் தடுக்கவும், சிறுநீரக பிரச்சனைகளிலிருந்து நிவாரணமளித்து உடலிலிருந்து சிறுநீரகத்துடன் கழிவுப் பொருட்களையும் சீரான முறையில் வெளியேற்றத்தக்கதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இம் மூலிகைப்பானமானது வியர்வையும், வியர்வையினால் எழக் கூடிய துர்நாற்றத்தையும் குறைக்கக் கூடியது.
LongLife is an all-natural herbal tea that improves physical appearance and stolidity when consumed regularly. LongLife, although specifically made to strengthen the immune system and increase the appetite, is also beneficial for relief from urinal and abdominal burns as it eases the flow of urine and body refuse. LongLife ayurvedic herbal tea reduces the perspiration and odour.
The ERVAMATIN™ HAIR LOTION
provides effective and fast therapy for hair loss
and its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
hair loss, hair regeneration, dandruff, alopecia,
thin Hair, baldness, fragile and dry hair.
Hair Lotion
Haarlotion
Ervamatin
200ml
Dreamron
Herbal Scrub
Scrub
HENNA
Henna
E
SABONA
& Gift
www.mediherbs.ca
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)


Thinking of Selling?
List With
Shan's Home Team
&
Consider it
"SOLD"
Shan Thayaparan
Sales Repesentative
"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"
Your peace of mind is my goal.....
Dir: 416.567.7675 / Bus: 416.321.6969
Web:www.shan123.com E-mail: shan123@rogers.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc. Brokerage
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
Right house is a Sweet Home
*Each office is Independently owned and oprerated.

LOFRANCO CHAGPAR
PERSONAL INJURY LAWYERS

# 30 மில்லியன் டொலர்கள்

2006ம் ஆண்டு இழப்பீடாக மீளப் பெற்றுக்கொடுத்துள்ளோம்

**Toronto**
Tel (416) 223-8333 Fax (416) 223-3404
5255 Yonge St., Unit 1300, North York, ON M2N 6P4

**Brampton**
515 Ebenezer Rd., Unit 104, Brampton, ON L6P 2K7

**Mississauga**
257 Dundas St. East, Unit 1, ON L5A-1W8

**Kitchener**
29 King Street East, Unit 7, Kitchener, ON N2G 2K4

www.lofrancochagpar.com



- வாகன வீதி விபத்தில் காயமடைந்தீர்களா?
- விபத்தின் காரணமாக வேலைக்கு செல்வதில்லையா?
- உங்கள் குடும்பத்தின் தேவைகளை கவனிக்க முடியவில்லையா?
- காப்புறுதி நிறுவனம் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டதா?
- இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதில் தாமதமா?




இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
**LOFRANCO CHAGPAR**
Personal Injury Lawyers
வாகன விபத்து கோரிக்கைகளில் 75 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட சட்ட நிறுவனம்

Rocky Lofranco
Senior Partner


தமிழில் சேவை வழங்கப்படும்
இலவச ஆலோசனைகளுக்கு
**இலங்கதாஸ் பத்மநாதன்**

## LANKATHAS PATHMANATHAN
## 416 774 8122


TORONTO • BRAMPTON • MISSISSAUGA • KITCHENER

free consultation

# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை




***Bramalea / Queen***
3+1 Bedrooms,
2 Washrooms, Condo Town house, Starter Home At Affordable Price. Back To Park. Easy Access To Hwy 410,401, & 407.




***Squre one (Mississauga)***
2 Bedrooms,
2 Washrooms, Condo, Brand New Triumph Corner Unit. 880 Sqf. 9 Foot Ceilings. West Facing Corner Unit.

Price Reduced
Esso

**BRAND NAME GAS STAION WITH PROPERTY**
Gas Volune-3.5 Mill
Convenience Store- $9,000-$10,000/ Week
Apartment Rental Income
Restaurant
Tim Hortans Possible




**BAR AND GRILL (Pickering)**
Monthly Sales over 60,000.



**Veriety and Gift Store (Porthope)**
Monthly Sales over 50,000/ Grwoing up.
Rent 1,800.

DAISY MART

**SCARBOROUGH**

***UTHAYAN NADARAJAH***
*Broker*

**Cell: .416.727.9945**



UTHAYA

ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

# தொடர்மாடிக் குடியிருப்பு

## வீடு வாங்குமுன்பு தெரிந்திருக்க வேண்டியவை

தயாளன் சிவசம்பு
- ஈட்டுக் கடன் பிரதிநிதி -



சில வருடங்களாக, ரொறன்ரோவும் அதனைச் சேர்ந்த பகுதிகளுக்கும் தொடர் மாடிக் குடியிருப்பு சந்தை ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அநேகமான இளம் சமுதாயங்களும் கூட அவர்களது அவசர வாழ்க்கைச் சூழல் காரணமாக Condo வாழ்க்கையை விரும்புகிறார்கள். அதே நேரத்தில் வயது போனவர்களும் கூட இந்த வாழ்க்கையைத் தேர்ந்து எடுக் கிறார்கள். காரணம் அவர்களாக வெளிப்புற வேலைகள் எதையும் செய்யத்தேவை இல்லை என்பதாகும். இந்த தொடர்மாடிக் குடியிருப்புக்கான சந்தை முக்கியமான இடத்தில் இருப்பதால் அது எவ்வாறாகச் சட்டரீதியாக மக்களின் மத்தியில் உள்ளது எனப்பார்ப்போம்.

1967ம் ஆண்டு ஒன்ராறியோவின் தொடர் மாடிக்குடியிருப்புச் சட்டம் உருவாக்கப் பட்டது. இந்தச் சட்டம் வீட்டு உரிமையா ளரின் வரையறையையும், வீட்டு உரிமை யாளரின் உரிமைகள், கடமைகள் என்பவற் றையும் அந்தந்த வீட்டு உரிமையாளர் களுக்கு எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இந்த தொடர்மாடிக்குடியிருப்பு சட்டத் தொகுதி என்பது மூன்று பகுதிகளைக் கொண்டது.

Unit என்பது உரிமையாளர்களுக்கு தனிப் பட்ட உரிமையைக் கொடுக்கும். அதாவது Unitன் உள்ளே உள்ள சகல உரிமை களும் உண்டு.

### பொதுவான கூறுகள்

இந்த பொதுவான கூறுகள் என்பது அந்தக் கட்டடத்தில் வசிக்கும் அனைவருக்கும் உபயோகிப்பதாகச் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக நீச்சல்க் குளம், உடற்பயிற்சி நிலையம் போன்றவை.

தொடர்மாடிக் கூட்டுத்தாபனமானது கட்டடத் தின் ஒவ்வொரு நாளினதும் செயற்பாடு களைக் கொண்டு செல்வது. கூடுதலாக கூட்டுத்தாபனமானது வேலைக்கு ஆட்களை அமர்த்தி, கட்டடத்தை நடத்துவதற்குத் தேவையானவற்றை செய்து கொள்ளும். சிறிய கூட்டுத்தாபனமாக இருந்தால் இயக்குநர் அவை ஒவ்வொரு நாளினதும், வேலையை மேல்வாரியாகப் பார்த்துக் கொள்ளும்.

### கூட்டுத்தாபனம் செய்யும் சில வேலைகளாவன

கட்டத்திற்குத் தேவையான பராமரிப்பைச் செயல்படுத்துவது
வரவு செலவுகளைச் சரியாகப் பார்த்துக் கொள்வது.
உபவிதிகளையும் சட்டம் ஒழுங்குகளையும் பராமரித்துக் கொள்வது.

இது போன்று பலவகையான செயல்பாடு களைக் கொண்டு செல்வார்கள்.

உதாரணமாக நாம் தொடர்மாடிக்குடியிருப்பு வீடு ஒன்றை வாங்கும் முன்பு, அந்தக் குடியிருப்பில் எதை அனுமதிப்பார்கள் எதை அனுமதிக்கமாட்டார்கள் என அறிந்து கொண்டு வாங்க முடிவு எடுப்பது நல்லது.

சிலர் வளர்ப்புப்பிராணிகளை வளர்க்கலாம். அதாவது நாய் போன்ற பிரணிகளை சில குடியிருப்புக்களில் அனுமதிப்பதில்லை. சில தொடர்மாடிக் குடியிருப்புக்கள் சில வகை யான மிருகங்களை மட்டும்தான் அனுமதிப் பர்கள். சிலவற்றில் கட்டட மாடத்தில் வைத்துக் கோடை காலத்தில் barbecue போன்றவற்றை அனுமதிக்கமாட்டார்கள். இவற்றை எல்லாம் நடைமுறையில் வைத்திருப்பது இந்தக் கூட்டுத்தாபனத்தின் கையில்தான் உள்ளது. இப்படியான நிபந்தனைகள் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வேறுபட்டதாக இருக்கும்.

ஆகவே நாம் இவ்வகைக் குடியிருப்புக் களை வாங்கும் முன்பு எம்மிடம் இருக்கும் பிரச்சனைகளை முற்கூட்டியே உங்கள் வீட்டு விற்பனை முகவரிடம் சொல்லி வைப்பது நல்லது. அத்துடன் நீங்கள் வாங்கும் குடியிருப்பை நடாத்தும் முகாமைத்துவ நிறுவனத்தின் வரலாறு, அவர்களின் நடவடிக்கைகள் என்பவற் றையும் அறிதல் நல்லது. நல்ல முகாமைத் துவ நிறுவனமாக இல்லாவிட்டால் நாம் தேவை இல்லாத பிரச்சனையை விலைக்கு வாங்குவதாக அமைந்துவிடும். நீங்கள் செலுத்தும் பராமரிப்புக் கட்டணத்தை வைத்து அந்த கட்டடத்திற்குத் தேவையான வற்றை நடைமுறைப்படுத்துவது இவர்க ளாகும். அப்படியாக நீங்கள் வாங்கி வசிக்கத் தொடங்கிய பின்பு உங்களுக்கு அந்த முகாமைத்துவ நிறுவனத்தின் வேலையில்ப் பிடிப்பு இல்லாவிட்டால் அந் தக் கட்டடத்தில் இருப்பவர்களில் கூடுத லானவர்கள் விரும்பினால் ஒப்பந்தத்தைப் புதிப்பிக்காது விடலாம்.

அடுத்ததாக தற்போதைய நிலையில், அநேகமான கட்டட நிர்மாண நிறுவனங்கள் எல்லோரும் அந்த கட்டடங்களில், வீடு வாங்குவதை விரும்பவைக்கும் காரணத்திற் காக புதுப்புது பொதுவான பொழுதுபோக்கு தொகுதிகளைக் கட்டுவார்கள். உதாரண மாக Golf Centres, Bowling alleys எனப் பலவகையான வசதிகளைச் செய்வார்கள்.



ஆனால் ஒவ்வொரு புதிய வசதியும் செய்ய, உங்களது மாதாந்த பராமரிப்புக் கட்டணமும் கூடும். ஆகவே இக்குடியிருப் புக்களை வாங்கும் முன்பு எப்படியான தேவைகள் உங்களுக்கு உள்ளன எனப் பார்த்து, அவை உள்ள குடியிருப்பை மட்டும் வாங்குவதால் பராமரிப்புக் கட்டணமும் குறைவாக இருக்கலாம்.

அத்தோடு தற்போதைய காலகட்டத்தில் அநேகமானோர் முதலீட்டுக் காரணத்திற் காகவும் இத்தகைய குடியிருப்புக்களை வாங்குவதும் உண்டு. ஆகவே நீங்கள் வாங்கப் போகும் கட்டடத்தில் எத்தனை விகிதமான Unitல் , சொந்த வீட்டுக்காரர் கள் வாழ்கின்றார்கள். எனப்பார்த்தல் நல்லது. காரணம் சொந்த வீட்டுக்காரர்கள் கூடுதலாக வசித்தால் அந்த கட்டிடம் நல்ல நிலையில் தொடர்ந்து இருப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. வாடகைக் குடியிருப்பாளர்கள் கூடுதலாக இருந்தால் அதனது சுற்றாடலே வித்தியாசமானதாக இருக்கும். அத்துடன் இருபத்து நாலு மணித்தியாலங்கள் பாதுகாப்பு உள்ளதா, சக்கர நாற்காலி வசதி உள்ளதா எனவும் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

நீங்கள் வாங்கும் குடியிருப்பாளர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக உங்களுக்குப் பிடிக்காவிட்டால், நீங்கள் Offer கொடுத்து 10 நாட்களில் (அதாவது 10 நாட்கள் Cooling off period) உங்களது offer ஐ வாங்கும் போது நல்ல view என்று கூடிய பணத்தைக் கொடுத்து வாங்குபவர்கள் உண்டு. அப்படியான நிலையில், அந்த கட்டடத்தைச் சுற்றி ஏதாவது வெறுமையான நிலங்கள் இருந்தால் நகரசபையின் எதிர் காலத்திட்டம் என்ன என்பதைக் கண்டறிந்து வாங்குவது நல்லது.

2001ம் ஆண்டு தொடக்கம் எந்தத் தொடர்மாடிக்குடியிருப்புக்கும் பண ஒதுக்கீடு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். ஆகவே இதில் ஒரு குடியிருப்பை வாங்கும்போது Status Certificate43 ஒரு நிபந்தனையா- கப்போட்டு அதில் தேவையான ஒதுக்கீட்டுப் பணம் உள்ளதா எனப்பார்த்தால் எதிர் காலத்தில் ஏதாவது பராமரிப்புச் செலவு வந்தால் உங்களது கையில் இருந்து அதிகளவு பணம் போகாது பார்த்துக் கொள்ளலாம். மேலே குறிப்பிட்ட சில தகவல்கள் தொடர்மாடிக் குடியிருப்பை வாங்கும்போது உதவியாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

■ ■ ■

The Perfect Mortgage
Cutting The Cost Of Home Ownership



• First and Second Mortgages
• Pre-Approved or any Mortgage needs
• Bank or Private

உங்களின் அனைத்து ஈட்டுக்கடன் தேவைகளுக்கும் அழையுங்கள்

csi MORTGAGES

"Providing Solutions for all your Mortgage Needs"



தயாளன் சிவசம்பு
Mortgage Consultant
416•558•4699
Fax: 905•819•2420
e-mail: asivasampo@users.morty.com

அத்துடன் வீடு வாங்க விற்க வசதி செய்து தரப்படும்.


GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா ஊழியர்)

For Your Business We
• Install, Repair, Sell
• Meridian Phone Systems & System Phones
• Structured Voice & Data Calling
• Install, Repair
• Home Phone Wiring
• TV Cable (RGB)
• Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344




Why ME!
Friendly, Confidential and Professional Service !
Markham:
Asking $329,900
3 bedrooms
semi-detached home,
less than 5 years old
Mc/hwy7
Asking $316,900
3 bedrooms with finished walkout basement
Mc/Hwy7
Asking $329,900
3 bedrooms
semi-detached home
close to schools
Less than 5 years old
9th/hwy 7
Asking $539,900
4 bedrooms,
More than 3000 SQF,
Separate entrance to the basement.
Less than 5 years old.
(Mar/Steels
Asking $494,500
4+3 bedrooms,
3 kitchens,
2 separate basements
with separate entrance,
basement rental income $1400,00 .
(Mc/14th ave).
Brampton:
SOLD $387,000
4+2 bedrooms detached home,
Finished basement with 2 bedrooms.
Less than 3 years old
Asking $404,900
4 bedrooms and
1 bedroom finished basement and
Separate entrance.
3 years old and more than 2000 SQF.
Asking $404,999
4 bedrooms corner unit and separate entrance to the basement ,
Airport/Castlemore
Asking $469,900
5 bedrooms upstairs and new 3 bedrooms basement apartment with separate entrance,
Less than 5 years old, and almost 3200 SQF.
Tenant in the basement willing to stay.
Asking $272,900
New 3 bedrooms
with finished
walkoutbasement.
Scarborough:
Only $179,900.
2+1 bedrooms
Townhouse ,
Less than 5 years old,
Asking $229.000
3 bedrooms
Detached home with finished basement
Asking $319.800
3 bedrooms
Detached home with 3 bedrooms
basement apartment,
fully renovated home.
Asking $131,000
2 bedrooms condo,
Victoria park /danforth.
Asking $167.500
3 bedrooms condo ,
Victoria park / Eglinton
Asking $258,000
3+1 bedrooms
Townhouse
Mar/ Sheppard
Asking $469,900
4 bedrooms
More than
20000 SQF,
Less than
5 years old
SMOKERS CORNER
Asking $129,000
Convenience store in oshawa for sale
(Ritson / Taunton Rd),
$15,000 /week sale
Asking 149,000
Convenience store in Oshawa for sale
(King/Wilson) ,
$16,000/week sale
Rented for $1,700 /month.
Building for sale $399,000
Investment property,
Ground floor coffee and donut shop and basement leased for
$1,600/month + utilities,
Upstairs 2 separate apartments,
Photo Not Available
Asking $439,000
Investment property,
Ground floor rented for
10 years
Basement rented and upstairs
2 bedrooms apartment in Scarborough
HOMELIFE
HIGHER STANDARDS
GOLD CLUB MEMBER 2005
PLATINUM CLUB MEMBER 2006
Homelife GTA realty Inc., Brokerage *
*Independly owned and operated
Buy or sell commercial and/or residential properties Call
THANA SUSENDRA
Sales Representative
Office 416 321-6969
CEll 416 893-4376
1711 McCowan road, Suit #206,
Scarborough,on.
Nice View Of Lake & Islands,
Backyard facing beach,
3 + 2 bedrooms home,
in Georgina,
about 2 hours
drive from Scarborough.
Call me for details.
Lucky draw for new car and some other prices will be on August 2007
Some conditions apply. Not intend to solicit properties currently listed for sale.

# உங்கள் பழைய வீடுகளில் ஈயத்தின்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

யிலும், ஈயம் அதிகமாக உள்ள பகுதிகளை மூட வெறும் நிலப்பகுதியில் தாவரங்களை நடுங்கள். ஈயத்தால் மாசடைவிற்கு உட்பட்ட பகுதிகளில், புதிய மண்ணை இடுங்கள் சமைக்காது உண்ணும் பழங்கள், காய்கறிகளை உண்ணுவதற்கு முன் நன்கு கழுவுங்கள். மாசடைந்த மண்ணில் உருளைக் கிழங்கு போன்ற வேர் கொண்ட பயிர்களைப் பயிரிடுவதைத் தவிருங்கள்.

## எமது வீட்டில் ஈயம் கொண்ட தீந்தை பூசப்பட்டிருந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

ஈயத்தைக் கொண்ட தீந்தை (Paint), வீட்டில் நல்ல நிலையில் காணப்பட்டால், அதனை எதுவும் செய்யாது விட்டு விடுவதே சிறந்த தெரிவாகும். ஈய பாதுகாப்பு நடவடிக்கைகளில் வீட்டுரிமையாளர்களுக்கு பயிற்சி இல்லாது விடில், ஈயத்தை அகற்றும் போது பாரிய பிரச்சனைகளை உருவாக்குவார்கள். ஈயத்தைக் கொண்ட தீந்தையை அகற்றுவதற்கு சிறப்பான அறிவு தேவையாகும். ஓர் இடைக்கால முறையாக, நிலத்தை ஈரலிப்பாக்கி துடைத்தல் (mopping), கிடையான மேற்பரப்புக்களான யன்னலோரங்கள், படிக்கட்டுக்களை ஈரலிப்பாக்கி துடைத்தல், நில விரிப்புக்களை அடிக்கடி துப்பரவு செய்தல் யன்னலோரங்களின் வெளிப்பகுதிகளை உலோகத் தகடு கொண்டு மூடுதல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். சிறியளவில் தீந்தை உதிரும் போது, வீட்டுரிமையாளர்கள், எச்சரிக்கையாக இருந்தால், குறைந்த ஆபத்துள்ள சிறிய பகுதிகளை திருத்தம் செய்யலாம்.

### சிறிய பகுதிகளை திருத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

வேலை செய்யும் பகுதிக்கு அண்மையில் உள்ள எல்லா நில விரிப்புக்கள் (Carpets), நிலத் தடுப்புகள் (rugs), சிறுவர்களின் விளையாட்டு உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவற்றை அகற்றுக.வேலை செய்யும் பகுதியில் பிள்ளைகளை வரவிட வேண்டாம். வேலை செய்யும் பகுதியின் நிலப்பகுதிகளையும் நிலவிரிப்புக்களையும் பிளாஸ்டிக் விரிப்புக்களால் மூடுக.. பிளாஸ்டிக் விரிப்பிலிருந்து வெளியே செல்லும் போது, ஈயத் துகள்கள் ஏனைய பகுதிகட்குள் செல்வதைத தவிர்க்க வேலை செய்யும் சப்பாத்துக்களைக் கழற்றவும். அல்லது சப்பாத்துக்களின் மேலாக, கழற்றக் கூடிய கடதாசியிலான சப்பாத்துக்களை அணியவும். உங்களிடம் சரியான சுவாசிக்கும் கருவி (respirator) இருந்தால், அதனைப் பயன்படுத்துங்கள். மூக்கை மூடிக் கட்டுவதன் மூலமும், சுவாசித்தலால் ஏற்படக் கூடிய தீங்கைக் குறைக்க முடியும். மீண்டும் தீந்தையிட வேண்டிய பகுதியை மெல்லிய தூறலை ஏற்படுத்தக் கூடிய தண்ணீர் போத்தல் கொண்டு நனையுங்கள். தூறலிடுவதன் மூலம் வேலை செய்ய வேண்டிய பகுதியில் மட்டும் ஈயத்தூசு மட்டுப்படுத்தப்படும் ஈரமான அல்லது வரண்ட மணற்தாள் (sand paper) அல்லது உரோஞ்சக் கூடிய பஞ்சைப் (sponge) பயன்படுத்தி துப்பரவு செய்யுங்கள். இப்பகுதியை ஈரலிப்பாக வைத்திருங்கள். ஓர் ஸ்பொஞ்சைப் பயன்படுத்தினால், அதனை அடிக்கடி கழுவுங்கள். கழுவுவதற்கு நீருள்ள வாளியை அருகில்வைத்திருங்கள். மேற்பரப்பைத் தயார்படுத்திய பின், வரண்ட சுவருக்கு பூசவேண்டிய கலவையால் மெதுமையாக்குங்கள். கிடைக்கக் கூடிய சிறந்த தரமான ஆரம்பப் பூச்சால் (primer) மேற்பூச்சிடுங்கள். சரியான தீந்தையால் மீண்டும் பூச்சிடுங்கள். வேலை முடிவடைந்ததும் சரியான முறையில் அப் பகுதியை சுத்தம் செய்யுங்கள்.

### பாரிய பகுதிகளை திருத்துதல் (Repairing Large Areas)

அதிகமாக தீந்தை துகள்கள் (Paint chips) கண்ணுக்குப் புலனாகக் கூடிய வகையில், உரியக் கூடியவை. இப்பகுதிகளை உடனடியாக கவனிக்க வேண்டிய போதிலும் எச்சரிக்கையுடன் கையாளுங்கள். ஓர் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரரை பின்வரும் வேலைகட்காக, அமர்த்துங்கள். உதாரணமாக: பிளாஸ்டிக் சுவர்களை உரித்தெடுத்தல்பாரிய நிறப்பூச்சிட்ட மேற்பரப்புக்களை மணற்தாள்களினால் (Sandpaper) உரித்தெடுத்தல் (உதாரணமாக, வீட்டின் பக்கம் அல்லது ஓர் அறை)கதவு அல்லது யன்னலை மீளமைத்தல்நிலவிரிப்பை மீளமைத்தல் - நிலவிரிப்புக்கள் ஈயத்தூசுகள் தேங்கி நிற்கக் காரணமாகலாம். பழைய நில தளத்தினை (flooring) அகற்றுதல்கூரை சீலிங்குகளை உடைத்தல், கூரை விளிம்புகளிற்கு மேலாக தூசி சேரலாம். இரசாயனங்கள், வெப்பமேற்றிகள் (Heat guns), அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தி ஈய தீந்தைகளை உரித்தெடுக்கலாம். சுவரில் பொருத்தப்பட்ட அலங்காரத் தாள்களை (Wall papers) உரித்தெடுத்தல்

**சில முக்கியமான**

### இம்மாத முக்கிய குறிப்புகள்

- அன்னையர் தினத்தைக் கொண்டாடத் திட்டமிடுங்கள்
- வீட்டிற்கு வெளியிலிருக்கும் குழாய் தொடர்புகளை திறந்து விடுங்கள் (Open garden hose connections).
- தளபாடங்கள் மற்றும் சுவர்களிலுள்ள வெடிப்புக்கள், உடைவுகளைத் திருத்தி மெருகிடுங்கள் (waxing).
- வெளிப்புறத்தில் அதாவது, யன்னல், கதவு ஓரங்கள் தீந்தையிட (Paint) வேண்டிய தேவையிருந்தால் அதனைச் செய்யுங்கள்.
- எல்லா யன்னல்களும் திரைச்சேலைகளும் சரியாக இயங்குகின்றனவா என்பதை உறுதி செய்யுங்கள்.
- வீட்டினுள் தளர்ந்து காணப்படும் திருகாணிகள் (screws), கதவுகுமிழ்கள் (doorknobs) ஆகியவற்றை இறுக்கமாக்குங்கள்.
- புத்தக அலுமாரிகள், CD மற்றும் DVD களை ஒழுங்குபடுத்தி அடுக்குங்கள். உங்களுக்கு தேவைப்படாது என்று கருதுபவற்றை அன்பளிப்பாக கொடுத்து விடுங்கள்.
- குளியலறையில் பாசி, பூஞ்சணம் (mildew) பிடித்திருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவையானால் சுத்திகரிக்கும் கலவையால் (mildew remover) சுத்திகரியுங்கள்.
- கூரைகள், கூரையிலிருந்து நீர் வழியும் பீலிகள் (gutters), குழாய்கள் (downspouts) ஆகியவற்றில் கசிவுகள் இருக்கின்றதா என்பதை சரிபார்த்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- வீட்டினுள்ளும் வெளிப்புறத்திலும் பூச்சிகள், எலி போன்றவை காணப்படுகின்றதா என்பதை கண்டறிந்து இவற்றை அகற்றுங்கள்
- வீட்டினைச் சுற்றி குளவிக் கூடுகள் (Wasps' nests) காணப்பட்டால் அதனை அகற்றுங்கள். தேவைப்படின் சரியான முறையில் அகற்றுபவர்களை (Professionals) அழைத்து அகற்றுங்கள்
- வெளிப்புறத்தில் தாவரங்களை வளர்ப்பதற்கு மண்ணை பசளையிட்டு தயார்ப்படுத்துங்கள். மாட்டுச் சாணம், கூட்டுப் பசளை (compost) ஆகிய சேதனப் பொருட்களை தோட்ட மண்ணிற்கு இடுங்கள்.
- மண்ணை சிறிய கருவி (tiller) கொண்டு கிளறுவதன் மூலம் பசளையை கலக்கச் செய்யுங்கள்
- வெளிப்புற புல்தரையில் மீண்டும் தாவரங்களை வளர்ப்பதற்குரிய விதையிடுங்கள்.
- யன்னலுக்கருகாமையிலுள்ள பிரதேசத்தில் (window boxes) வருடம் முழுவதும் நிரந்தரமாக வளரக் கூடிய தாவரங்களை (annuals and perennials) நாட்டுங்கள்.
- வெப்பமான காலத்திற்குரிய காய்கறிகளான மிளகு, தக்காளி, வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றை இப்போது பயிரிடலாம்.
- அளவுக்கதிகமாக வளர்ந்திருக்கும் தாவரங்களை (hedges) வெட்டிவிடுங்கள் (Prune).

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. மேற்கூறப்பட்ட இந்தப் பாரிய வேலைகளை நீங்கள் சரியான முன்னெச்சரிக்கை இல்லாமல் செய்ய முயற்சிக்க வேண்டாம். அதிக அளவில் தூசை உற்பத்தி செய்யும் தொழில்களை எவ்வாறு சரியான முறையில் கையாளலாம் என்பது பற்றிய விரிவான தகவல்களை CMHC (Canada Mortgage and Housing Corporation) இன் ஆய்வு அறிக்கையான ஈய முன்னெச்சரிக்கை முறைகள் (Lead Precautionary Measures) என்பதில் அறிந்து கொள்ளலாம்.

CMHC ஐ கனடாவில் 1 800 668 – 2642 வை அழைப்பதன் மூலமும் அல்லது கனடாவிற்கு வெளியே (613) 748 – 2367 ஐ அழைப்பதன் மூலமும் இலவசமான பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம் எப்போதும் உடலை முழுவதுமாக மூடிய ஆடை (Coveralls), கண்ணைப் பாதுகாக்க பெரிய கண்ணாடிகள், கையுறைகளை அணியுங்கள். ஓர் பாதுகாப்பான சுவாசிக்கும் கருவியை பயன்படுத்துங்கள். அதிகளவிலான வேலைகட்கு தனியே கடதாசியிலான முகமூடி பாதுகாப்பைத் தராது.ஓர் வெப்பமேற்றும் துப்பாக்கியின் (Heat gun) உதவியுடன் ஈயத் தீந்தையை அகற்ற வேண்டாம். இந் நடவடிக்கை, ஈய தூசு அல்லது புகையின் அபாயகரமான மட்டங்களை அதிகரிக்கும்.ஈயத்தால் மாசாக்கப்பட்ட தூசு பரவுவதை மட்டுப்படுத்துங்கள். வேலை செய்யும் பகுதிக்கு ஈயத் தூசு மட்டுப்படுத்தப்பட்டால் வீட்டின் ஏனைய பகுதியிலுள்ள மக்களை இது பாதுகாக்கும்.கட்டுமான கழிவுகளை, பாரமான பிளாஸ்டிக் பை அல்லது தாள்களில் நன்கு சுற்றப்பட்டாலொழிய, சுத்தமான வாழிடங்களிற்கூடாக எடுத்துச் செல்ல வேண்டாம். தீந்தைகளை இரசாயன முறையில் அகற்றுவோர், பொதுவில் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பதார்த்தங்களையே பயன்படுத்துவர். எனவே சரியான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை எடுப்பதுடன், உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள் (Health Canada). அதிக ஆபத்தான வேலைகட்கு, அனுபவம் வாய்ந்த ஒப்பந்தகாரரை, வாடகைக்குப் பெறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள். ஈய – தீந்தையுடன் தொடர்பான மேற்பரப்புக்களை திருத்துவோர் அல்லது சுத்தம் செய்வோர் பொருத்தமான ஈய முன்னெச்சரிக்கை பாதுகாப்பு முறைகளை பிரயோகிக்கும் திறமை பெற்றவராக இருக்க வேண்டும். இந்த வகையான, படிப்பை மேற்கொள்வதற்கு கனடாவில், எந்த வகையான சட்ட ரீதியான தேவைப்பாடுகளும் (requirement) இல்லை. எவ்வாறெனினும், இதற்கான பயிற்சி நெறிகள் பரந்தளவில் இல்லை. எனினும், கல்நார் தகடு (Asbestos) அகற்றுவதில் பரிச்சயமுள்ள ஓர் ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தல் சிறந்ததாகும்.

### வேலை முடிந்த பின் துப்பரவு செய்தல்

ஈய தீந்தையைக் குழப்பும் எந்த ஒரு வகையான வேலைக்கும் பின், சிறந்த முறையில் துப்பரவு செய்தல் முக்கியமானதாகும். மேலிருந்து ஆரம்பித்து கீழ் நோக்கி வேலை செய்தல் சிறந்ததாகும். வேலை நடைபெற்ற பகுதி இன்னும் அதிகமான தூசி நிறைந்ததாக இருந்தால் நீங்கள் ஓர் பாதுகாப்பான மேல் ஆடையை அணிவதுடன், ஓர் சுவாசிக்கும் கருவியையும் அணிந்து கொள்ளுங்கள்.ஈரமான கடதாசி துவாலையால், பாரிய அளவில் காணப்படும் நிறப்பூச்சுக்களைக் கழுவவும். சிறிய துகள்களை நீரால் கழுவி கழுவுநீர் அகற்றும் வாளியினுள் அகற்றவும். பாதுகாப்பிற்காக நீங்கள் இட்ட பிளாஸ்டிக் போர்வைகளை, ஈரமாக்கி பின் அழுக்கான பக்கங்கள் உட்பக்கமாக இருக்கக் கூடியவதமாக மடிக்கவும். ஒவ்வொரு வேலையும் முடிந்த பின் பிளாஸ்டிக் போர்வைகளை பையிலிலிட்டு சீலிடவும் (seal). பயன்படுத்திய போர்வைகளை மீண்டும் பயன்படுத்த வேண்டாம். தூசி படிந்த எல்லா கிடையான மேற்பரப்புக்களையும் ஓர்வெற்றிடமாக்கியைக் (Vacuum) கொண்டு துப்பரவு செய்யவும். தளமேற்பரப்பின் மூலைகள், வெடிப்புக்கள் தளப்பலகைகளின் இடைவெளிகள் யாவையும் சுத்தம் செய்யப்பட்டனவா என்பதைக் கவனிக்கவும். மரத்தாலான தளங்களை தளத்திற்கான தூரிகைகளைக் (brush) கொண்டு சுத்தம் செய்யவும். கம்பளங்களை (Carpet) கம்பளம் துப்பரவு செய்யும் கருவியைக் (Carpet beater) கொண்டு துப்பரவு செய்யுங்கள். துப்பரவு செய்வதற்குப் பயன்படுத்திய தூரிகைகள் (Brush), துவாலைகள் (துவாய்) ஆகியவற்றை வேறான வாளியினுள் நீரினால் கழுவவும். கழுவிய நீரை அடிக்கடி மாற்றவும். சரியான முறையில் சுத்திகரிக்கப்பட்டதா என்பதை உறுதி செய்த பின்னரே சிறு பிள்ளைகளையோ அல்லது செல்லப் பிராணிகளையோ வீட்டினுள் அனுமதியுங்கள். உங்கள் வீட்டு குடிநீர், மண், தீந்தை துகள்களில் ஈயம் காணப்படுகின்றதா என அறிய ஆய்வு கூட பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்ததாகும்.

இதிலிருந்து மாறன் கற்றுக்கொண்ட பாடம்: நேரடியாக வீட்டை விற்பவரிடம் வாங்குவதாயின்,

1. வீட்டை வாங்கும் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட்டதுபோன்று அடமான ஒழுங்குகள் ஆரம்பம் முதல் இறுதிவரை நம்பிக்கைக் குரியதாக இருக்கவேண்டும்.

2. வீட்டுப் பரிசோதனையும், வீட்டின் சந்தை விலையும் இங்கு முக்கியமாகக் கருதப்படுகிறது.

3. சட்ட ஆலோசனை வீடு வாங்கி விற்கும் ஒவ்வொரு கட்டத்திலும் நீங்கள் முதலிடும் பணம், வீட்டை வாங்கும் ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட்ட பல தகவல்களை முக்கியமாகக் கவனத்தில் எடுப்பீர்களானால் இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்க்கலாம்.

தவறு 65: **We didn't know we could with-draw our offer.**

பாடம்: வீட்டை விற்பவர் உங்களுடைய முன் வழங்கல் பத்திரத்தை ஆமோதிக்க முன்பு, நீங்கள் உங்களுடைய முன் வழங்கலைத் (Offer) திருப்பிப் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் வீட்டை வாங்குவதற்குரிய ஒப்பந்தப் பத்திரத்தில் குறிப்பிட்ட கீழுள்ள வாசகத்தைச் சற்று அவதானமாகப் பார்வையிடுங்கள்.

This offer prepared and delivered to the sellers by the buyers on ...., 2007 ...., at ... and shall remain open for ... days, or until revoked by the buyers.

நீங்கள் இங்கே முதலில் கவனிக்க வேண்டியது யாதெனில் நீங்கள் வீட்டை வாங்குவதாயின் அவ்வீட்டை விற்பவரின் அனுமதியின் கால அளவு எவ்வளவு? இறுதியாகக் குறிப்பிட்ட 6 வளங்களையும் பார்த்து தவறாகப் புரிய வேண்டாம். அதாவது வீட்டை விற்பவர் நீங்கள் கொடுத்த முன் வழங்கலை (offer) வீட்டை விற்பவர் ஆமோதிக்க முன்பு நீங்கள் கொடுத்த முன்வழங்கலை இரத்துச்செய்யலாம்.

உதாரணமாக நீங்கள் உங்களுக்குப் பிடித்த வீட்டை வாங்குவதற்கு முன் வழங்கல் கொடுத்துவிட்டீர்கள். ஆனால், இடைநடுவில் இன்னொரு வீட்டையும் மிக நல்லாகவே பிடித்துவிட்டது. இந்த வீட்டைத்தான் வேண்ட வேண்டும் என்ற மனநிலையில் உள்ள நீங்கள், இதற்கு முதல் பார்த்த வீட்டை, அவ்வீட்டை விற்பவர் திரும்ப தன் வழங்கலைத் தரமுன்பு நீங்கள் அதை ரத்துச்செய்யலாம் என்பதே மேலுள்ள தவறு – 67ன் சாராம்சமாகும்.

**முன் வழங்கல் (offer) பற்றிய சிறு விளக்கம்:**

உதாரணமாக நீங்கள் வீட்டை வாங்குவதற்குரிய பத்திரத்தில் (Purchase agree-ment sale) வீட்டை வாங்குவதற்கான முன் வழங்கலை எழுத்து மூலமாகக் கொடுக்கிறீர்கள். வீட்டின் விலை $ 299,000 என வைத்துக்கொண்டால் வீட்டை விற்பவர் அதற்குப் பதில் தருகிறார் எழுத்துமூலமாக 299,500. ஆனால் அதை நீங்கள் நிராகரிக்கிறீர்கள். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் கொடுத்த $ 299,000 செல்லுபடியற்றதாகிவிடுகிறது. ஆனால், விட்டை விற்பவர் மறுநாள் சற்று சிந்தித்துவிட்டு நீங்கள் கூறிய விலைக்கு அனுமதி தருகிறார். அதாவது $ 299,000. ஆகவே, இவ்விலை கொடுத்து அவ்வீட்டை வாங்க உங்களுக்குச் சந்தர்ப்பம் வருகிறது. இதே நேரம் நீங்கள் கூறிய விலைக்கு மிக அதிகமான விலையை வீட்டை விற்பவர் கூறுகிறார் என்றால் ($ 315,000) நீங்கள் அதை முற்றாகவே நிராகரிப்பின் அவ்வீட்டை விற்பவர் உங்களிடம் அவ்வீட்டை விற்காமல் விட்டது என்பது தான் அர்த்தம். அதாவது வீடு வாங்கும் நபர் ஒருவரை வீட்டை விற்பவர் இழக்கிறார்.

தவறு 66: **We thought the sellers had accepted our offer.**

பாடம்: நீங்கள் உங்களுக்குப் பிடித்த கனவு இல்லத்தை வாங்கும்போது செய்துகொள்ளும் ஒப்பந்தப் பத்திரத்தில் வீட்டை விற்பவரின் கையெழுத்தை வாங்க மறந்துவிடாதீர்கள்.

ஒரு குறிப்பிட்ட வீட்டை எப்பாடுபட்டாலும் வாங்கியே தீருவது என்று நம்பிக்கையுடன் இருந்த மோகனுக்கு என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம். தனது முகவர் ஊடாகவும், வீட்டை விற்கும் முகவர் ஊடாகவும் நடந்த முன்வழங்கல்கள் (Offers and count-er offers) மோகனுக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுத்தது. வெள்ளிக்கிழமை மதியம் மோகனின் முகவரும் மோகனும் இணைந்து புதிய ஒப்பந்தப் பத்திரத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, வீட்டை விற்கும் முகவருக்கு தொலைபேசி எடுத்தார்கள். நாளை வருவதாகவும் வீட்டை விற்பவரிடமும் முகவரிடமும் கையெழுத்து வாங்க வருவதாகத் தெரிவித்தார்கள். வீட்டை விற்கும் முகவர், மோகனுக்கும் மோகனின் முகவருக்கும் திருப்தியான பதிலைக் கொடுத்திருந்தார்கள். ஆனால், இவ் இடைவெளியில் வீட்டை விற்பவருக்கு இன்னுமொருவர் அதிக விலைக்கு அவ்வீட்டை வாங்க முன் வந்ததால் மோகனின் கனவு இல்ல ஆசை இதனால் தடைப்பட்டது. மோகனும் முகவரும் வெள்ளிக் கிழமை மதியமே வீட்டை வாங்கும் பத்திரத்தில் வீட்டை விற்பவரின் கையெழுத்தை வாங்கியிருந்தால் மோகனின் கனவு இல்ல ஆசை நிறைவேறியிருக்கும்.

(மீண்டும் அடுத்த இதழில்)

■ ■ ■

நல்ல வீட்டில் குடிபுகுவோம்!

• வீடு வாங்குதல் • வீடு விற்றல் • வீட்டிற்கான ஈட்டுக்கடன்


முதலீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

காணி வாங்கி வீடு கட்டுதல்!
ஒன்ராறியோ Building Code ற்னமைய
காணி வேண்டி வீடு கட்டுதல்
-ரெரரன்டோ அல்லது அதன் புறநகர்ப்பகுதிகள்-

Cottage கட்டுதல்!
உங்கள் விடுமுறையை
உல்லாசமாகக் களித்திட
காணி வாங்கி Cottage
கட்டுதல்

தோட்டக்காணி வாங்குதல்!
Farm Land Opportunities
Custom Built Homes
காணிகள் விற்பனைக்கு உண்டு


• B.Eng (Hons) London UK
• Environmental Management Post Graduate Diploma - Construction- Niagara College
• Project Management - George Brown College
• Ontario Building Code - Part 9
• C.E.T - Road Construction Senior Inspector - MTO Designation



Varatharajah Kandasamy
Sales Representative
Dir: 647•898•2991
Off: 416•759•6000

VEEDU REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave. Suite 8
Toronto Ont. M1B 5K3
Tel: 416.759.6000


PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................
One Stop for
TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS
2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.
புதிய அறிமுகம்
On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards & Promotions Ltd
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5
மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்
The Big choice
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு
சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
IN WHOLESALE PRICE FOR RETAIL
80 Nasdane Rd Unit C-59 416-898 4846


மார்க்கம் மாநகரில்...
UCMAS
For 4 - 12 years old Children
உங்கள் குழந்தைகளிடத்தில் மறைந்துள்ள நினைவாற்றல், மனஒருமைப்பாடு மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.
UCMAS மனக்கணிதம் கற்பதன் மூலம்
உங்கள் குழந்தை கணிதப்பாடத்தில்
ஒரு வல்லவராக திகழ அழையுங்கள்
Contact: Suren
UCMAS Markham South Centre
8 Shadlock St., Unit 5
Markham, ON L35 3K9
416.821.2011
• Whole brain development program for children
• Confluence of ancient art and modern science of calculation that bring about speedy and accurate calculation
• Help to remove the 'fear' of Mathematics in school
• Attainment of life long skills that is concentration, creativity attentiveness and self confidence
digi Media Creations

# மனமே கலங்காதே

சிவவதனி
பிரபாகரன்



மனித வாழ்வு மனித உறவுகளுடன் பின்னிப் பிணைந்ததொன்று. மனிதர்கள் இல்லாத உலகில் எந்த ஒரு மனிதனாலும் தனியாக வாழமுடியாது. மனிதன் மனித னாக வாழவும் மனிதர்களோடு உறவு பூண்டு வாழவும் மனித மனம் உதவுகின் றது. திரம்பும் திசையெல்லாம் மனிதர்கள் உலாவுகின்றார்கள். ஆனால் அவர்கள் முகங்களில் எப்பொழுதுமே அமைதி யின்மை நிலைத்திருக்கின்றது. ஏதேனும் ஒரு கவலை அனுதினமும் எம்மை பீடித்து வாட்டுகின்றது. இந்த கவலை உணர்ச்சி களுக்கு காரணம் என்ன? அவற்றை விலக்கி இன்பமாக வாழ்வது எப்படி? உணர்ச்சிகளைக் கட்டிப்போட்டு கையாளும் வித்தையை மகான்கள் கூட முழுமையாக கற்றதில்லை என்கிறார்கள். எனினும் கட்டுக்கடங்காத எண்ணங்களையும் மனிதன் சக்தியால் கட்டிப்பொட முடியும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை யாகும்.

அதிகரித்துவரும் உளவியல் நோய்களால் மனோதத்துவம் பிரபல்யமடைந்து வருகின் றது. உளவியல் என்ற வார்த்தையை இன்று உலகில் எல்லோரும் உச்சரிக்கும் நிலை உருவாகியுள்ளது. ‘தன்னையறிந்தவனுக் குத் துயரேதுமில்லை’ என்பது மூத்தோர் வாக்கு. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் உச்சநிலையில் உளவியல் நோய்களிற் கெல்லாம் அடிப்படை மருந்தாகவுள்ளது இந்தத் தத்துவம்தான்.

உளவியல் நோய்கள் என்பன தனியே மனதை மட்டும் பாதிக்கும் நோய்களல்ல. உடலையும் பாதிக்கின்றன. உளவியல் நோய்களால் ஏற்படும் உடல் நோய்களை Psychosomatic Diseases/ Disorders என்பார் கள்.

நோய்க்கு மருந்து காணுமுன்பாக நோயை இனம் காண்பது அவசியமாகும்.

எம்மில் பலர் எமக்கு எற்பட்ட நோயை சரியாக சரியான நேரத்தில் இனம் காணாத தனால் நோயின் தீவிரத்துக்குள்ளாகி சிதைவுறுகிறார்கள். மனநலப் பாதிப்பு என்பது ‘பைத்தியம்’ எனக் கூறப்படும் சுய கட்டுப்பாடற்ற நிலையாகத்தான் எப்பொழு தும் இருக்குமென்பதில்லை. நோய் முற்றிய நிலையில் அத்தகைய ஒரு நிலை ஏற்படவும் கூடும். ஆனால் ஆரம்ப மனநல பாதிப்புள்ள நிலையில் ஒருவர் தனக்கு எற்பட்டுள்ள நோய் நிலையை இனம் காண்பது கடினமாகும். அல்லது இனம் கண்டும் அதனை ஏற்க மறுக்கும் அல்லது உதாசீனப்படுத்தும் நிலையில்த்தான் நோயின் பாதிப்புக்கள் அதிகரித்துச் செல்ல வாய்ப்பாகின்றன.

இன்று மக்கள் மத்தியில் காணப்படும் பல உடல் நோய்களுக்கு மனமே பிரதான காரணமாக உள்ளது என்பது நம்பக் கடின- மாக இருப்பினும் உறுதியான உண்மை யாக உள்ளது.

உலக மாந்தருள் பெரும்பான்மையான வர்கள் மனநோயாளிகள் என்றால் இதை நம்ப எவராலும் முடியுமா,? உண்மை அது தான். ஆனால் நாம் மனநல மருத்துவம் மூலம் எம் நோய்களை போக்கிட முயல மறுக்கின்றோம். மனநல மருத்துவம் என் றால் சமுகம் எம்மை தவறாகநினைக்குமோ என்ற பயம் வெட்கம் காரணமாக வைத்தி யத்தை புறக்கணிப்பவர்களாக பெரும்பாலா னோர் திகழ்கின்றனர்.


‘உடலில் ஏற்படும் கட்டிகளையும் சீழையும் நீக்குவதைவிட மனதில் தோன்றும் தவறான எண்ணங்களை நீக்குவது சாலச் சிறந்தது’ என்கின்றார் அறிஞர் எபிக்டெடஸ். கற்கால மனிதர்கள் உடலில் தீய ஆவி புகுவதால் நோய்கள் ஏற்படுவதாக எண்ணினர்.

> “ காலங்காலமாக மதங்கள், மந்திரங்கள் என மக்களின் அறியாமையை முதலீடாகக் கொண்டு மதபோதகர்களும் பூசாரிகளும் மந்திரவாதிகளுமென மனிதர்களே மனிதர்களை ஏமாற்றி மனப்பயத்திற்குட்படுத்தி சுயஇலாபம் ஈட்டிவந்தனர். இன்றும் படை யெடுத்துவரும் யோசியர்களும் பூசாரிகளும் இத்தகைய ஏமாற்றுக்காரரின் ஒரு பிரிவினரே ”

அதையே இக்கால மனிதர்களும் மடத்தன மாக எண்ணுவது விந்தையானதொன் றாகும். தற்கால மனிதர்கள் கற்கால மனோநிலையை தமது அறியாமைகளாக வளர்த்துக் கொள்வதை விடுத்து இக்கால மருத்துவத்தின் மூலம் தம் நோய்களை தீர்க்க முன்வர வேண்டும்.

காலங்காலமாக மதங்கள், மந்திரங்கள் என மக்களின் அறியாமையை முதலீடாகக் கொண்டு மதபோதகர்களும் பூசாரிகளும் மந்திரவாதிகளுமென மனிதர்களே மனிதர் களை ஏமாற்றி மனப்பயத்திற்குட்படுத்தி சுய இலாபம் ஈட்டி வந்தனர். இன்றும் படை யெடுத்துவரும் யோசியர்களும் பூசாரிகளும் இத்தகைய ஏமாற்றுக்காரரின் ஒரு பிரிவினர் என்பதை ஏனோ படித்தமக்கள் கூட உணர மறுக்கின்றனர்.

தன்னையறிந்தவனுக்கு தெய்வமும் பேயும் தனக்குள்ளேயே தான் என்னும் உண்மை நிலை புலனாகும். உணர்ச்சிகளை நெறிப் படுத்துபவனால் மனநலத்தோடும் உடல் நலத்தோடும் வாழ முடியும். உணர்ச்சி களை உதாசீனப்படுத்தவோ அடக்கிவைக் கவோ கூடாது. மனிதனை மனிதனாக்கு பவை அவனது உணர்ச்சிகளும் சிந்தனை களுமாகும். சிந்தனைகளும் உணர்ச்சி களும் இரண்டாகக் கலந்து காணப்படினும் தனித்தனியாக வேறுபிரிக்கக்கூடியவை. இவ்விரண்டுக்குமிடையே உள்ள சம




நிலையே மனிதமனதின் சமநிலையாகும். உணர்ச்சிகள் சிந்தனைகளால் மழுங் கடிக்கப்படுவதை இன்றைய உலகில் காண் கின்றோம். அது சரியல்ல. உணர்ச்சிகள் உடல் உள வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன. மனித உணர்ச்சிகள் பிரதானமாக நான்காகப் பிரிக்கப்படும்.

இன்பம், துன்பம், கோபம், பயம்

எம்மைப் பாதிக்கும் உணர்ச்சிகளை நாம் எதிர்கொள்ளும்போது பெரும்பாலும் அவற் றிடமிருந்து எம்மை விடுவிக்க ஓடவிளை கின்றோம். மாறாக அவற்றை எதிர்கொண்டு அவற்றின் மூலகாரணங்களை ஆராய்ந்து அவற்றை களைவோமாயின் தொடர்ந்து அவ்வுணர்வுகள் எம்மைத் தாக்க வரமுடி யாது. இத்தகைய எதிர் கொள்ளலுக்கும் சுயகுணமிக்கலுக்கும் சிந்தனையின் துணை எமக்குத் தேவைப்படுகின்றது.


சிந்தனைகள் மனித பரிமான வளர்ச்சியில் தாமாக செயற்பட ஆரம்பித்தவையாகும். சிந்தனைகள் பல சமயங்களில் ஆரோக்கி யமாக இருந்தது போல் இது பல சமயங்களில் மனிதனை வீழ்த்தவும் கார ணமாக வந்ததை மனித பரிணாம வளர்ச்சி வரலாறுகளில் இருந்து காணலாம். உணர்ச்சிகளை அடக்கும்போது அவை ஆழ்மனதில் தேங்கியிருந்து உடலில் நோய்களாக வெளிப்படுகின்றன என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. உலகில் எந்த உணர்ச்சிகளும் தேவையா னவை தான். ஆனால் அவை மிகை யாகாமல் அளவோடு இருக்க வேண்டும். இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்கருத்தை மிகச்சிறப்பாக தன் குறளில் வள்ளுவர் “மிகினும் குறையினும் நோய் செய்யும்” எனக்கூறியுள்ளார். ஒருவர் உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றார் என்பதற்கு ஒவ்வாத உணர்ச்சி மாற்ற வெளிப்பாடுகள் நோய்க்குறிகளாக உள் ளன. சூழ்நிலைக்கு ஒவ்வாத மாறான உணர்ச்சி வெளிப்பாடானது மனநோயின் ஓர் அடையாளம் என உளவியலாளர் களால் இனம் காணப்படுகின்றது.

### மனநோய்க்கான அடிப்படைக் காரணங்கள்

உடற்கூறு: நரம்புமண்டலம், மூளை
குடும்பச் சூழ்நிலை
பாரம்பரியம்
ஆளுமை வளர்ச்சியிலுள்ள குறைபாடுகள்.
அதிர்ச்சியூட்டும் வாழ்வின் நிகழ்வுகள்
உடலில் சுரக்கும் ஹோமோன்களின் சம- நிலைக்குலைவு.

மனித மனமானது “சிக்மன்ட் பிராய்டு” எனும் உளவியலாளரால் மூன்று நிலைக- ளாகப் பிரிக்கப்படுகின்றது.

வெளிமனம் (Conscious mind) புற உலகுடன் தொடர்புடையது
இடைமனம் ( Pre-Conscious mind) வெளி, ஆழ் மனதுடன் தொடர்பு
ஆழ்மனம் (Unconscious mind) 90 வீதமான




மனம்
நிறைவேறாத உணர்வுகள் ஆழ்மனதில் பதிந்து பின்நாள்களில் உடல் உள நோய்களாக வெளிப்படுகின்றன. பயம், வெட்கம், தாழ்வு மனப்பான்மை, பதட்டம், தனிமையுணர்வு போன்ற உணர்வுகள் உருவாவதற்குக் காரணம் எம் வாழ்வின் கடந்தகால கசப்பான அனுபவங்களே யாகும். இவற்றை விடவும் காரணங்கள் பல உள்ளன. மேலே கூறிய உணர்வுகள் தவறானவையல்ல. அவை எமக்கான கவசங்கள். ஆனால் அளவறிந்து அனுப

46ம் பக்கம் பார்க்க...

Location ! Location! Location
BRAND NEW HOUSE FOR SALE



McCowan & Dennison சந்திப்பிற்கருகில் சகல வசதிகளும் (TTC, School, Go Train, Community Center, Mall, Grocery shops போன்றன) அருகாமையில் உள்ள குடிபுகாத புதிதாக கட்டப்படுகின்ற 5 அறைகளையும் 4 குளியளறைகளையும் கொண்ட அழகான புதிய வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

விலை $474,900.00

தொடர்புகளுக்கு: HARAN (416) 522-3314

# மனமே கலங்காதே...

45ம் பக்கத் தொடர்ச்சி...

விக்க வேண்டிய கவசங்கள். எம்மை நாமாக ஏற்றுக்கொள்ள மறுக்க வைக்கும் முகமூடிகளாக இக்கவசங்கள் அமையாமால் நாம் எம்மை இவற்றிலிருந்து காப்பாற்றுவது அவசியமாகும்.

மனிதமன ஆளுமை வளர்ச்சிகள் சிறு பிராயத்திலிருந்தே தீர்மானிக்கப்படுபவையாகும். சில பெற்றோரின் தவறான வளர்ப்பு முறையால் முழுமையடையாத ஆளுமையின் அடித்தளத்தில் முகமூடியணிந்த வேண்டா உணர்வுகள் மண்டியிட்டுக் கிடந்து தவறான மனிதர்களாக செய்ற்படத் தூண்டுகின்றன. என்னுடைய உணர்ச்சியே நான் என்பதை எவர் புரிந்து கொள்கின்றாரோ அவர் தன்னைத்தான் குணப்படுத்தவல்ல வைத்தியனாகின்றார். தன்னில் தவறுகள் எப்படி நேர்ந்தாலும் தன்னைத் தான் திருத்தி நெறிப்படுத்த ஒருவனால் முடியுமாயின் அவனது வாழ்வு குறைவற்றதாகின்றது.

உண்மையைச் சொல்வதானால் உடல் நோய்களைவிட கொடியவை உள நோய்கள். மனத்தளர்ச்சி இன்று மனித சமுதாயத்தை அதிகமாகவும் தீவிரமாகவும் பாதிக்கின்ற பெரும் உளநோயாக மாறிவருவதனைக் காணமுடியும். ஆண்களைவிட பெண்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுவதாக தரவுகள் கூறுகின்றன.

### இந்நோயின் அறிகுளிகள்:

உணர்ச்சிகளில் ஏற்படும் மாற்றம்:
கவலை
பதட்டம்
குற்றப்பழி உணர்வு
கோபம்
பகலில் உணர்ச்சி மாறுபாடு

### உடலில் ஏற்படும் மாற்றம்

உறக்கம் போதாமை
உணவில் சீரின்மை
மலச்சிக்கல்
காலந்தவறிய மாதவிடாய்
உடல் எடைக்குறைவு
பலவீனம்
வலி: நெஞ்சுவலி, வயிற்றுவலி, தலைவலி, முதுகுவலி
பாலுணர்வில் விருப்பமின்மை

### சிந்தனையில் ஏற்படும் மாற்றம்.

தன்னைப் பற்றிய தப்பெண்ணம்
உலகைப் பற்றிய தப்பெண்ணம்
எதிர்காலத்தைப் பற்றி அதிகஎதிர்பார்ப்புகள்
தன்னையும் பிறரையும் குறை கூறுதல்

> “ இயற்கை அழகையும் கலைகளையும் இரசிக்க வேண்டும். குறைகளை நிறைகளாக்கிப் பார்க்கவும் பகைவர்களை நண்பர்களாக்கிப் பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். ”

முடிவெடுக்க இயலாமை
போலி நம்பிக்கை
நம்பிக்கையற்ற நிலை
பொருளற்ற வாழ்வு எனும் கருத்து உதவியற்ற நிலை

### செயலில் ஏற்படும் மாற்றங்கள்

அழுகை
ஒதுங்கியிருத்தல்
மாறுபட்ட கண்ணோட்டம்
மனக்குழப்பம்
நிம்மதியற்ற நிலை

தாழ்ந்த குரலில்ப் பேசுதல், நம்பிக்கையினமான பேச்சு, அக்கறையின்றிச் செயற்படுதல், தூக்கத் தொல்லைகள். ஏமாற்றம், அச்சம், துயரம் என்பன நோய்க்குறிகளாகும்.

தற்கொலை எண்ணம் மனத்தளர்ச்சியுடையோரில் 15 வீதமானவர்களுக்கு ஏற்படும் என வைத்தியர் சோமசுந்தரம் அவர் கள் ''மனநோயும் இன்றைய மருத்துவமும்'' என்ற நூலில்க் குறிப்பிடுகின்றார். இத்தகைய கொடிய வியாதியில் இருந்து மீளவே முடியாதா என கவலைப்படத் தேவையில்லை. நவீன உலகில் அனைத்து வகையான மன வியாதிகளுக்கும் மருந்துண்டு. எனினும் உளவியல் ரீதியில் சில மனோபாவங்கள் மூலம் எம் மனதைச் சீர்படுத்தும் கலையை நாம் கற்றுக் கொண்டோமேயானால் இத்தகைய நோய்களை இலகுவில் குறைக்கலாம்.

முதலில் மாற்ற முடியாத வாழ்வின் திணிப்புக்களினால் ஏற்படும் மாற்றங்களை முகங்கொடுத்து ஏற்றுக் கொள்ளும் மனவுறுதியையும் மனப்பக்குவத்தையும் நாம் பெற வேண்டும். மனத்தளர்ச்சியின் காரணங்கள் உணர்வு, சிந்தனை, உடல், செயல் ஆகியவற்றில் தென்படும் நோய் அறிகுறிகளை இனம் காணப்பழக வேண்டும். எந்தத் தாக்கத்தினையும் சமமான எதிர்த் தாக்கினால் சமநிலைக்குள்ளாக்க முடியம் எனும் பௌதிகவியல் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டும் மனதின் எண்ணப்பாங்கினை மாற்றியமைத்து சிந்தனையையும் செயலையும் உணர்வுகளையும் நெறிப்படுத்துவோமாயின் வாழ்க்கை எம்கையில் எம்வசமாகும்.

'பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை உங்களால் தடுக்க முடியாது. ஆனால் உங்கள் தலையில் அவை கூடுகட்டாமல்த் தடுக்க முடியும்' எனும் பழமொழிக்கமைய வாழ்வில் எதுவந்தாலும் எம்மை வாழ்வு நிலைகுலையச் செய்யாமல் பார்த்துக் கொள்வோமாயின் வாழ்வினை வென்று வாழலாம்.

இற்றைக்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க தத்துவ விஞ்ஞானியான "பிளேட்டோ" கூறியது போல் மனதைக் குணப்படுத்தாமல் உடலைக் குணப்படுத்துவதால் எவ்வித பலனுமில்லை.

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பார்கள். வாழ்வில் இன்பங்களோ துன்பங்களோ யாவும் நன்மைக்கே என எண்ணி ரசனையுணர்வோடும், சவால் மனப்பாங்கோடும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்வில் நம்பிக்கை வைக்க வேண்டும். எம் எண்ணங்களின் பாங்கினை மாற்றியமைக்க வேண்டும்.

இயற்கை அழகையும் கலைகளையும் இரசிக்க வேண்டும். குறைகளை நிறைகளாக்கிப் பார்க்கவும் பகைவர்களை நண்பர்களாக்கிப் பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். எந்த மன அழுத்த நோய்களும் தனிமனித ஆளுமையைப் பொறுத்தே அமைகின்றது. திறமைகளையும் சத்திகளையும் வர்த்துக் கொண்டு அவற்றை ஆக்கப்பணிகளின் பால் பாய்ச்சுவோமாயின் இத்தகை நோய்கள் உருவாகா. கடின உழைப்பாளிகள் கடின உழைப்பின் பின் ஓய்வு எடுக்க வேண்டும்.

'கனிவும் பரிவும் எவரையும் களிப்புறச் செய்யும்' ஆதலால் அனைவரோடும் அன்பாக இருந்து அவர்களுக்கான மதிப்பீடுகளை புரிந்து மதித்து நடக்க வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவருமே ஒருவருக்கொருவர் விதியாசமானவர்கள். எமது வித்தியாசங்களே எமது பலமும் பலவீனமும் என்பதைப் புரிந்து கொண்டால் தனித்துவமிக்க சமத்துவ சமுதாயத்தினைக் கட்டி எழுப்பலாம்

வாழ்க்கை ஒரு முறைதான் வாழும் வாழ்வை இன்பமாகவும் முழுமையாகவும் நிறைவாகவும் வாழலாமே!

■ ■ ■


$364,900



Morningside/401
BR 3, WR 3
2 Years New Property, Immediate Closing Available, Minuts Walk To Uft Scarborough Campus, Centenial College, Shopping And Other All Amenties. Easy Access To Hwy 401

$365,000



Markham/Passmore
BR 3, WR 3
Immaculate Mattamy Built Home 'The Springbrook Corner Model' Approx 1800Sqft. Beautiful & Well Maintained. Hardwood Flr In Lr/Dr & Family Rm.

$378,800




Mccowan/Raymerville
BR 3 , WR 4
Fabulous Family Home,Raymerville Area,Thousands Spent On Upgrds,New Kitchen,Gorgeous Ensuite W/Jacuzzi,Prof Finished Lower Level W/3-Pc Bath,Rec Rm &

$399,900



Wootten Way South
BR 4, WR 4
Charming Home. Easy To Move In And Enjoy The Updated Landscaping, Well Kept Newly Renovated Kitchen, Freshly Painted, Neutral Decor. Wrap Around Deck Off Family Room.

$399,900



16th Ave Btwn 48&9th
BR 3+2, WR 3
Lovely 1 1/2 Storey Home,3Yrs New,9' Ceilings On Main housands Spent On Upgrds,Mins To 2 Schools,407 To 404 & Go Train.

நிச்சயமாக எனது கவனம்
உங்கள் மனநிறைவில்தான்!!

0% Down Mortgage Available
for qualified Applicants only

Free Market Evaluation

HomeLife/ GTA Realty Inc.
Realtor Member




வசந்தி நிரஞ்சன்
Vasanthy Niranjan
Sales Representative

1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963
vasanthy_nir@hotmail.com

Cell: 416•845•8272

Each office is independently owned and operated


tvi
Tamil Vision Int.
cmr
Diversity FM 101.3
கொண்டாட்டம்
தெற்காசிய விழா
2007
South Asian Festival
நகைச்சுவை நாடகங்கள்
பல்கலாச்சார நடனங்கள்
இன்னிசை கச்சேரிகள்
FOOD
MUSIC
DANCE
CARNIVAL RIDES
CIRCUS
MAGIC
TRADE SHOW
For info
416-593-9300 ext. 251
www.businessfestival.ca
FREE PARKING, SPECIAL SHUTTLE BUSES AND GO TRANSIT ON-SITE
TICKETS
$10 Adult, $5 Kids (5-12)
Under 5 FREE
ROBOTICS COMPETITION!
MAY
19 SAT
20 SUN
10AM - 10PM
6900 Airport Road
(Airport Rd. & Derry Rd.)
INTERNATIONAL CENTRE
tvi's Dhill
Bharathanatyam
Comedy Dramas
Food Court
Trade Show
Carnival Rides
Robotics Competition
Cine Dances
Hip Hop Dance
Seniors & Kids shows
Bhangra
Talent Search
African Drums
Agni
Bharradhi Arts
Paattukku Paattu
Punjabi / Urdu Concerts
"Bass"ment Sound Crew
இசையரங்கத்தின் முற்றத்து மல்லிகை
pizza pizza
ROGERS
ASIYANS
416-438-6568
Surati
Indian Pleasures.
Same great tasting snacks now in a new pack!
Jay Brand
Groceries & Sea Foods Direct Importers
416-724-1067
SEYON PRINT SPS SOLUTION
416-439-7703
t junction
416-548-7888
THE LAW OFFICE OF
GaryAnandasangaree
416-321-1100
WESTERN UNION
Fast, Reliable, Worldwide Money Transfer
RE/MAX Above the Crowd Executive Realty Inc.
Rajeef Koneswaran
416-568-1078
Sasi Kunaratnam
416-754-HOME (4663)
www.TeamMaxPros.ca
Robotics Competition Sponsors
The Law office of Yaso Sinnadurai
416-265-3456
Netcom College
Program Sponsors
UNICAN
invis
Wimal Navaratnam
416-561-9345
Lalitha Jewellery Mart
416-335-1553
MegaPro Designers
416-321-1661
1-866-910-2776
MJS
416-335-3100
Ticket Sponsor
White Pine Motel
1-866-796-7333
FREE PARKING, SPECIAL SHUTTLE BUSES AND ON SITE GO TRANSIT



தங்கமுளை நாட்டுப்பற்றாளர்
V. நவரத்தினம் நினைவுக் கலையரங்கில்
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் - கனடா
பெருமையுடன் வழங்கும்
மாவிலி வசந்தம் 2007
Est. 1993
May
05
Saturday
5.30 pm
Sir John A Macdonald C.I
2300 Pharmacy Ave.
(South of Finch Ave.)
Tel: 416- 277 9471 416- 857 4379
416-554 8290 416- 898 4846
நாடகம்
மனவெளி கலையாற்றுக்குழு வழங்கும்
புராந்தகனின்
"துயருள் தோயும் தூரிகை"
நடனம்
வாசு சின்னராசாவின் மாணவிகள்
நாட்டிய நடனம்
கலைக்கோவில் திருமதி வனிதா குகனின்
"எங்கள் தீவகம் "
இன்னிசை விருந்து
பயாஸ் சுவாமிரின்
சுப்பர்சன் இசைக்குழுவினர்
மெல்லிசை விருந்து
இசைச்சுடரொளி
திருமதி விஜயலஷ்மி சீனிவாசகம்
இன்னும்..
இன்னும்.......
இன்னும் பல
முக்கிய அறிவித்தல்
இம் மாவிலி வசந்தம் அன்று எமது
உறவுகளின் ஆதரவுடன்
கனடா செஞ்சிலுவைச் சங்கமூலம்
கணிசமான உலர்உணவுப் பொதிகளை
உணவு வங்கிக்கு வழங்கவிருப்பதால்
தங்களின் மேலான பங்களிப்பாக
ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவு
உலர் உணவுப் பொதிகளை
(Ex. Can food, Cereale ect..)
வழங்குவதன் மூலம்
நாம் வாழும் பல்லின சமுகத்திலும்
எமது ஒன்றியத்தின்
சேவையை உறுதிப்படுத்த உதவுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்
நன்றியுடன்
நிர்வாகம்
நெ.ம.ஒ 2007
மேலதிக விபரங்களுக்கு
416-898 4846, 416-277 9471
416-85743 79
CENTUM
Advance Realty Inc.
சண். கணபதிப்பிள்ளை
416- 890 2300
பஞ்
சொக்கலிங்கம்
416-414 2374
ஆதரவுடன்
இவர்கள்...
Dr. Satyabooma
Manoharan
KINGSTON-MORNINGSIDE
Medical Centre
416-287 3100
Tom Thiru
VKT Financial
416-726 7748
CLARICA
Ajith Sabaratnam
647- 401 5800
ROYAL LEPAGE
Connect Realty
Kannan Kankesu
Cash Point
The Buck Starts Here!
416-284 7000
416-277 9471
SANA Group
416- 220 9179
STANDARD
MORTGAGES INC.
TeL: 416 - 298 1700
Mobile: 416 - 993 2638




Free Alarm System Stating from $19.95
Protectron
Residential & Commercial Alarm Systems
Special Offer
• Free Installation
• 2 Digital Key Pad
• 3 Motion
• All Windows & Doors
• Garage Opener
• Tel & Cable
• Burglar alarm
• fire alarm
• police emergency
• Medical alert
Security Camera
Garage Door Opener
Range Hood
New Home Buyer!
• Dish Washer • Ice Maker
• Waser & Dryer • Phone Jack
Insulation and Labour FREE
(some conditions may apply)
• General Contractors • Sales • Service • Installation
Please Call for a FREE in-home product consultation
647-893-4414



தமிழன் வழிகாட்டி வழங்கும்

செந்தியின்

# வர்த்தகச் சோலை 2007

## South Asian Trade Show






**இரண்டு நாட்களும் வெவ்வேறு நிகழ்ச்சிகள்**

**150 க்கும் மேற்பட்ட வர்த்தகச்சாவடிகள்**

**கலைநிகழ்ச்சிகள்**

**கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, Chess**

**சிறுவர், இளையவர், முதியவர்களிற்கான பல்சுவை நிகழ்ச்சிகள்**

அன்னையர் தினத்தை முன்னிட்டு
பகல் 12 மணிவரை
அன்னையருக்கு பிரவேசம்
இலவசம்

5 வயதிற்குட்பட்ட
சிறார்களுக்கு பிரவேசம்
இலவசம்







ஆதரவு
*வீடு வாங்க... விற்க...*

**ரஞ்சன் பிரான்சிஸ்**
*Sales Representative*
Dir: 416-816-1220
Bus:416-284-4751
880 Ellesmere Road. Suite 203, Scarborough

இன்னிசைக் கச்சேரி




ஆதரவு **RAJAGURU MARTIAL ARTS ACADEMY**
*For Your Class*
**416-391-3514**




*For Stalls Booking & Information*
**Athavan Publications Inc.**
**Tel: 416.615.4646**

பிரவேசம் **$5**

DOWNSVIEW PARK
SHEPPARD & KEELE
MAY
12 & 13
Sat & Sun
10am. to 10pm.

### வர்த்தகச்சோலையில் Chess போட்டி

வர்த்தகச்சோலையில் Chess போட்டி நடைபெற உள்ளது. பங்குபற்ற விரும்புவர்கள் உடனடியாக தமிழன் வழிகாட்டி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### வர்த்தகச்சோலையில் Volleyball சுற்றுப்போட்டி

வர்த்தகச்சோலையில் Volleyball விளையாட்டுப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக உங்கள் அணியினை பதிவு செய்து கொள்ளுங்கள். யுனைடெட் தமிழர் விளையாட்டு அமைப்பு Volleyball விளையாட்டுப்போட்டியினை ஒழுங்கமைக்கின்றனர்.

### வர்த்தகச்சோலையில் சிறுவர்களிற்கான சித்திரம் வரைதல் போட்டி

வர்த்தகச்சோலையில் சிறுவர்களிற்கான சித்திரம் வரைதலுக்கான தேர்வு நடைபெற உள்ளது. வீட்டில் இருந்தே சித்திரங்களை வரைந்து கொண்டு வரமுடியும். ஆனால் முற்கூட்டியே போட்டியில் பங்கு பற்றுவதற்கு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

### வர்த்தகச்சோலையில் Soccer

வர்த்தகச்சோலையில் Soccer விளையாட்டு Friendly Match ஆக நடைபெற உள்ளது. பங்கு பற்ற விரும்புவோர் உடனடியாக தமிழன் வழிகாட்டி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### வர்த்தகச்சோலை சாவடி இலக்கம்185ல் கனடாவின் தளபாடவிற்பனையின் முன்னணி நிறுவனம் Brick


வர்த்தகச்சோலையில் பங்குபற்றுவோருக்கு $300 டொலர் பெறுமதியான கூப்பன்களை வெஸ்ரன் & 401 சந்திப்பில் அமைந்துள்ள BRICK ஸ்தாபனம் வழங்க முன்வந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகிறோம். (சில நிபந்தனைகள் உண்டு) அது மட்டுமல்லாது "கொள்வனவு விலையில்" தளபாடங்களையும் மற்றும் மின்சார உபகரணங்களையும் வாங்கவும், VIP SAVINGS CERTIFICATEகளும் வழங்கப்படவுள்ளது. அத்தோடு 15மாதத்திற்கு வட்டி இல்லாத கடன் உதவியும் வழங்கப்படுகிறது. Brick ஸ்தாபனத்தின் வர்த்தகச்சாவடி இலக்கம் 185ற்கு சென்று Brick விற்பனை முகவர் அனற்றா பிரான்சிஸிடம் தமிழில் உரையாடி சலுகைகளை வெல்லுங்கள்

# M and M CONSULTANTS

**Serving 21years in Canada**
**www.mandmconsultants.net**



- *Advice on Bankruptcy*
- *Credit Counselling*
- *Arrangement with Creditors*
- *Corporate Taxation*
- *Interview with CCRA and Ministry of Finance on Audit issues*
- *Settlement without Bankruptcy / Consumer Proposals*



**2075 Lawrence Ave East #203**
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
**Tel: 416-266-0706**
**Fax: 416-256-2876**

**3645 Bathurst Street #212**
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
**Tel: 416-256-9550**

# SERANDIBTRAVEL.COM

## SPECIAL TOURS AVAILABLE NOW!

### KAILASH MANSAROVAR YATRA

THE SPRITUAL TOUR TO THE ROOF TOP OF THE WORLD

>17 days / 18 nights
>Departures:
April 30th - September 3rd, 2007
(Every Monday)
>Cost: $4,980.00 CAD

serandibtravel.com





### ALL INDIA PILGRIMAGE TOUR

### MALAYSIA-THAILAND -CAMBODIA TOUR

### GUIDED TOUR TO CUBA

### AUSTRALIA & NEW ZEALAND TOURS

### EUROPEAN TOURS

Serandib Travel

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# கோடை விடுமுறை

திரு மகேசன்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கனடா நாட்டில் உல்லாசப் பிரயாணத்துறைக் கேற்ற அருமைபெருமை நிறைந்த வள மானபகுதிகளில் எப்படி விடுமுறைக் காலங் களைக் களிக்கலாம் என்பதைப் பற்றி விரி வாக எமது சென்ற கட்டுரைகளில்க் கண் டோம். விடுமுறைக் காலங்களுக்கு பட்டியல் போட்டு பெட்டி படுக்கைகளுடன் புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். Camping, Fishing, Hunting என்பவற்றோடு கேளிக்கைகள் நிறைந்த பல இடங்களையும் கண்டுகளிக்க திட்ட மிடல் மூலம் ஒரு பூரணத்துவமான பய ணத்தை மேற்கொள்ளலாம். விமானமு லமோ, கப்பல் மூலமோ அல்லது தரை-வழிப் பயணமாகவோ பயணத்தை ஆரம்பிக் கலாம். எந்தத் திசையில் எத்தனை நாட்கள் பயணிப்பது என்பது ஒரு கேள்விக் குறியாகவே நம்மவரில் பலருக்கும் இருக் கும் ஒரு மிகப்பெரியபிரச்சனை. தூரப் பயணம் செய்து நம்நேரத்தை செலவழிப் பது கடினம் என்று எண்ணுபவர்களுக்கு இலகுவாக இம்முறை எம்பயணக் கட்டுரை அமெரிக்காவின் மிகப்பெரும் கேளிக்கைகள் நிறைந்த சிறுவர் முதல் முதியோர்வரை கவரக்கூடிய பலப்பல கண்கவர் கவர்ச்சி அம்சங்கள் நிறைந்த புளோரிடா பற்றிய தாகும்.

அத்திலாந்திக் சமுத்திரத்தின் கிழக்குப் புறமாகவும் மெச்சிக்கோ வளைகுடாவின் மேற்குப்புறமோடும் அழகுறக் காட்சியளிப் பதுதான் இப் புளோறிடாவாகும். 1513 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி Juan Ponce Deleon என்பவரே முதல் முதலாக கனது காலை இங்கே பதித்தார். ஈஸ்ரர் காலத்தில் இவர் சென்ற்.அகஸ்ரின் என்ற இடத்தில் கால் ஊன்றியவுடன் இந்த இடத்திற்கு இட்ட பெயர்தான் Pascua Florida என்பதாகும் ஸ்பானிஸ் மொழியில் இச்சொலல்லானது ஈஸ்ரர் காலத்தைக் குறிப்பதாகும். புளோறிடாவின் தலைநகர மாக Tallahassee நகரமும், மிகப்பெரிய நகரமாக ஜக்சன்வில் உம் கலாச்சாரக் களியாட்டங்கள் நிறைந்த நகரமுமாக மியாமியும் விளங்குகின்றது.

65795 சதுர பரப்பளவு கொண்ட பிரதேசம் இதுவாகும். கரிபியன் நாடுகளுக்கு மிக அண்மித்தாகவும் பகாமாஸ், கியூபா ஆகிய இரு நாடுகளுக்கும் மிக நெருக்கமாகவும் புளோறிடா அமைந்திருக்கிறது. கடல் மட்டத்திற்கு 345 அடிக்குமேல் காணப்படும் பிரிட்டன் கில் தான் புளோறிடாவின் உயர் ந்த நகரமாகும். ஸ்பானிஸ் மொழி பேசும் மக்களால் பிரபலப்படுத்தப்பட்ட புளோறிடா வானது காலப்போக்கில் ஆங்கில மொழி ஆதிக்கத்துக்குள் மாறத் தொடங்கியது. ஆனாலும் இன்னமும் பெரும்பான்மையோர் ஸ்பானிஸ் மொழியை பேசுவதைக் காண லாம். புளோறிடா பல்கலைக்கழகமானது இன்றைய அமெரிக்க நாட்டின் தலைசிறந்த அரசியல் தலைவர்களை உருவாக்கிய பெருமைக்குரியது. புளோறிடாவின் ஆளுந ராகக் கடமையாற்றுபவர் அமெரிக்க ஜனாதிபதியின் சகோதரர் பெவ் புஸ் என் பது இம்மாநிலத்திற்கு பெருமைசேர்ப்ப தோடு வேண்டியவற்றையெல்லாம் இலகு வில் கேட்டுப் பெறக்கூடிய ஒரு மாநிலமா கவும் அமைந்துவிட்டது.

தரைவழிப்பாதையூடாக பயணம் செய்பவர் கள் தமது நேரத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். மலைப்பாறை கள் நிறைந்த வேர்ஜினியா, நோர்த் கரொலைனா, சவுத் கரொலைனா வழியாக புளோறிடாவினுள் காலடி வைக்கலாம். இன்ரர் ஸ்ரேட் 75 வழியாகப் பயணம் செய்பவர்கள் தமது வேகத்தில்க் கவனம் எடுக்க வேண்டியது மிகமிக அவசியம். கார ணம் தரை, வான் கண்காணிப்புக் கருவி மூலம் உங்கள் வேகத்தை புளோறிடா பொலிசார் கண்காணித்தபடியே இருப்பர்.

மார்ச் விடுமுறை காலத்தில் அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் மியாமி இல் சந்தித்து ஆட்டம் பாட்டம் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதால் இக கால கட்டத்தில் புளோறிடாவிற்கான பிரயாணத்தை மேற்கொள்வது உசிதமல்ல. இக்கால கட்டங்களில அதிக அளவு பணத்தை தங்குமிட வசதிக்காக செல-வழிப்பதோடு எமது நேரத்திற்குள் பார்க்க வேண்டிய இடங்களை தவறவிட வேண்டிய கட்டாயமும் ஏற்படும். இது மட்டுமன்றி நமது பயணநேரத்தில் இரண்டு நாட்களை முற்றுமுழுதாக வீதிப் பயணத்திலேயே கழிப்பதோடு திரும்பிவரும்போதும் மீண்டும் இரண்டு நாட்களை பயணத்திலே செலவிட வேண்டி வருவதால் மிகுந்த களைப்பு டனேயே திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனாலேயே பெரும்பாலானவர் கள் புளோறிடா நோக்கிய தமது பயணத்தை தம் சொந்த வாகனத்திலேயே செய்வதைத் தவிர்த்துவிடுகின்றனர்.

இதற்காகவே ஒழுங்கு செய்யப்பட்ட விசேட சொகுசு பஸ்வண்டிகளில் பயணத்தை மேற் கொள்வது உசிதமாகும். இப்படிப்பட்ட பஸ் வண்டிகளிலும் கிட்டத்தட்ட 23 மணிநேரப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டா யம் ஏற்படுகின்றது. அதிக நேரம் ஆசனங் களில் அமர்ந்து பயணம்செய்ய முடியாதவர் கள் இப்படிப்பட்ட நீண்ட நேரப் பயணத்தை தவிர்ப்பது மிகநல்லது. இல்லையேல் நீங்கள் சந்தோசமாகக் களிக்கவேண்டிய உல்லாசப் பிரயாணத்தை கவலையுடன் அனுபவிக்க வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படும். இன்றைய காலகட்டத்தில் வழிப் பயணத்தில் பலஇடங்களையும் கண்ணாரக் கண்டு புளோறிடா சென்றடைய விருப்புபவர் கள் இவ்வழியைத் தெரிவு செய்யலாம்.





இந்த வழியில் நீங்கள் வேர்ஜினாவினதும் நோர்த் கரோலினாவினதும் அழகை நிச்சய மாக அனுபவிப்பது உண்மை.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இக்காலகட் டத்தில் பலரும் இலகுவாகவும் விரைவாக வும் பயணிப்பதையே விரும்புகின்றனர். அந்த வழியில் விமானமூலம் புளோறிடா வை சென்றடைய விரும்புபவர்களே அதிக மாக இருக்கின்றனர். மியாமி, ஒறேனோ, ரம்பா போன்ற இடங்களுக்கு Packagatour வசதிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது, இவ்வேற்பாட்டில் பயணம் செய்பவர்களுக்கு வேண்டிய Hotel, வாகனம் இவற்றோடு அங்கே கண்டு களிக்க வேண்டிய இடங்க ளுக்கான அனுமதிச்சீட்டுக்களும் குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யப் படுகிறது. இப்பொதி பயணமுறையில் செல் பவர்கள் மார்ச் விடுமுறையில் அல்லது கோடைகால பாடசாலை விடுமுறையில் அல்லது நத்தார் விடுமுறைக் காலத்திலோ செல்ல விரும் பினால் அதற்கான கட்டணம் சிறிது அதிக மாகவே இருக்கும். இந்நாட்களைத் தவிர் த்து பிரயாணம் செய்வதன் மூலம் நீங்கள் அதிக பணத்தையும் நேரத்தையும் மிச்சப் படுத்தலாம். விசேடமாக நத்தார் விடு முறைக் காலத்தில் Rlse Parade எனப்படும் டிஸ்னியினரால் ஒழுங்கு செய்யப்படும் பவனியைக் காண பல லட்சம் மக்கள் உலகெங்குமிருந்து கூடுவதால் பல வசதி யீனங்களை பயணம் செய்பவர்கள் எதிர் நோக்கலாம். அதுமட்டுமன்றி பலரும் விரும்பி ஏறும் Ride களில் செல்ல நீங்கள் பல மணிநேரங்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியும் ஏற்படும்.

சிறுவர்களின் கவர்ச்சி அம்சமான யுனிவேர் சல் ஸ்ருடியோ 48 அங்குலத்திற்குக் குறைந்த அளவுடையவர்களை அவர்களின் பெற்றோருடனேயே அனுமதிக்கின்றனர். சிறிய குழந்தைகளின் மிக்கி மௌஸ் முதல் த பூளு பிரதர்ஸ் வரையில் கண் ணைக் கவரும் கவர்ச்சி அம்சமே. நீங்கள் கொடுக்கும் பணத்திற்கேற்ப இங்கு விரை வாகவோ அல்லது தாமதமாகவோ எல்லா வற்றையும் கண்டு களிக்கலாம்.

Epcot, Walt Disney யானது டொனால்ட் டக் ஐக் கண்டு களிக்கும் இடமாகும். இவ் விடமானது இரண்டு பிரிவுகளாக அடங்கும். Future World ஒரு பகுதியாகவும் World show case இன்னொரு பகுதியாகவும் அடங் குகின்றது. பிரான்ஸ், ஜப்பான், மெக்சிக்கோ நாடுகளுக்கான பவிலியன்களும் Epcot ஐ அலங்கரிக்கின்றது. டிஸ்னி MGM ஸ்ருடியோவினுள் பிரவேசிப்பதே அலாதி யான இன்பமயமான நேரமாகும். முதல் தடவை இங்கே செல்பவர்களுக்கு இது ஒரு திரிலிங்கான அனுபவத்தைச் சுமந்துவரும். நாள் போவதே தெரியாமல் இருக்க அலாதியான Ride கள் உங்களைத் தாலாட்டும். உங்கள் காலுக்கு வசதியான சப்பாத்துக்களை அணியுங்கள். காரணம் நீங்கள் நீண்டதூரம் நடையாகவே திரிய வேண்டிய நிலை. சண் கிறீம், மிக விரை வாக உலரக்கூடிய ஆடைகள் என்பன மிகமுக்கியமாகும். சிறிய குழந்தைகளை நீச்சல் உடைகளில் உலாவவிடுவதே நல்லது. அதிக அளவில் பைகளை உங்க ளோடு காவுவதை தவிருங்கள். துவாய் நிச்சயம் கையிலெடுக்க வேண்டும்.

இவற்றை எல்லாம் விட மூளைக்கு வேலை கொடுக்கும் கடல் உலகம், கென்னெடி விண்வெளி நிலையம் இரண்டையும் தவற விடவேகூடாது. புளோறிடாவிலுள்ள கடல் உலகம் உலகத்திலேயே மிகப் பெரிதும் மிக அழகானதுமானதாகும். உங்கள் குழந் தைகள் மட்டுமன்றி வயதானவர்களும் கூட கடல் உலகத்தில் இருக்கும் உயிரினங் களுடன் பல மணிநேரத்தை செலவிட்டபின் வெளியே வரும்போது அவர்களின் மனதில் அங்கே இருக்கும் டொல்பின், வேல்ஸ் போன்றவற்றின் குரல் காதில் கேட்பது போன்று இருக்கும். இங்கு மட்டுமே நீங்கள் உங்கள் மன அழுத்தம் குறைய கடல் உலகத்தை வலம் வரலாம்.

கென்னடி விண்வெளி நிலையத்தில் கட்டா யமாக நாமும் நமது குழந்தைகளுடன் விண்வெளி பற்றிய தகவல்களைப் பரிமாறி மாதிரி விண்வெளி ஓடங்களில் ஏறி அமர்ந்து நாமும் விண்வெளிக்குச் சென்று திரும்பிய பயணியையும் சில நேரங்களில் சந்திக்கும் பாக்கியம் கிடைக்கலாம். இன் னும் அதிகம் அதிஸ்டம் உள்ளவர்கள் விண்வெளிக்கு ஏதாவது ஏவப்பட இருந் தால் அது புறப்படும் அரிய காட்சியையும் காணலாம். எமது வாழ்நாளில் நாம்காணும் ஒரு அரிய சந்தர்ப்பமாகும்.

மொத்தத்தில் புளோறிடா புறப்படமுன் சரியான பிரயானமுகவரின் வழிகாட்டுதலின் கீழ் பொதிப் பயண ஒழுங்கை செய்யாது புறப்பட்டால் புறப்பட்டு திரும்பிவரும்போது உங்கள் நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவ தோடு விடுமுறையைக் களிக் கச்சென்று மனஅழுத்தத்தையும் மன வேதனையையும் சுமந்து கொண்டே திரும்ப வேண்டி வரலாம்.

புளோறிடா உல்லாசப் பிரயாணத்திற்கு ஒரு சொர்க்கபூமி. ஆனால் இந்த சொர்க்க பூமிக்கு இடக்கை, வலக்கை என்று திரும்பி சென்று எதையுமே அனுபவிக்காது திரும்பி வருவதைவிட சரியாக திட்டமிட்டு பிரயாண முகவரின் ஆலோசனையுடன் சென்று வாருங்கள்.

விமானம் நாளாந்தம் ஆயிரக்கணக்கான பயணிகளுடன் புளோறிடா நோக்கிப் பறக்கின்றது. எங்கே அடுத்த விமானத்தில் ஏறி உங்கள் பயணத்தை இனிதாக்குங்கள் நாங்கள் தயார். நீங்கள் தயாரா?

■ ■ ■

## Burnamthorpe/Mavis.




## $399,000

4 bedrooms detach house with 2 bed rooms basement apartment with separate entrance. 2500 square feet ,all hard wood floors, 170 feet depth(deep back yard),40 feet frontage and has a big size family room. close to Square one mall,few blocks from the Go station, plaza,school, bus close to hwy 403 and 401.

**specializing in Mississauga ,brampton and toronto**

**sell your house faster**

**as low as 1% commission call pera nathan**

### Trent Hills



**$23,999 Acres**

1.62 Acres Of Land. Percy Township. Municipality Of Trent Hills, Cambell Ford. Large Private Lot In Trent Hills. East Of Toronto. Only 90 Mins Drive From Toronto. Roll #1435-229-030-03022. Prime Development Land In The Near Future. Directly Opposite To Gummow Road.

### Windsor



**$22,000 Sq Ft**

Vacant Land Located On Ecorse Road, 4000 Square Feet Close To Windsor Prime Development Land In The Near Future.


### Hwy 10/Dundas



**$159,900**

2+1 Bedrooms, 1 Washroom, Condo Apt, Spectacular View Of City. Close To All Conveniences Best Describes This Open Concept Unit.


### Hwy 10/Central



**$174,900**

3 Bedrooms, 2 Washroom, Condo Apt, Large 3 Bdrm Corner Unit. Approx. 1300 Sq. Ft Conveniently Located One Bus Stop To Subway In The Heart Of Mississauga


### 10/Central Pkwy



**$189,900**

3 Bedrooms, 2 Washroom, Condo Apt, Bright And Spacious. 1 Bus Stop To Islington Subway. Fridge, Stove, Dishwasher, Washer/Dryer (All New), Cable T.V. Incld.

### Cawthra/Dundas



**$143,900**


3 Bedrooms, 1 Washroom, Condo Apt, Bright And Spacious. Very Large. Absolutely Immaculate 10++. Bigger Unit In The Building. Beautiful Parquet Floors. Steps To All Convenience.

**TOP PRODUCER 2004, 2005, 2006**

**COLDWELL BANKER**

Income Tax Preparation
வருமானவரி தயாரிப்பு

Terrequity Realty Brokerage
2690 Erin Centre Blvd, Unit A5, Mississauga, ON, L5M 5P5



# பேரா நாதன்

## சௌந்தரநாதன்

Real Estate Broker

**416.721.6563**

416.495.4072
www.peranathan.com

digi Media Creations



# Kuberan


# Divine Homes

**1845 Lawrence Av.East. Scarborough, ONT. M1R 2Y3 (Lawrence /Pharmacy)**

**Tel: 416 999 3997, 647 435 0105**



இல்லத்திற்கு ஏற்றாற் போல் வழிபாடு செய்வதற்கு சிறிய கோவில் போன்ற பூஜை மேடைகள் எம்மிடம் உண்டு
உங்கள் விருப்பத்திற்கேற்ப சமயஇறைப்படி சாமிமேடை செய்து தரப்படும்.
கீழே அமர்ந்து பூஜை செய்யக்கூடிய மேடைகளும், உட்கார முடியாத பெரியவர்களுக்கும்,
பிள்ளைகளுக்கும் நின்று கொண்டு பூஜை செய்யக்கூடிய மேடைகளும் உண்டு.



Model No : 012 07 CB + TILES







Model No : 012 06 CABINET + TILES







Graphicland - 647 219 7576

சுவாமி சிலைகள், குபேரன் சிலைகள், வலம்புரிச் சங்குகள்,
அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள்
அன்பளிப்பு பொருடகள் இன்னும் பல...


**www.divinehome.org**
**divinehome@rogers.com**

# அறியவில்லையானால் அறிந்து கொள்ளுங்கள்

## கனடாவில் சில தகவல்கள்


சிவ பஞ்சலிங்கம்

- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

கனடாவில் ஒரு நிறுவனம்
"The Criminal Injuries Compensation board – CICB"

**குற்றவியல் காயங்களின் நட்டஈட்டுச் சபை அது எங்கே உள்ளது?**

மாகாண அரசின் சட்டமா அதிபதியின் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் பின்வரும்விலாசத்தில் இயங்குகின்றது.

**The Criminal Injuries Compensation board**
**439, University Ave, 4th floor,**
**Toronto, ON**
**M5G 1Y8**

தொலைபேசி: 416 326 2900 அல்லது 1-800-372-7463 தொலைநகல் 416 326 2883
மின்கணனி தகவல் மையம்:
www.cicb.gov.on.ca

**இந்நட்டவீட்டுச் சபையில் இருந்து பொது மக்களுக்காக வழங்கப்படும் சேவை யாது?**

கனடாவில் ஏனைய மாகாணங்களில் செயல்படுவதுபோல, ஒன்ராறியோ மாகாணத்தில் இருந்து இயங்கும் இந்நிறுவனம், இவ் மாகாணத்தில் உள்ள எவரேனும் அப்பாவித்தனமான முறையில் உடல் காயங்கள், மனக் காயங்களுக்கு உட்பட்டால், இதுபற்றிய புலனாய்வின் பின்பு இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிடப்பட்ட தொகை நட்டஈட்டை இந்த அரச நிறுவனம் வழங்கும்.

இப்பாதிப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
Injured as a result of violence commited in Ontario, Examples of a criminal offence include assault, sexual assault, criminal harassment etc.

இந்த ஒன்ராறியோ மாகாணத்தினுள் கிரிமினல் குற்றச் செயல்களினால் பாதிக்கப்படுதல், தாக்குதல், பாலியல் வன்முறையால் பாதிக்கப்படல், மற்றும் கிரிமினல் தொல்லைகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளடக்கப்படுவார்கள்.
Responsible for the care of victim of crime and suffered a loss of income, or had expenses as a result of the victim's injuries or death.

(ஒருவருக்கு ஏற்பட்ட பலமான உடல் காயம், அல்லது மரணம் என்பது அவரில் தங்கியிருப்பவருக்கு வருமான இழப்பு, அல்லது செலவுகளை உருவாக்கியிருந்தால் அதற்கான நட்டஈடுகளை இச்சபைக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
உதாரணமாக, கணவன் அல்லது மனைவியின் உடல் காயங்கள், மரணம் என்பது குடும்பத்தவர்களைப் பாதிப்பதால் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை இங்கு குறிப்பிடலாம்.)

You are the dependant of a deceased victim (In the case of murder)
ஒரு கொலை நடந்தால், கொலை செய்யப்பட்டவரில் தங்கியிருப்பவருக்கு ஒரு நட்டஈடு.

Injury as mental or nervous shock. ஒரு குற்றச் செயலினால் ஏற்பட்ட மனரீதியான அதிர்ச்சிகள்.
You were injured while trying to prevent a crime or while helping a police officer make as arrest.
குற்றம் ஒன்றினைத் தடுக்கும்போதோ அல்லது குற்றவாளியினைக் கைது செய்ய பொலிசாருக்கு உதவி செய்யும்போதோ ஏற்படும் உடல் காயங்கள்.

ஆனால், இங்கு முக்கியமான ஒரு விடயம்! பாதிக்கப்பட்டவர் ஒருபூரணமான அப்பாவித்தனமான நிரபராதி என்ற நிலையில் நின்று பாதிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். பாதிப்புகளில் மனுச்செய்பவர் ஒரு குற்றவாளியாக குறிப்பிட்ட சம்பவத்தில் இருந்திருந்தால், இச்சபையில் இருந்து நட்டஈடு பெறமுடியாது.

**பாதிக்கப்பட்டவர் இந்நட்டஈடுகளைப் பெறவேண்டுமானால், இச்சபைக்கு எப்படி மனுச்செய்வது?**

மேலே விலாசம் குறிப்பிடப்பட்ட இந்நிறுவனத்திற்கு பாதிக்கப்பட்டவர் அல்லது பாதிக்கப்பட்டவர் சார்பில் அவரது குடும்பத்தினர் ஒருவர் தொலைபேசிமூலமோ அல்லது நேரடியாகவோ தொடர்புகொள்ளும்போது, தகவல்களை பெற்று கொள்வதற்காக விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைப்பார்கள். அதனைப் பூரணமாக நிரப்பி இந்நிறுவனத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்விண்ணப்பத்துடன்,

1. பாதிக்கப்பட்ட நிலைமையினை நிரூபிக்கும் மருத்துவ அத்தாட்சிப் பத்திரங்கள்

2. நடைபெற்ற குற்றச் செயலினை நிரூபிக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர் நிரபராதி என்பதனை உறுதிசெய்யும் பொலிஸ் அறிக்கைகள், நீதிமன்ற அறிக்கைகள்.

மேற் குறிப்பிட்ட இவ்விரு முக்கிய ஆவணங்கள் தவிர, புலன் விசாரணையில் நட்டஈட்டுச் சேவை கேட்டும் மேலதிக ஆவணங்கள் தேவைப்பட்டால் அவற்றினை வழங்க வேண்டும்.

(விரும்பினால், பாதிக்கப்பட்டவர் இந்நட்டஈட்டுக் கோரிக்கையினை முன்னெடுக்கவென ஒரு சட்டரீதியான பிரதிநிதியினை நியமிக்கலாம். )

இந்நிறுவனத்திற்கு மனுச்செய்து நட்டஈடு கிடைக்க தற்போது உள்ள நிலைமையில் இருவருடங்கள் எடுக்கலாம் என இந்நிறுவனத்தின் தகவல் மையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு மனுச்செய்ததுடன் மட்டுமல்லாது தேவையான தகவல்களை இச்சபைக்குத் தொடர்ந்து புலன் விசாரணைக்கு வழங்கி, சபையின் முடிவுகளுக்கு ஒத்தாசைகள் வழங்குதல் வேண்டும். மருத்துவ மனைகளில் இருந்து காயமடைந்தவர் பெறும் அறிக்கைகளுக்கான செலவுகளையும் இந்நிறுவனத்திலிருந்து மீளப் பெறலாம்.

**எந்த வகையில் பாதிக்கப்பட்டவருக்கு இங்கு நட்டஈடு வழங்கப்படும்?**

1. Lump sum award
பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 25,000 டொலர்கள் வரை கிடைக்கும். ஒரு பாதிப்பில் ஒன்றுக்கு மேல் பலர் என பாதிக்கப்பட்டிருந்தால், மொத்தம் 150,000 டொலர்கள் வரை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும்.

2. Periodic/monthly award
நிரந்தரமான முறையில் ஒருவர் இயங்க முடியாத நிலைமையில் பாதிக்கப்பட்டால் ஆகக் கூடுதலாக மாதம் 1000 டொலர் வரை நட்டஈடு மொத்தமாக 365,000 டொலர்கள் வரை பெறலாம்.

3. Injured reasonable medical expenses
காயமடைந்தவரின் நியாயமான மருத்துவச் செலவுகள்

**தகவல் தொடர் - 4**

**ஏதாவது கொலை நடந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்நிறுவனம் வழங்கும் நட்டஈடுகள் யாவை?**

1. மரணச் செலவுகள் (Funeral expenses)

2. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வருமானம் (maintenance) குடும்பத்தின் நிதி நிலைமையினைப் பரிசீலனை செய்து சமூக உதவிப் பணம்போல வழங்குவார்கள்.

3. மனரீதியான பாதிப்புக்கு ஒரு நட்டஈடு (Personal injury – Injury known as mental or nervous shock)

**இந்நட்டஈட்டுச் சபைக்குமனுச் செய்யும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், அல்லது வழங்கப்படும் நட்டஈட்டில் திருப்தி இல்லையானால் யாது செய்யலாம்?**

அதற்கும் வழி உள்ளது. மேல் இடத்திற்கு அப்பீல் செய்யலாம். அப்பீல் மனு சமர்ப்பிக்கவேண்டிய முகவரி பல இடங்களில் உள்ளது. அதில் ஒன்று:

**OSGOODE Hall,**
**130, Queen St. West,**
**Room # 174**
**Toronto.ON**
**M5H 2N5**
**Tel: 416 327 5100**

**மொன்றியல் நகரில் எம்மவர்கள் ஏராளம் பேர் இருப்பதால் அங்கு இருப்பவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டால் இந்நட்டஈட்டினைப் பெற எவ்வாறு அணுகுவது?**

அங்கு கியூபெக் மாகாண சட்ட விதிகளின் படி இங்கு இயங்குவதுபோல் இயங்குகின்றது. இந்த கியூபெக் மாகாணத்தில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் மனுச் செய்யவேண்டிய நிறுவனம்:

**Direction de Lindemnisation**
**Victims d'actes**
**Criminals (IVAC)**
**1199, rue de Bleury**
**C.p. 6056, Succursale Centreville**
**Montreal, Quebec H3C 4E1**
**Tel: 514 906 3019, 1-800-561-4822**

■ ■ ■


J.R.B Universal Inc.
Almost All Services Available
- கடன் - அடமானக்கடன் - காப்புறுதி

- Loans
- Mortgages
- Insurance Claims
- Traffic Ticket
- Auto/Life Insurance
- Scholarship Plan (RESP)
- Real Estate Related
- Credit Counselling
- Accounting
- Tax Services



R.R. Rajkumar
B.Com (Hons) M.B.A
Dip. In Accy.

Bus; 416 • 752 • 7555 Fax: 416 • 752 • 7556
Cell: 416 • 937 • 9081
2390 Eglinton Ave. East, 206B, Scarborough, Ont. M1K 2P5



காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999



சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு...

வீடு வாங்க விற்க அல்லது
அது சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

**Tel: 416-843-8585**
**Bus: 416-290-1200**



KUGA RAVEENDRARAJAH
Broker

Century 21.
Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.




- Residential 1st, 2nd, 3rd Mortgage
- Refinancing/Renewal/Transfer
- Switch the mortgage without loosing/paying any cents
- Mortgage for new immigrants
- Mortgage for non immigrants
- Mortgage for social insurance starting with 9
- 0 down payment mortgage
- Mortgage for previously bankrupt
- Mortgage for no credit established
- Mortgage for self-employed
- Mortgage for poor credit
- Commercial mortgages
- Secured, Unsecured line of credit
- Debt consultation


NO CMHC or Genworth Premium
Guaranteed lowest rate

Questions pls call
**Thevan Kankesu**
Certified Mortgage Consultant

**Future Financial Inc.**
**Direct: 416.939.8789**
Office: 416.446.0077 ext. 224

# புதுவீடு வாங்குவதும் உங்கள் மனமாற்றமும்

## (Buying a New Home & Change of Your Mind)



T.M. கேசவன்
- Barister & Solicitor -
Legal Practitioner

கட்டிடக்காரரிடமிருந்து ஒரு வீடுவாங்குவதற்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பின்னர் உங்கள் மனம் மாறினால் என்ன நடக்கும்? இந்தக் கேள்வி Pleasant Development Inc.v Iyer (2006) என்ற வழக்கில் ஆராயப்பட்டது. இந்த வழக்கில் September 15 2003 ம் ஆண்டில் வீடு வாங்குபவர் கட்டிடக் காரரிடமிருந்து (Builder) $280,000.00 விலைக்கு வீடுவாங்கும் இறுதித்தினமாக(Closing date) January 23, 2004 என கொண்டு ஒரு புதுவீடு வாங்கும் கொள்வனவு விற்பனை (Agreement of Purchase and Sale) உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள். வீடு வாங்குபவர் கட்டிடக்காரருக்கு ஒரு முற்பணமாக (Deposit) $10,000.00 கொடுத்திருந்தார். 2003 ம் ஆண்டு September 16 ம் திகதி கட்டிடக்காரர் அந்த உடன்படிக்கையில் கையொழுத்திட்டார். அடுத்த நாள், 17 ம் திகதி அந்த கொள்வனவு விற்பனை உடன்படிக்கையை ரத்துச்செய்வதாக வீடு வாங்குபவர்கள் கட்டிடக்காரருக்கு அறிவித்தார்கள். கட்டிடக்காரர் விற்பனைக்காரியாலயத்தில் தான் கையெழுத்திட்ட ஆவணம் வெறுமனவே ஒரு "Offer" என தான் நம்பியதாகவும் பத்து நாட்களுக்குள் தனக்கு தேவையில்லை என மனமாறினால் அந்த கொடுக்கல்வாங்கலை ரத்துச்செய்யலாம் என கட்டிடக்காரர் காரியாலயத்தில் பணிபுரிபவர் கூறியதாகவும் கூறினார். இக்கொடுக்கல்வாங்கல் முடிவு பெறாததுடன் வீடுவாங்கியவர் கட்டிடக்காரருக்கு எதிராக தனது முற்பணத்தை(Deposit) திருப்பித்தருமாறு கோரி வழக்குத் தொடுத்தார். இவ்விடயம் இறுதித்தீர்ப்புக்காக மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் வந்தது. இங்குள்ள முக்கியமான கேள்வி யாதெனில், வீடு கொள்வனவுகாரரின் செயலினால் ஏற்பட்ட உடன்படிக்கை முறிவின் விளைவாக கட்டிடக்காரர் ஏதாவது நட்டம் தனக்கு ஏற்படாமலும் அல்லது அதை நிரூபிக்காமலும் இருக்கும் போது வீடுவாங்கியவர் தனது முற்பணமான $10,000.00 தை கட்டிடக்காரருக்கு பறிகொடுக்க (Forfeit ) வேண்டுமா? நீதிமன்றிற்குள்ள அடுத்த கேள்வி யாதெனில், பறிகொடுத்ததுக்கு (Forfeiture) எதிராக வீடுவாங்க உடன்பட்டவர் ஏதாயினும் பரிகாரத்திற்கு (Relief) உரித்துடையவரா என்பதாகும்.

முற்பணத்தை பறிமுதல் செய்வதற்கு கட்டிடக்காரர் தனக்கு நட்டம் ஏற்பட்டதை நிறுவிப்பது அவசியமானதா? (Was it necessary for the builder to prove damages in order to forfeit the deposit?)

நட்டம் ஏற்பட்டதை நிறுவிக்காமல் முற்பணம் (Deposit) பறிமுதல் செய்யப்படலாம் என்பதில் சட்டம் தெளிவாக இருக்கிறது. விற்கமுடியாததால் ஏற்பட்ட நட்டத்திலும் பார்க்க அந்த வீட்டை கூடிய விலையில் மீள்விற்பனை(Re-sale) செய்யும் சந்தர்ப்பத்திலும் கூட அந்த முற்பணத்தை அந்த கட்டிடக்காரர் தொடர்ந்து வைத்திருக்கலாம். உடன்படிக்கையில் கூறப்பட்டவைகள் முடிவானது ஒன்றாக இல்லாது இருக்கும் அதே நேரம் முற்பணம்(Deposit) என்ற சொல் வீடுவாங்குபவரின் முறிவிக்காக பறிமுதல் செய்வதற்கு என உத்தேசிக்கப்பட்ட ஒரு கொடுப்பனவு என அர்த்தப்படுகின்றது. பொதுச்சட்டத்தின் (Common Law) நிலைப்பாடு யாதெனில் உடன்படிக்கை மௌனமாக(silent) இருக்க வீடுவாங்குபவர் ஒப்பந்தத்தை முறித்தால் அந்த முற்பணம் அதன் இயல்பான தன்மைப்படி (by it's nature) கட்டிடக்காரருக்கு பறிகொடுக்கப்படும். உடன்படிக்கை அந்தப்பணத்தை முற்பணம் என கூறிப்பிடுகின்றது. முறிவின்மீது அந்த முற்பணம் மீண்டும் அவருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படும்விதத்தில் உடன்படிக்கையில் யாதுமொரு ஏற்பாடும் இருக்கமாட்டாது. அந்த முற்பணம் பறிமுதல் செய்யப்பட மாட்டாது என்ற உத்தேசத்தை(intention) அந்த உடன்படிக்கை காட்டாத வரைக்கும். அந்த கட்டிடக்காரர் முற்பணத்தை தொடர்ந்து வைப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றார். மேற்சொல்லப்பட்ட வழக்கில், ஒப்பந்தத்தை முறித்த வீடுவாங்கியவரினால் கொடுக்கப்பட்ட $10,000.00 அந்தக் கொடுக்கல்வாங்கலுடன் வீடுவாங்கியவரை கட்டுப்படுத்தும் உத்தரவாதம்(Guaranty) என்ற கண்டிப்பான அர்த்தத்தைக் கொண்ட ஒரு முற்பணம் என உத்தேசிக்கப்பட்டது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்த முற்பணமானது வீடுவாங்கியவரின் முறிவைத் தொடர்ந்து பறிமுதல் செய்யப்படும் என கூறப்பட்டது. இந்த சந்தர்ப்பங்களில், ஒப்பந்தத்தை முறித்த வீடுவாங்கியவர் செலுத்திய முற்பணத்தை பறிக்கும் முகமாக நட்டம் ஏற்பட்டது என நிருபிக்க வேண்டிய அவசியம் கட்டிடக்காரருக்கு இல்லை.



பறிமுதலுக்கு எதிராக யாதாயினும் நிவாரணத்திற்கு வீடு வாங்கியவர் உரித்துடையவர்களா?
(Were the buyers entitled to relief against forfeiture?)

ஒன்றாரியோ சட்டத்தின் கீழ், முற்பணம் பறிமுதல் செய்யப்பட்டதுக்கு எதிராக நிவாரணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு நிவாரணம் இருந்தால், ஒப்பந்தத்தை முறித்த வீடு வாங்கியவருக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அந்த முற்பணம் மீளக்கொடுக்கப்படும். முற்பணபறிமுதல் (forfeiture of deposit) ஒரு தண்டம் (Penalty) என நீதிமன்றம் கருதினால் உடன்படிக்கையில் என்ன விதமான பதம் பாவித்தாலும் உடன்படிக்கையை முறித்த வீடுவாங்கியவருக்கு அந்த முற்பணம் மீளளிப்பதற்கான உள்ளார்ந்த அதிகாரத்தை நீதிமன்றம் கொண்டிருக்கின்றது. அந்த முற்பணம் ஒப்பந்தத்தை முறித்த வீடுவாங்கியவரினால் செலுத்தப்பட வேண்டிய நட்டத்தை நிர்ணயிப்பதிலும் பார்க்க ஒரு தண்டத்தை சுமத்துகின்றது என காட்ட வேண்டிய பொறுப்பு ஒப்பந்தத்தை முறித்த வீடுவாங்கியவர் மீது உள்ளது.

ஏற்பட்ட நட்டத்தைவிட அந்த முற்பணம் அதிகமானது என்பதுடன் அந்த பணத்தை கட்டிடக்காரர் தொடர்ந்து வைத்திருப்பது மனச்சாட்சிக்கு ஒவ்வாதது(Unconscionable) என ஸ்தாபிக்கப்படுமிடத்து நீதிமன்றம் ஒப்பந்தத்தை முறித்த வீடு வாங்கியவருக்கு நிவாரணமளிக்கும். மேற் கூறப்பட்ட வழக்கில். முற்பணம் (Deposit) வீட்டு விலையில் 3.6% மட்டுமே இருந்தது எனவும் அது கட்டிடக்காரரின் இழப்பீட்டிலும் பார்க்க அதிகமானது இல்லை எனவும் அதைத் தொடர்ந்து கட்டிடக்காரர் வைத்திருக்க அனுமதிப்பது மனச்சாட்சிக்கு விரோதமானது அல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

புதுவீடுவாங்குபவர்கள் இந்த வழக்கிலிருந்து பல படிப்பினைகளை படிக்க வேண்டியுள்ளது:

முதலாவது, புதுவீடுவாங்கும் உடன்படிக்கையில் கையொழுத்திட முன்னர் அந்த வீடு உங்களுக்கு வேண்டும் ஏன உறுதிப்படுத்த வேண்டும். இரண்டாவது, மேட்கேஜ் அங்கீகாரத்தை அல்லது சட்டத்தரணியின் அங்கீகாரத்தை அனுமதிக்கின்ற ஒரு குறித்த நிபந்தனையை அந்த உடன்படிக்கை கொண்டிராவிட்டால் புது வீடுகளுக்கு 10-நாள் மனமாற்றத்தை அனுமதிக்கும் காலம் (10-day Cooling-off Period) கிடையாது.

புது Condo வாங்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே சட்டப்படி 10-நாள் மனமாற்றக்காலம் (10-day Cooling-off Period) உண்டு.

மூன்றாவதாக, வீடுவாங்கியவர் உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கி நிலம்சார் சந்தையில்(Real Estate Market) வீழ்ச்சியின் காரணமாக கட்டிடக்காரர் பணத்தை இழந்தால் ஒப்பந்தத்தை முறிக்கும் வீடுவாங்கியவர் இரு விலைகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்திற்கும் (Price Difference), அந்த வீட்டை விற்காமல் வைத்திருந்த செலவிற்கும், சட்டரீதியான செலவிற்கும் வேறு நட்டத்திற்கும் உடன்படிக்கையை முறித்த வீடுவாங்கியவர் பொறுப்பாளியாவார்.

நான்காவதாக, கட்டிடக்காரரினால் நியமிக்கப்பட்ட வீடுவிற்பனை பிரதிநிதியினால் கூறப்பட்ட வாக்குறுதிகள் எழுத்து வடிவில் உடன்படிக்கையில் ஏற்படுத்தப்படாவிட்டால் அவை அந்த கொடுக்கல் வாங்களில் ஒரு பகுதியாக அமையாது. இறுதியாக, கையெழுத்திடப்பட்ட முழுமையான உடன்படிக்கையில்லாமல் கட்டிடக்காரரின் விற்பனைக் காரியாலயத்திலிருந்து வெளியேறக்கூடாது.

■ ■ ■

KESAVAN LAW OFFICE



- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

THANGAVEL M. KESAVAN
Barrister & Solicitor

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
TEL: (416) 754-9843
Fax: (416) 754-2362

வீடு பத்திரிகையில்
விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின்
எல்லைகளை
விரிவாக்குவீர்!
416-646-3422

# Insurance/Investment/Retirement



*I'm an expert in Financial affairs with 15 years of experience in the Industry*

- *RRSPs, RRSP Loans*
- *Mortgages*
- *Insurance*
- *RESP*
- *Income Tax*

**Call now for a Free Consultation.....**



*Quick and Easy*

**Maran Chelliah** B.Sc

Mortgage Specialist with 15 years Banking Experience

**416.568.2450**

**www.maranc.com**

COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.




# NOW OPEN

**Euro Furniture**

1-2956 Eglinton Ave. East
( Bellamy & Eglinton )
Toronto, ON M1J 2E7

Tel: **416.289.0033**

Concept & Design by: Ne1 Studios, Pirasath, 647.887.2332

# தாகத்திற்கு மட்டுமா தண்ணீர்?



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

"நீர் இன்று அமையாது
உலகெனில் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"
குறள்

மேற்கண்ட குறளிலே நீரின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். மீதி அர்த்தத்தை தமிழறிஞர்களின் ஆய்வுக்கு விட்டுவிடுவோம். ஏனென்றால், இந்தக் கட்டுரைக்கு அது அவசியமல்லாதது. உயிர்களின் தோற்றம் பூவுலகில் நடந்த தற்கு நீர் ஒரு முக்கிய காரணியென விஞ்ஞானம் கூறுகின்றது. அதுபோலவே உயிர்களின் வாழ்வுக்கும் நீர் மிக அத்தியா வசியமானது.

சந்தையிலே நீர் சம்பந்தமான முதலீடு களுக்குச் சூடு பிடித்திருக்கிறது. வானம் பொழிகிறது. நீர் கிடைக்கிறது என்றால் நீரில் எப்படி முதலிடுவது? உலகளாவிய ரீதியில் எல்லோருக்கும் நீர் கிடைக்க வழி-செய்யும் ஐ.நா.வின் இலட்சியத்தை அடை யும்பொருட்டு, நீர் விநியோகத் துறையில் முதலீடுகள் அதிகரிக்கும் எனவும் உள்ளூராட்சிச் சபைகளால் நடத்தப்படும் நீர் விநியோகம் தனியார் மயப்படுத்தப்படும் எனவும் முதலீட்டாளர்கள் சமுகம் எதிர் பார்க்கிறது.

2015க்கு இடையில் உலகில் வாழும் 6 பில்லியனுக்கு மேற்பட்ட மனிதர்களுக்கும் நீர் விநியோகத்தை ஏற்படுத்துவதற்கு 20க்கும் 30க்கும் இடைப்பட்ட பில்லியன் டொலர்கள் முதலீடு தேவைப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. எப்பொழுதாவது இப்பேர்ப்பட்ட முதலீடு இடம்பெறும் போது அங்கு பெருமளவு லாபமீட்டல் இருக்கும் என்பது முதலீட்டாளர்களின் எண்ணமாகும். நீர் சம்பந்தமான துறைகள் ஒரு முதிர்ச் சியடைந்த துறைகள் ஆகும். நீர் பற்றிய துறைகளில் ஈடுபாடு அதிகரித்துவரும் அதே நேரத்தில் இந்த நீர் சம்பந்தமான துறை மிக ஒடுக்கமானது ஆகுமென "லோறன்ஸ் ஜோன்ஸ்" என்ற ஆய்வாளர் தெரிவித்தார்.

உலகில் பல பாகங்களுக்கும் நீர் வழங்கு துறைகளில் முதலீடு தேவைப்பட்ட போதி லும், இந்த முதலீடு வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களிலேயே கூடுத லாக நடக்கும் என ஆய்வுகள் தெரிவிக் கின்றன. இதனையிட்டு பல Mutual fund நிறுவனங்கள் நீர் விநியோகம் சம்பந்தமான நிறுவனங்களில் முதலிட ஆரம்பித்துள்ளன. ரொறன்ரோவில் இருக்கும் Sextant Capital Management, Power shares Water Resources Portfolio ஆகிய நிறுவனங்கள் ஒரு நிதியத்தை ஆரம்பித்துள்ளன. (PHO/AMEX)

இதுபோலவே, Newyork ஐச்சேர்ந்த Kinetics Asset Management உம் இப்படிப்பட்ட ஒரு முதலீட்டை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளார்கள். அந்த நிறுவனம் Newyork Securities Commission க்குக் கொடுத்த அனுமதி விண்ணப்பத்தில் அமெரிக்க வெளிநாட்டு நீர் விநியோக நிறு வனங்களிலும் அது சம்பந்தமான இயற்கை வளங்களிலும் முதலிட இருபதாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிறுவனம் நீர் உற்பத்தி நிறுவனங்கள் நீரில் உப்புக்களை அகற்றி, தராதரப்படுத்தும் நிறுவனங்கள். அத்துடன் நீரை ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்துக் குக்கொண்டு செல்லும் நிறுவனங்களும் அதை விநியோகிக்கும் நிறுவனங்களில் முதலிடுவதுடன், கழிவு நீரை திருத்தும்



(Treat) நிறுவனங்களிலும் முதலிடப்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். அத்துடன், நீர் சுத்திகரிப்பு சம்பந்தமான கருவிகள், பொறியியல் நிபுணத்துவம் கொண்ட நிறுவனங்களிலும் முதலிடுவது டன் விவசாய நீர்ப்பாசனம், நீர் மின்சாரத் துறைகளில் முதலிடலாம்.
இந்தத் துறையில் முதலிடும் நிறுவனங்கள் அதிகம் இல்லை என்பதால் இதில் முதலிடு வோருக்கு அதிகம் இலாபம் அடையச் சந்தர்ப்பம் இருக்கிறது.

நீருக்குப் பிரதியீடு நீர்தான். Oil க்குப் பிரதியீடு தேடிக்கொண்டிருக்கிறார்கள். மிகக் குறைவாக இருக்கும் சுத்தமான நீரும் அசுத்தமடைகிறது. சூழல் வெப்ப மடைவதால் இந்த வளமும் குறைகிறது. இத்துடன் உலகளாவிய ரீதியில் பெரிய நகரங்களில் உள்ள நீர் விநியோகக் கட்ட மைப்பு மிகவும் பழுதடைந்த நிலையிலும் பழமையடைந்தும் வருகிறது. இந்த கட்ட மைப்புக்கள் எல்லாம் பிரதியீடு செய்யப்பட வேண்டுமாயின், பாரிய முதலீடு தேவை யாகும். இந்த விநியோகக் கட்டமைப்புகள் பல இரண்டாம் உலக யுத்தத்தின் பின் அமைக்கப்பட்டவையாகும். 50 முதல் 60 வயதாகும் இவற்றை, திருத்த வேலைகள் செய்யும் காலம் வந்துகொண்டிருக்கிறது.

இத்திருத்த வேலைகளுக்கான பணம் இந்த உள்ளூராட்சிச் சபைகளிடம் இல்லை என்ற நிலையில் தனிப்பட்டவர்களுடைய முதலீடு கள் கட்டாயம் தேவைப்படும்.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நீரின் பாவனை குறித்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. முன்னைநாள் ஐநா செயலாளர் Boutros Boutros Gali நீருக் காகவும் போர்கள் எதிர்காலத்தில் வெடிக் கும் என எச்சரித்துள்ளார்.

எல்லோருக்கும் நன்கு தெரிந்த பலஸ்தீனியர்களின் பிரச்சினையில் நீர் வளத்தை எப்படிப் பங்கு போடுவது என்ற கேள்வியும் இருப்பது பலருக்கும் தெரியாது.

என்னதான் நீர் முக்கியம் என்று வள்ளுவர் சொன்னாலும் நீருக்காகப் போர் வரும் என அவர் நினைத்திருக்கமாட்டார்!

■ ■ ■





# For All Your Real Estate Needs..

## Lucky Draw for New Car Will be on August ,2007

FOR SALE SOLD

**Buy or Sell through us before August15, 2007 and win a New Car****



**Ravi Raveendran**
Broker
**416.817.8479**





- Excellent Court Location
- Well Maintained House
- Huge Lot With Lots Of Fruit Trees
- Ttc At Door Steps
- Call **Ravi** For Details....




- 3 Bedroom Condominium
- Spacious Bedrooms
- Close To School, Mall & Ttc
- Well Maintained Building
- Call **Justin** For Details....




**Justin William**
Broker
**416.803.7344**




- Most Updated House
- Updated Kitchen Cabinets
- Well Established Neighbourhood
- Walking Distance To Schools
- Call **Ravi** for details....




- Immaculate House
- High Demand Location
- Close To All Ameneties
- All Appliances Are Included
- Call **Ravi** For Details....




- Convenience/Variety Store
- Good Lotto 6/49 Commission
- Money Making Business
- Lots Of Trafic In Plaza
- Call **Justin** For Details....

**Basement For Rent In A Plaza**

- Kennedy/Finch Intersection
- Very Low Rent
- Suitable For Many Uses
- More Than 1000 Square Feet
- Call **Justin** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969    Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale    ** some conditions may apply    *Each office independently owned and operated



# Looking out for your best interest™

**Looking** for a

## Mortgage?

call 416.548.8000 now...



**Myuran Ramachandran**
Mortgage Consultant

**CENTUM**™
One Financial Group Inc.

**Bus: 416.548.8000 • Fax: 416.548.8001**

*Each Office is Independently Owned And Operated*

# போலிகளை நம்பி ஏமாறாதீர்கள்!



ராகுல் கனகரட்னம்
- ஈட்டுக்கடன் ஆலோசகர் -

இது வருமானவரிக் காலம், அரசுக்குக் கட்டவேண்டிய வரியைக் கணக்கிடும் இந்த நேரத்தில், நம்மில் பலர் இந்தக் கொடுப்பனவை எப்படித் தவிர்க்கலாம் என ஆலோசனை செய்வது வழக்கம். இந் நேரத்தில் சமர்ப்பிப்பதற்கெனவே பலரும் பல்வேறு ஆவணங்களையும் சேகரிப்பது வழக்கம். இந்த ஆவணங் களில் பல தேவைப்படலாம் அல்லது தேவைப்படாமலும் போகலாம்.

பணம் கட்டுவதைத் தவிர்க்கும் ஆலோ சனைகளில் முக்கியமானது, இந்த ஆலோசனைகள் சட்டரீதியானதாகவும் கனடிய திறைசேரியினால் அங்கீகரிக்கப் பட்டதாகவும் இருக்க வேண்டும். அங்கீ கரிக்கப்படாத முறைகளைப் பாவிப் பதனால் சில மாதங்களின் பின் அவற்றை வட்டியுடன் மீளக் கட்டுமாறு திறைசேரியிலிருந்து அழைப்பு வருவது வழமை.

ஒரு செல்வந்த முதலீட்டாளருக்கு, வரை யறுக்கப்பட்ட கூட்டு வியாபாரத்தில் (Limited partnership) ஒரு நல்ல வரி யிறுத்தலுக்கு உரிய வருமானத்தைக் குறைக்கும் முறையாக இதனைப் பாவித்து, கட்ட வேண்டிய பணத்தைக் குறைப்பது கனடிய திறைசேரியின் விதிகளுக்கு கட்டுப்பட்ட முறையேயா கும்.

இத்துடன் பதிவுசெய்யப்பட்ட தரும நிறுவனங்களுக்குக் (Charity) கொடுத்து, அதிகப்படியான பற்றுச் சீட்டுக்களைப் பெறுவது ஒரு முறையாகும். இந்த முறை யினால் வரியிறுப்பாளர் சேமிக்க நினைத் ததைவிட கூடுதலாக இழக்க நேரிடலாம். ஒக்ரோபர் 31, 2006ல் திறைசேரி ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இந்த அதிகப்படி யான பற்றுச் சீட்டுக்களைப் பரிசோதித்து வருவதாக அறிவித்துள்ளது.

இதுபோன்ற அதிகப்படியான பற்றுச்சீட்டுக் கள் வழங்கும் நிறுவனங்களின் கவர்ச் சிகரமான விளம்பரங்கள், மிகைப்படுத்தப் பட்ட பேச்சுக்களை நம்பி பலரும் இந்த திட்டத்துக்குப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதிக ஆசை யினாலும் முட்டாள்தனத்தினாலும் பலரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகி றார்கள்.

இவர்களது பற்றுச்சீட்டுக்கள் பற்றிய விபரங்கள் கனடிய திறைசேரியினால் கணக்காய்வு செய்யப்பட்டால் திறை சேரியில் கட்டவேண்டிய பணத்தைக் கட்ட பிந்திவிடும். இதுபோன்ற விடயங் களை இவர்கள் தெளிவாக சொல்லி இதை விற்பது இல்லை. திறமைவாய்ந்த விற்பனவு விற்பன்னர்கள் சொன்னதை நம்பி, வரியிறுப்பாளர்கள் ஏமாந்து விடுகிறார்கள். இவை இறுதியில் பாரதூர மான பாதிப்புக்களைக் கொண்டுவந்து விடும்.

> “அதிகப்படியான பற்றுச்சீட்டுக்கள் வழங்கும் நிறுவனங்களின் கவர்ச்சிகரமான விளம்பரங்கள், மிகைப்படுத்தப்பட்ட பேச்சுக்களைநம்பி பலரும் இந்த பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதிக ஆசையினாலும் முட்டாள்தனத்தினாலும் பலரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகி றார்கள்.”

இதற்கு உதாரணமாக பின்வருவதைப் பார்க்கலாம். ஒரு முதலீட்டாளர் ஒரு கலைப் பொருளை 8500 டொலர்கள் கொடுத்து வாங்குகிறார். CBI வழங்கிய பெறுமான மதிப்பீட்டின் பிரகாரம் அதன் பெறுமதி வாங்கிய விலையை விட மூன்று மடங்காகும். இதை வாங்கியவர் கள் 12,000 டொலர்களுக்கு வரிப் பத்திரத்தை நிரப்பும் போது, Tax credit கேட்டு விண்ணப்பித்தார்கள். கனடிய திறைசேரியின் மதிப்பு 4,000 டொலர்கள் மட்டுமே. தனிப்பட்ட வரியிறுப்பாளர்கள் தமது சொந்தப் பணத்தில் 4,500 டொலர்களை இழந்து, 50 வீத மேலதிக குற்றப்பணம் கட்டவேண்டிய நிலைப் பாடும் வந்துவிடும். இந்தக் குற்றப்பணம் அரசுக்குக் கட்டவேண்டிய வரிப்பணத்தில் குறிப்பிட்ட ஒரு விகிதமாகும். இந்த வட்டி நாளாந்த கூட்டு வட்டியாகும்.

இதிலிருந்து சாதாரண அறிவுள்ள எவரும் இப்படிப்பட்ட ஏமாற்றுக்களில் ஏமாந்து விடமாட்டார்கள். 300 டொலர்களைக் கொடுத்து 1000 டொலருக்கு பற்றுச் சீட்டுப் பெறுவது என்பது நேர்வழியில் நடக்கும் விடயமல்ல என்பதைச் சாதாரண அறிவுள்ளவர்களும் தெளிவாக விளங்க வேண்டும்.

அதனால்தான் வீடு வாங்குவதானால் ஒரு முகவர், நீதிமன்றுக்குப் போவதா னால் ஒரு வழக்குரைஞர், இலங்கையில் இருந்து கனடாவுக்கு வருவதானால் ஒரு Agent....


அதுபோலவே உங்களின் திறைசேரி யுடனான விடயங்களைக் கூட சரியாக விடயம் தெரிந்தவர்களிடம் ஆலோசனை பெறுவது சிறந்தது!

■ ■ ■


## வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க...



**Gas Station with Convenience**
**Two Acre land included**
Asking Only $650,000



**Vacant Store With Property**
Including 5 Separate Apartments
Asking Only $389,000



**Property for Sale**
Vacant Store With Apartment
Asking Only $394,000



**Plaza for Sale**
Asking Only $2,099,000




**Grocery Store**
Scarborough
Asking Only $39,000




**Fish And Chips**
(Fast Food Eat In Restaurant)
Can Be Convertible Both Srilankan
And Canadian Restaurant
Including All Equipments
In Scarborough
Asking Only $29,000
SOLD!



**Brand New Industrial Building**
Markham
Asking Only $562,000



**Store With Office For Investment**
Scarborough
Asking only $720,000

Your #1 choice agent for commercial properties!

Commission as low as 1% *
* some conditions apply.



**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416.880.8585**

**HomeLife GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite 206
Toronto, ON. M1S 2Y3
416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

# வழிபாடு

## குமார் புனிதவேல் பக்கம்

“வீட்டிற்கு வீடு வாசல்படி” என்பதுபோல அனேகமாக எல்லா வீட்டிலும் வழிபாட்டு அறை இல்லாவிடினும் வழிபாட்டு அலுமாரியாவது இருக்கும்.

நாம் எல்லோருமே வழிபாடு செய்கிறோம். எல்லா மதத்தவரும் ஏதோ ஒரு விதத்தில் வழிபாட்டை வலியுறுத்துவார்கள். எவரிடம் ஏன் வழிபாடு செய்கிறீர்கள் என்று கேட்டாலும் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்காக என்பார்கள். முக்கியமாக விலை, வரவு, இலாபம் எனும் வியாபார உணர்வில் உள்ள மனிதன், வழிபாட்டையும் வரவுக்காகவும் லாபத்திற்காகவும் செய்வதில் வியப்பில்லை. அவர்கள் கடவுளைத் தம் பக்கம் சார்வதற்காக வழிபாடு செய்கிறார்கள். அனேகமானவர்கள், அலாவுதீனும் அற்புத விளக்கிலும் வந்த பூதமாக இறைவனை உருவகித்து இறைவன் எனும் பூதத்தைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு வழிபாடு செய்கிறார்கள். இன்னும் கூறுவதானால் இறைவனைத் தமது ஏவல் பூதமாக்க வழிபாடு என்னும் விலை தர முயல்கிறார்கள்.

போர்க்களங்களுக்குச் செல்லும் மறவர்கள் கூட, மற்றவர்களைக் கொல்வதற்கு வழிபாடு செய்கிறார்கள். வெற்றிபெறுவதற்காக விசேட பூசைகள்கூட செய்ய முன்வருகிறார்கள். உலகில் அனைத்தையும் படைத்தவன் இறைவன் என்றால் அவர் ஒரு பிள்ளையைச் சார்ந்து இன்னொரு பிள்ளையைக் கொல்வதற்கு முன்வருவாரா? அண்மையில் மிக்க இறைபக்திகொண்ட அமெரிக்க ஜனாதிபதி பல பொய்களைப் புனைந்து துவக்கிய இராக்கிய யுத்தத்திற்கு முன், பக்தியோடு முழங்காலில் நின்று இறைவைனிடம் எவ்வளவு விரைவாக கூடிய இராக்கியரைக் கொல்ல முடியுமோ அதைச்செய்ய அருள்புரியுமாறு இறைவனை வேண்டியிருப்பார்? அதே வேளையில் இராக்கின் ஜனாதிபதி சடாம் உசெயின் அல்லாவிடம் வேண்டியிருப்பார் அமெரிக்கர் அனைவருமே அழிய வேண்டுமென்று. இன் நிலையில் ஆண்டவன் பாவம் எந்தப் பிள்ளையை கறிசமைப்பது? தர்மமே ஆண்டவன் உருவமாய் அவதரித்த காந்தியடிகள் தனது சுயசரிதத்தில் ஒரு பெரும் யதார்த்தமான உண்மையைத் தமக்கு உரிய நடையில் அழகாகத் தந்துள்ளார். அவர், இறைவனுடைய பெரும் கருணையில் சந்தேகம் இருந்தால் இந்த புண்ணிய தலங்களை(காசி) பார்க்கவும். அவரது பெயரால் இடம்பெறும் பொய்யும், புரட்டும் ஏராளம். பரம யோகியின் பெயரால் மதத்துக்குப் புறம்பான ஒழுக்கங்கள், அனேகம். எவ்வளவோ காலத்துக்கு முன் அவர் நிலைநிறுத்திய தர்மம் ‘விதைத்ததைத்தான்அறுவடை செய்யலாம்’ ‘கர்மாக்களை மறுக்கவோ, மாற்றவோ தவிர்க்க முடியாது.’ இந்த நியதியின் பின் தனக்கு வேலை இல்லை என்று ஓய்வு பெற்றுவிட்டான் இறைவன்.

**அண்மையில் மிக்க இறைபக்திகொண்ட அமெரிக்க ஜனாதிபதி பல பொய்களைப் புனைந்து துவக்கிய இராக்கிய யுத்தத்திற்கு முன், பக்தியோடு முழங்காலில் நின்று இறைவைனிடம் எவ்வளவு விரைவாக கூடிய இராக்கியரைக் கொல்ல முடியுமோ அதைச்செய்ய அருள்புரியுமாறு இறைவனை வேண்டியிருப்பார்?**

கடவுள் எங்கும் நிறைந்தவர். ஆனால் மனிதனோ ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டவன். முடிவில்லாத ஒன்றுடன் ஒரு சிறு துகள் சேரும்போது முடிவு - அந்த முடிவும், முடிவில்லாத ஒன்றாக மாறுவது தானே? எனவே, எங்கும் நிறைந்த இறைவனுடன் மனிதன் சேரும்போதும், அல்லது மனிதனுடன் இறைவன் சேரும்போதும் மனிதன் தன்னை இழந்த இறைவனின் ஒரு அங்கமாகி முடிவில்லாத ஒன்றாவது தானே?

இதனால், இறைவன் பிரம்மம் என்றும், மனிதனும், மற்றைய அனைத்தும் அதன் ஒரு கூறு என்றும் இந்து மதத்தின் அத்வைத தத்துவம் கூறும். அவை வேறாக காண்பதற்குக் காரணம் மாயை என்றும் குறிப்பிடுவர். எனவே, நாமும் இறைவனின் ஒரு அங்கம் என்பதில் தவறு இல்லை தானே! முடிவில்லாததற்கு பக்கத்தில் முடிவுள்ள ஆன்மா அல்லது மனிதன் இருப்பின் இறைவனுக்கு ஒரு எல்லை இருப்பதாகிவிடும்.

அப்படியானால், இந்த ஆன்மாவின் நோக்கம் என்ன? அது மீண்டும் பேரானந்தமான நிலையாக இறைவனுடன் கலப்பதாகும். பிரம்மத்துடன் பூரணமாக இணைந்து மாயையிலிருந்து விடுபடுவதாகும். இது தான் வாழ்க்கையின் முடிவு. உதாரணத்திற்கு கடலிலுள்ள நீர்த் துளி ஆவியாகி வானில் முகில் கூட்டமாகி மழைத்துளியாகி, பின் அது ஆறாகி, பின் அத்துளி, தான் தோன்றிய கடலுக்கு விரையும். கடைசியில் அது கடலுடன் இரண்டறக் கலந்து அதுவும் கடலாகிவிடும். அதன்பின் அங்கு நீர்த்துளி இருக்காது. கடல் ஒன்று தான் இருக்கும்.

மகிழ்ச்சி என்பது பொருட்களின் சேர்க்கையால் ஏற்படுவதில்லை. பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவு கிடைத்தால் மகிழ்ச்சி. ஆனால், அவன் பசி தீர்ந்தபின் உணவில் கவர்ச்சி காட்டுவதில்லை. தேவைக்கு அதிகமான உணவு அவனுக்குச் சுமையாக மாறிவிடும். உலகில் உள்ள அனைத்துப் பொருட்களுமே இத்தகையது. கிடைக்காத போது அதன்மேல் ஆசைவரும். அது கிடைத்துவிட்டாலோ அது தொலைந்து விடக் கூடாதே என கவலைவரும். இதனால்தான் புத்தபகவானும் ஆசைதான் துன்பத்திற்குக் காரணம் என்றால், கிடைக்கவில்லையே என்று முதல் கவலை. பின் தொலைந்துவிடக் கூடாதே எனக் கவலை. இதனால்தான் புத்தர் தனது நான்கு புனித உண்மைகளில் முதலாவதாக, ‘ஆசை’ தான் கவலைக்குக் காரணம் என்றார். எனவே, வழிபடுவது ஏதாவது ஒரு பொருளாக இருப்பின் அது வேதனைக்கு முதல் படியாவது நிச்சயம். மேலும் வழிபாடு என்பதிலும் இதனை வேண்டுதல் என்று தான் கூறவேண்டும். வழிபாடு என்றால் அது எதற்கோ வழிப்படுத்துவதாக இருக்க வேண்டும். மேலும் அது இன்பத்துக்கு வழிப்படுத்துவதாக இருக்க வேண்டுமேயன்றி, துன்பத்திற்கு, கவலைக்கு இட்டுச் செல்வதாக இருக்கக்கூடாது.

எனவே, ஒருவர் புரியவேண்டிய முக்கிய உண்மை வழிபாட்டின் நோக்கம் வேண்டிய



தைத் தரும் பூதமாக கடவுளை உருவகித்து அவரை ஒரு ஏவல் பூதமாக மாற்றுவதல்ல, அதன் நோக்கம். அவருடன் இரண்டறக் கலப்பதற்காகவே. இதுவே எல்லா மதங்களுடையதும் குறிக்கோள். யேசுபிரான் ‘கேளுங்கள் தரப்படும்’ என்றபோது அவர் பி.எம்.டபிள்யூ. காரைக் குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிட்டது பேரானந்த நிலையை! யேசுபிரான் ‘தட்டுங்கள் திறக்கப்படும்’ என்பது சொர்க்கத்தின் வாசலை அன்றி வீட்டின் வாசலை அல்ல! உங்களுக்கு ஒரு புது பி.எம்.டபிள்யூ வேண்டுமென்றால் அல்லது புது வீடு வேண்டுமானால், ஒரு தொழிலைக் கற்று, வேலையைத் தேடுங்கள். கடவுளிடம் கேட்பது இவற்றையல்ல. புனித பைபிளில் மத்தேயு 6:8 இல் யேசு கூறுகின்றார்: “உங்கள் பிதாவை நோக்கி, நீங்கள் வேண்டிக் கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.” மேலும் யேசுபிரான் கொடியவர்களினால் கைது செய்யப்படுவதற்கு முன் இறைவனைப் பிரார்த்திக்கும் போது தனது கொடிய முடிவிலிருந்து விடுவிக்கும்படி பிரார்த்தித்தார். அவர் முகம் குப்புற விழுந்து, “என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால், நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” என்கிறார். ஆனால், மத்தேயு 26:42 இன்படி, அவர் மறுபடியும் இரண்டாந்தரம் போய் - “என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னை விட்டு நீங்கக் கூடாதாகில்,உம்முடைய சித்தத்தின்படி ஆகக் கடவது” என்று ஜெபம் பண்ணினார். ஆனால், இன்று மதம் மொழிபவர்கள் சாதாரண மக்களை நம்பவைக்க முயல்கிறார்கள். செபம், வழிபாடு, தோத்திரம் ஆகியவற்றால் இறைவைனிடமிருந்து பொருளையும் செல்வத்தையும் பெறலாம் என நம்ப வைக்கிறார்கள். சில மந்திரங்களை உச்சரிப்பதனால் இறைவன் கைகளை முறுக்கி வேண்டியதைப் பெறலாம் என மக்களை நம்ப வைப்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். எல்லாம் தெரிந்த இறைவன் புகழ்ச்சிக்கும், விருதுக்கும் ஆசைப்பட்டு முடிந்த முடிவை மாற்றுவார் என்பது வேடிக்கையாக இல்லையா?

எனது சொந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான் வெள்ளி தோறும் ஒரு பிள்ளையார் கோவிலில் வழிபாடு செய்வதுண்டு. எனது நெருங்கிய நண்பர் ஒருவரை ஒவ்வொரு வெள்ளியிலும் கோவிலில் சந்திப்பதுண்டு. என்னில் நிறைந்த அன்புடைய அவர், எங்கள் வீட்டில் ஒருவருக்கு வருத்தம் வந்த வேளையில், அமெரிக்காவில் பெரும் ஞானி ஒருவர் இருப்பதாகவும், அவரை 1-800-... ... தொலைபேசியில் அழைத்து எனது பெயர், விலாசம், எனது வருத்தம் ஆகியவற்றைத் தெரிவித்தால் அவர் ஒரு அபூர்வமான எண்ணெயை எனது விலாசத்துக்கு அனுப்புவார் எனவும், அதைத் தடவினால் எல்லா வருத்தமும் குணமாகிவிடும் எனவும் தெரிவித்தார். அவர் அன்பையோ அல்லது நம்பிக்கையையோ நான் குறைவுபடுத்த விரும்பவில்லை. நான் கடுகளவு நம்பிக்கை இருந்தாலும் மலையையும் நகர்த்தலாம் என்ற வாசகத்தில் பூரண நம்பிக்கையுடையவன். ஆனால், இருவரும் ஒவ்வொரு வெள்ளியும் வணங்கும் பிள்ளையாரை நம்பாமல், எம்மைத் தெரியாத ஒருவரிடம் நம்பிக்கை வைப்பதானால் அவர் எதற்காக வெள்ளிக் கிழமைகளில் கோவிலுக்கு வரவேண்டும்? அவருக்கு பிள்ளையார் அருள் தருவார் என்பதில் நம்பிக்கை இல்லை. நீங்கள் யார் என்பதல்ல – எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். நீங்கள் பூரண நம்பிக்கையுடன் சிவனையோ, புத்தரையோ, அல்லாவையோ, யேசுவையோ கேட்டால் அதிகம் பயனுண்டு.

வழிபாடு எங்கு செல்வது? இது இன்னுமொரு இடைஞ்சல். மதம்சார் அமைப்புகளைக் கேட்டால், இறைவன் கோவிலில் இருப்பான் என்பர். கடவுள் எங்கும் உள்ளான் என்பவர் ஏன் கோவிலுக்கு வழிபட வரச் சொல்கிறார்கள்? நீங்கள் சூரிய ஒளி வேண்டுமென்றால் ‘வால்மாட்’டிற்குப் போக வேண்டியதில்லை. கண்களைத் திறக்கவேண்டியதே. உங்களுடன் இரண்டறக் கலந்து உள் உறைபவன் இறைவன். அதனால்தான் கடவுள் என்ற ஒரு பெயர் அவருக்குண்டு. ஆனால், அவர் இன்று மூச்சுத் திணறிக்கொண்டு இருக்



கிறார். காரணம், ஒவ்வொருவர் உள்ளமும் வெறுப்பு, பொறாமை, பொய், கபடம் ஆதிய குப்பை நிரம்பி துர்நாற்றமடித்துக் கொண்டிருப்பதால் மூச்சுத் திணறுகிறார். வள்ளுவர் கூறுவதுபோல், அகத்தூய்மை வாய்மையால் வருவது. குளிப்பதாலோ கோவிலுக்குப் போவதாலோ அல்ல. வழிபாடு என்பது அந்த ஞானக் கண்களைத் திறப்பதற்கான வழி. ஊனக் கண்ணால் பார்க்க முடியாத கடவுள் ஞானக் கண்களினால் காணக்கூடியவர்.

நீங்கள் ஒரு கடலினுள் ஆழத்தில் நின்று கொண்டு பார்த்தால் நீர் தெரியாது. ஆனால் உணரமட்டும்தான் முடியும். ஆனால், நான் காண்பதற்காக அவர் உருவெடுத்துத் தோன்றிடினும் அவர்க்கு உருவம் இல்லை. கடவுளைக் காண்பதற்குத் தகுந்த இடம் ஏகாந்தம். இதனால்தான் இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார். ஞான குருவாக யேசுபிரானும் மத்தேயு 6:5 இல் - “அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது மாயக்காரரைப் போல் இருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளிலுள்ள சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.” என்கிறார். எனவே, அவருக்கு மேலாக சொல்ல நான் யார்?

ஆனால், மதத்தைப் பரப்புபவர்கள் ஆலயங்களையும் பூசைகளையும் முன்னிருத்துவார்களன்றி, வழிபாட்டையும் தியானத்தையுமல்ல. எங்கிருந்து வழிபாடு செய்தாலும் ஏன் வழிபாடு செய்கிறீர்கள் என்பதனை மறக்க வேண்டாம்.

நீங்கள் கேட்டால் அவர் வழிநடத்துவார், கேட்காதவர்களை அவர் வழிக்கே விட்டு விடுவார். அழைக்காத விருந்தாளியாக வர அவருக்கு விருப்பமேதுமில்லை. இதனல்தான் ‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்’ என்பார்கள். நீங்கள் கொண்டாடினால்தான் அவர் வருவார். நீங்கள் கொண்டாடிக் கேட்டால் அவர் வழிநடத்துவார். மாணிக்கவாசகர் கூட,

“தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே!” அதாவது தாய் பிள்ளைக்குப் பின் நின்று, தளர் நடை பழக்குவதுபோல சிவபெருமான் தனக்கு வழிநடத்தினார் வழிபாட்டில் என்று கூறுகிறார். மாணிக்கவாசகருக்கு மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரையும் அவர் வழிநடத்துவார்- நாம் அவரைக் கொண்டாடி அழைத்துக் கேட்டால்! எனவே, அடுத்த தடவை வழிபாடு செய்யும்போது உள்ளன்புடன் நேசித்து, இறைவனை வேண்டிக்கொள்ளுங்கள் உங்களை வழிநடத்தும்படி. பாரசீகக் கவிஞன் “வழிபாடு ஆன்மாவின் பாடல். அது பல்லாயிரம் பேருடைய இரைச்சலுக்கிடையிலும் ஆண்டவனுக்குக் கேட்கும்” என்று பாடியுள்ளார். நீங்கள் ஒவ்வொருவரும் அழைக்கும்போதும் ஆண்டவனுக்குக் கேட்கும். மேலும், உங்களுக்காக வேறு ஒருவர் கேட்பதில் பயனில்லை. நீங்கள்தான் கேட்க வேண்டும். தரகரை நம்பினால் தந்தனா பாடவேண்டியதுதான்!

இறை போட்ட கணக்கை மாற்றுவதல்ல வழிபாடு. அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சக்தியைத் தருவதே வழிபாடு. தரகரை நம்பாமல் ஒவ்வொருவரும் தாமாகவே எல்லோரும் வழிபாடு செய்தால் உலகில் அமைதியும், நிம்மதியும் தோன்றும். அதுவரை மத அமைப்புகள் ஆள் சேகரிப்புப் போட்டியும், பொறாமையும் நிறையவே நடக்கும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!




VIEW TECH WINDOWS INC.

•Industrail •Commercial • Residential

- Storm Doors
- French Doors
- Patio Doors
- Porch Enclosures
- Thermal Windows
- Vinyl Windows
- Aluminum Windows
- Glass & Screen

All work Guaranteed

Vinyl and Aluminum Replacement Windows

FREE ESTIMATE



6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON

KARUNA 905•796•9292/ 416•892•7070

Kumar Punithavel, B.Sc Eng

•Mortgage
Residential, Commercial
Charitable and non-Profit
Organization
•Personal and Business
line of Credit

SMI STANDARD MORTGAGES INC.

80 Corporate Drive Suite # 307, Toronto, Ont. M1P 3G5

Tel: 416-298-1700 Fax: 416-754-8651 Cell: 416-358-7027

standardmortgagesinc.com kumarpunithavel@yahoo.ca

# எமர்ஜென்சியில் எப்படி நடந்து கொள்வது?



மாமூலன்

எமர்ஜென்சிக்கு போவது என்பது கனடாவில் ஒரு வேலை நாள் செலவு. அதாவது குறைந்தது எட்டு மணித்தியாலம் அதற்குச் செலவாகிவிடும்.

எமர்ஜென்சி என்னும் நெருக்கடி நிலையை மருத்துவ வகையில் எதிர்கொள்ளும் போது அந்த நோயாளியை விடவும் அவரை அண்டியுள்ளவர்கள் நடந்து கொள்ளும் நடைமுறைகள் தவறாகவுள்ளன.

ஒரு மருத்துவ நெருக்கடிக்காக கனடாவில் இருக்கும் மருத்துவ மனைக்கு போவதனால் எதுவும் விரைவாக நடந்து விடுவதில்லைத்தான். ஒரு உடனடி அறுவைச் சிகிச்சைத் தேவை போன்றவற்றைத் தவிர எதுவும் அங்கு விரைவாக நடக்காது. ஒரு இதய நோாயளிக்கும் உடனடி கவனிப்பு இருக்கும். அவர் எவ்வளவு தூரம் நெருக்கடியில் இருக்கிறார் என்பதனைப் பொறுத்து அந்த உடனடியும் என்பது அமையும்.

இப்படி நெருக்கடி நிலைக்காக இருக்கும் நிலையில் எவ்வகையான நோயாளியையும் பார்க்கப் போகும் போது மருத்துவ மனையில் என்ன செய்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

ரொரன்ரோவின் பல மருத்துவ மனைகளில் நெருக்கடி நிலையில் இருக்கும் நோயாளியைப் பார்க்க ஒரு ஆளைத்தான் உள்ளே உடன் அனுப்புவார்கள். தேவையானால் ஓர் மொழிபெயர்ப்பாளரையும் உள்ளே விடுவார்கள். நெருக்கடி நிலை மருத்துவத்திற்காக வந்திருக்கும் ஒருவரைப் பார்க்க இரண்டு பேருக்கு மேல் யாரையம் உள்ளே அனுமதிப்பதில்லை.

இது மருத்துவமனையில் இருக்கும் இட நெருக்கடி காரணமாகவும் மருத்துவமனையில் சில கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்தவும் தேவையாயிருக்கின்றது என்கின்றனர்.

இப்படியிருக்கும் நிலையில் நெருக்கடி மருத்துவத்திற்கு வந்திருக்கும் நோயாளியைப் பார்க்கப் போயிருக்கும் உறவினர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது குறித்து அறிந்து வைத்திருப்பது தேவையானதே!

இதற்கெல்லாம் இறுக்கமான விதிகளை வைக்க முடியாதுதான். ஆனால் நோயாளியையும் அவருக்குரிய நேயையும்பொறுத்து நாங்கள் எங்கள் பொது அறிவைப் பயன்படுத்த வேண்டியது தேவை.

ஒரு தடவை நெருக்கடி மருத்துவத்தில் இருந்த படுகாயப்பட்ட நோயாளியைப் பார்க்க வந்தபெற்றோர் அறைக்குள் புகுந்து அவரின் மேல் விழுந்து அழுவதைப் பார்க்க முடிந்தது. படுகாயப் பட்டிருப்பவருக்கு காயம் ஆறுவது முக்கியமா? அல்லது பார்க்கப்போகும் நாங்கள் அவரின் மேல் விழுந்து புரண்டு அழுவதை அமைதிப்பது வது தேவையா? இவ்வாறு புரண்டு காயப்பட்ட அவர்மேல் விழுந்து அழுவதால் காயப்பட்டவர் மேலும் பாதிப்பக்கப்படுவாரேயன்றி அவருக்கு குணம் வருவது கடினம் என்றாகிவிடும்.

ஒரு நெருக்கடியான மருத்துவத்தேவை எவருக்கும் வரக்ககூடாது என்பதே எங்கள் அனைவருடையவும் விருப்பம். ஆனால் அவ்வாறு ஒரு நிலை வந்தால் நோயாளியை எவ்வாறு அவ்விடத்தில் அணுகுவது என்பது நாங்கள் யோசித்து, ஊகித்து, பொது அறிவைப் பயன்படுத்தி, அறிந்து, வைத்திருக்க வேண்டியது தேவையாகும்.

இதே போன்ற மற்றோரு நிகழ்வு அண்மையில் நடந்தது.
மத்திய வயதில் ஒருவருக்கு இதயப் பகுதியல் நோவு என்று நெருக்கடி நிலை மருத்துவப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவருடைய பணியிடத்தில் இருந்து தகவல் சென்ற திசையில் அவரை அண்டியவர்கள் பார்க்கச் சென்றார்கள். அவருக்கு ஒவ்வொரு சிகிச்சையாக நடந்து கொண்டிருந்தது. மருத்துவர்கள் பல்வேறு சோதனைகள் செய்து ஒரு முடிவைக் காண முயன்று கொண்டிருந்தார்கள்.

நோயாளி இதய நோய் அறிகுறி உள்ளவர் என்பது நினைவில் இருக்கட்டும்.

இன்நிலையில் ஏறக்குறைய 5 மணி நேரம் கழித்து அவரது மனைவியும் அவர் வாடகைக்கிருந்த வீட்டுக்காரரும் மருத்துவ மனைக்கு வந்தார்கள். மனைவியாவது பரவாயில்லை. அவரின் வாடைகை வீட்டுக்கார் அழுத அழுகை இருக்கிறதே

அது, சாரி... கொஞ்சம் ஓவர் என்று எண்ணும் வகையாக இருந்தது.

முதலாவது ஒரு நெருக்கடி நிலை மருத்துவ சூழலுக்கு வாடைகைக்கு வீடு வழங்கியவர் வரும் எவ்வித தேவையும் இல்லை. அவ்வாறு வந்தாலும் வந்து நிதானமாக ஒரு விசாரிப்புடன் சென்றுவிடுதே நன்மை.

தாங்கள் கூட்டி வந்திருக்கும் நோயாளியின் மனைவியையும் அழுகைக்கு உள்ளாக்கி தாங்களும் அழுது நாடகமாடுவதில்.. அல்லது அழுவதில் நோயளிக்கு என்ன நன்மை ஏற்படும்?

ஏற்கெனவே இதய நோயாளியான அவர் மேலும் பாதிக்கப் படுவதைத்தவிர ஏதாவது நடக்குமா?

இதயநோய்க்கான கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தது. அந்த நிலையில் இருந்த நோயாளியின் இதயத்துடிப்பு வேகமும் சுவாச வேகமும் அதிகரித்ததையும் இதயத்துடிப்பு வரைவு மாறுபட்டதையும் அந்த நேரம் என்னால் அவதானிக்க முடிந்தது.

இதுவே ஓர் மிகவும் பாதிப்புள்ள நிலையில் இருந்த இதய நேயாளியான நிலையை யோசித்துப் பாருங்கள்? அவருக்கு உயிராபத்து வரை ஏற்பட்டிருக்கும்!

இப்படியான இடத்தில் மனைவியாயிருப்பினும் அழுகை போன்ற தமிழர்களின் ஆர்ப்பாட்டமான உணர்வு வெளிக்காட்டல்களை அடக்கிக்கொண்டு பக்குவமாக நிதானமாக நடந்துகொள்ளவேண்டும்.

எம் தமிழர் பலரும் இவ்வாறான பல சூ(கூ)ழ்நிலைகளை அடிக்கடி எதிர்கொள்ளுகின்றனர்.

அவ்வச் சூழல்களை ஒப்புநோக்க தங்கள் நடவடிக்கையை தீர்மானித்துக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் நல்லது.


இந்த மேற்குறிப்பிட்ட நிகழ்வில் அந்த இதய நோயாளியும் சேர்ந்து அழுததுதான் உண்மையில் நடந்தது.

இதனால் யாருக்கு இலாபம்.

நெருக்கடி நிலை வைத்தியம் என்பது ஒருவர் குணமடையத் தேவையானது. அங்கு எமது தேவையற்ற நடவடிக்கைகளால் ஒருவரின் உடல் நலத்துக்கு கேடு விளைவித்து அதனால் அவர்களின் உயிருக்கு தீங்க விளைவிக்கும் வண்ணம் நடக்காது எச்சரிக்கையாய் இருப்போம்.


நெருக்கடி நிலை என்பது பார்வையாளருக்கல்ல, நோயாளருக்கு என்பதை நினைவில் வைப்போம்.

■ ■ ■



# வீடு வாங்கவும், விற்கவும்...


## Bayview/Steeles



**$424,800**

**Listed for $424,800 & Sold for $448,000 in 9 Days**

## Bathurst/King



**$599,900**

4 Bedrooms, 4 Washrooms
75K For Premium Lot Backing Into Greenbelt. Over 50K In Upgrades:9' Ceiling, Custom Dbl Door, Granite Counter Top In Kitchen & W/Room, Stone Fronting, Hdwd Flrs

## Markham/Steeles



**$549,900**

4 Bedrooms, 4 Washrooms
mmaculate 7Yr Old All Brick, Remington Home, Double Door Entry, 9' Ceiling, Steps To Jr & Sr Schools, Mins To Mall , Parks, Hwy 407 & 7, Ttc

## Morningside/Finch



**$488,000**

4+2 Bedrooms, 5 Washrooms
Gorgeous Detached House,Approx 3,000 Sq. Ft.,Bsmt Finished W/ Separate Entrance,9' Ft Ceilings On Main Floor,Dbl Door Entrance,Oak Stairs,Upgraded Pickets,Gas Fireplace, Decorative Columns

## Torbram/Sandalwood



**$359,900**

3 Bedrooms, 3 Washrooms
3 Years New! Approx 2000 Sqft By National 'Oberon' Model, Separate Ent.To Bsmt & Dir. Access To Garage


## Bathurst/Steeles



**$449,900**

3 Bedrooms, 4 Washrooms
In The Heart Of Rosedale North!Bright 2 Storey Home Perfect For Entertaining. Spacious Dream Kitchen With Walkout To A Fenced In B/Yard, Walk To Synagogues, Schools, Transit, Parks


## Morningide/401



**$445,800**

4 Bedrooms, 3 Washrooms
Quality Home Built By Lakeview Homes, The Summit Model, Boasts Nine Feet Ceiling In Main Floor, Cathedral Ceiling In Living Room ,Oak Stairs, Stainless Steel Appliances, Natural Finished Hardwood Parquet In Main Floor

## Sheppard/Brimley



**$438,000**

3 Bedrooms, 3 Washrooms
Stunning Bright Backsplit On Pie Shaped Lot. Elegant Liv & Din Rooms W/Gleaming Hardwood Floors. Sunny Eat-In Kitchen W/2 Skylights & Bay Window. Spacious Family Room

## Bur Oak/Markham



**$294,500**

3+1 Bedrooms, 3 Washrooms
New Location & Brand New!Never Lived In Stacked Townhouse In Heart Of Markham! Built By Daniel's Homes!Lge Den In Main Flr Can Be Used As Family Room.Walk To All Schools, Near Go, Malls, Medical, Shops, Dentist,Stouffville Hospital

## Neilson/McLevin



**$239,900**

3 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers! Immaculate Well Kept 3 Bedroom Detached 2 Storey, Situated In A Quiet Neighbourhood Across From The Park

## Kennedy/14th Ave



**$799,900**

4 Bedrooms, 5 Washrooms
Fabulous Excutive Custom Built! ide Entrance To Yard, Finished Bsmt With 2nd Laundry Room, Oak Circular Staircase, Moulding, Dbl Skylites, Granite Kitchen, Foyer & Hallway Flrs, French Doors, Pot Lights Throughout House, Marly Roof

## Meadowvale/Sheppard



**$209,500**

3 Bedrooms,2 Washrooms
Bright & Lovely South Facing Townhome In A Great Compound!Open Concept Layout, Eat-In Kitchen With Walk-Out To Patio, Loft-Like Family Area-Can Be Used As Master Bedroom. Lots Of Storage Space, Lane Access To A Detached Garage



**NO**
- Pressure
- Commitment
- Cost

**Ganesh Thangarajah**
Salesperson

Dir: **416-994-9046**
Bus: 416.284.4751
880 Ellesmere Road. Suite 203
Scarborough. On

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Mr.Creations 416-548-7444

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborough, ON

BUY AND SELL HOMES AND BUSINESS
BUSINESS FOR SALE
Well Established Llbo Pizza Restaurant. Good Traffic. Next To Rbc, Cibc, Value Village, Florist, Offices, Schools & High-Rise Apartments. Steady & Repeat Clientele
MARKHAM
3Bdrm
CL TO SCHOOL SHOPING
ALL AMENITIES
$324 900
HIRING NEW / EXP REAL ESTATE AGENT JOIN THE WINNING TEAM AND BECOME
TOP PRODUCERS
Commercial ...
land...
..100 + Acres
Farm land
.build your
dream home
PAT PUSHPAKANTHAN
Broker of Record/Owner
OFF: 416 493 2100
Dir: 416 894 1187
Or 416 490 SOLD
Century 21
Brokerage
Professional Choice REALTY INC.
200 Consumers Rd Suite 410, TORONTO, ONT.
*EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY
*Based on your yearly sales
*BY INDIVIDUAL PERFORMANCE
TOP PRODUCER
5 YEARS
EXPERIENCE!
TOTAL COMMISSION SOLUTION 2.5%**

# நில அதிர்வுகளிலிருந்து தப்பிக்க புதிய வீடு




கிரேக்க நாட்டின் மலைப் பகுதியல் அடிக் கடி வரும் நில அதிர்வுகளிலிருந்து தப்பிக்க புதிய வீடமைப்பு கட்டுமான உத்தி பரிசோ திக்கப்படுகிறது.

அதன்படி இந்த வீடுகள் தமாகவே நிமிர்ந் துகொள்ளும். அதாவது புவியதிர்வினால் நிலைகுலையாது அதிர்வு முடிந்தவுடன் நிமிர்ந்து நின்று கொள்ளும் வகையில் இந்த வீடுகள் கட்டடப்படுகின்றன.

இதற்கு நனோ தொழில்நுட்பம் என்னும் புதிய உத்தி கையாளப்படுகிறது. நனோ தொழில் நுட்பம் என்பது பெரிய அளவில் கட்டுமானங்களைச் செய்யாது சிறிய, அணு வுக்கு அடுத்த நிலையில் உள்ள மூலக் கூறுகள் எனப்படும் பருப்பொருட்களைக் கொண்டு கட்டமைப்பதாகும். அப்படி நுண் ணியதாக இருப்பதனால் அவை உடை யாது. இதற்கு இந்த வீட்டில் பாலிமர் என்னும் வகை நுண்பொருட்கள் கையாளப் படுகின்றன.

இந்த கட்டுமானத் திட்டம் ஐரோப்பிய ஒன்றி யத்தின் பண உதவியுடன் நடைபெறுகிறது.

இந்த வீட்டில் சிறப்பாக அமைக்கப்பட்ட தகவல் சேகரிப்பு நுண் கருவிகள் அதிர் வுகள், வெப்பம், நீர்ப்படிப்பு போன்றவற்றை கண்காணித்து பாதிப்பு வரும் நேரத்தில் வீட்டின் கட்டுமானத்தை தயார்ப்படுத்தும் என்கிறார்கள்.

பலார்ட் என்கின்ற (J.G. Ballard) பிரித்தா னிய எழுத்தாளரின் The Thousand Dreams of Stellavista கதையில் கற்பனையாக வரும் மன எண்ணங்களுக் கேற்ப



மாறுகின்றதாக இந்த வீடு இருக் கிறது.

செய்தியாக வாசிக்கவே முடியாதளவு கற்பனையாக இருக்கும் இது உண்மையில் ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கிறது! நடைமுறைக்கு வரும்நாள் தூரத்தில் இல்லை.

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Factory & Quarry Direct
Importers & Manufacturers
KMB GRANITES of America Inc.
Custom Kitchen & Bath Manufacturers
Sinks and Faucets
Cabinets
Granite Countertops
Custom Kitchens
BEAT THE MIDDLEMAN - BUY DIRECT AND SAVE
FREE KITCHEN/ BATH DESIGN AND ESTIMATE - SHOP AT HOME WITH EXPERT CONSULTATION
Slate, Ceramic, Porcerlain, Hardwood, Laminate & Carpet - Cultured Marble, Granite & Onyx Vanities
Fareplace Surrounds, Kitchen Cabinets, Undermount Stainless Steel & Porcelain Sinks and Faucets
Counters & Flooring 416 332-0428
Kitchen & Bath 416 757-4554
One Stop Store for all your HOME IMPROVEMENT Needs...
2139 Lawrence Ave. East, Unit 2, Toronto, ON.